
ஞானச்சுடர்
சந்நிதியான் ஆச்சிரமம்
ஆவணி
2016
224 ஆவது மலர்
ஓம்
முருகா
வெளியீடு:
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

# குறள் வழி



**எனைப்பகை யுற்றாரும் உய்வர் வினைப்பகை**
**வீயாது பின்சென் றடும்.**

**பொருள் :** எவ்வளவு பெரிய பகையைப் பெற்றவரும் அப்பகையினின்று தப்புவர்; தீவினையாகிய பகை ஒருவனை விடாது தொடர்ந்து கொல்லும். (207)

**தீயவை செய்தார் கெடுதல் நிழல்தன்னை**
**வீயா தடியுறைந் தற்று.**

**பொருள் :** பிறர்க்குத் தீவினைகளைச் செய்தார் தாங்கெடுதல், ஒருவன் நிழல் அவன் நெடுந்தூரம் போனவிடத்தும் அவனை விடாது வந்து அடியில் தங்கிவிட்டது போன்றது. (நிழல் இடை விடாது தொடர்ந்து வருவதுபோல ஒருவன் செய்த தீவினை அவனை இடைவிடாது தொடரும். (208)

---

# நற்சிந்தனை

## மறப்பேனோ குருநாதன் தன்னை

### முத்தி நல்குமே

### ஓதுக அதுநாம் ஓம்தத் சத்ஓம்



சோடிழந்த வன்றில் சுகத்தைத்
தேடி யலையுஞ் செய்கை போல
நாடி யானு முன்னை யணுக
ஓடி வந்தரு ளுதவு வாயே
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 74

தந்தை தாயு மைந்தரும் பிறரும்
வந்த வாழ்வுமோ ரிந்திர சாலம்
அந்த மாதியு மில்லா வரனே
எந்த நேரமு மென்னைக் காக்குதி
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 75

தாவும் வேங்கை யுடையாய் சடையாய்
ஏவும் மார னெனைத்தொட ராமல்
கூவு மென்குரல் கேட்டி ரங்குதி
தாழ்வும் வாழ்வும் இல்லாச் சம்புவே
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 76

# ஞானச்சுடர்



வெளியீடு:

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை

உ

# ஞானச்சுடர்

வெளியீடு - 2 சுடர் - 224

2016 **பொருளடக்கம்** ஆவணி


| | | |
|---|---|---|
| விநாயகப் பெருமான்... | கு. சிவபாலராஜா | 01 -04 |
| திருச்சதகம் | சு. அருளம்பலவனார் | 05 -07 |
| கிராமியத் தெய்வ வழிபாடு | கு. சோமசுந்தரம் | 08 -09 |
| மேற்குலகில் திராவிடக்... | மு.க. மாசிலாமணி | 10 -13 |
| திருவருட்பயன் | ஆ. ஆனந்தராசன் | 14 -17 |
| முருகனை வணங்குவோம் | செல்வி பா. வேலுப்பிள்ளை | 18 -21 |
| பகவத்கீதையின் உலகம்... | பூ. சோதிநாதன் | 22 -24 |
| இறைவனும் உலகமும்... | திருமதி ந. பரமேஸ்வரி | 25 -27 |
| நித்திய அன்னப்பணி | சந்நிதியான் ஆச்சிரமம் | 28 -29 |
| அதிசயம்! ஆனால் உண்மை | சி. ஆறுமுகானந்தன் | 30 -31 |
| விதுரநீதி | இரா. செல்வவடிவேல் | 32 -34 |
| காலனைக் காலால்... | எம்.பி. அருளானந்தன் | 35 -36 |
| கண்டோம் கதிர்காமம் | அன்னைதாசன் | 37 -38 |
| கந்தசஷ்டி விரதம் | நா. நல்லதம்பி | 39 -41 |
| படங்கள் தரும் பதிவுகள் | சந்நிதியான் ஆச்சிரமம் | 42 -43 |
| சித்தர்களின் ஞானம் | சிவ. மகாலிங்கம் | 44 -48 |
| சுந்தரர் செந்தமிழ் | அ. சுப்பிரமணியம் | 49 -53 |
| ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய... | தொகுப்பு | 54 -55 |
| கிருஷ்ண பகவானும்... | ஆர்.வீ. கந்தசுவாமி | 56 -57 |
| மலேசியப் பயணத்தின்... | செ. மோகனதாஸ் சுவாமிகள் | 58 -60 |



வருட சந்தா: 500/= (தபாற் செலவுடன்)

**சந்நிதியான் ஆச்சிரம**

**சைவ கலை பண்பாட்டுப் பேரவை**

தொலைபேசி இலக்கம்: 021 321 9599, 021 226 3406

அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்

# ஞானச்சுடர்
# ஆடிமாத வெளியீடு

## வெளியீட்டுரை:

ஞானச்சுடர் 223ஆவது மலருக்குரிய வெளியீட்டுரையினை பல்கலைக்கழக மாணவி



செல்வி தயாளினி குமாரசாமி அவர்கள் ஆற்றியிருந்தார்கள். பல்கலைக்கழக மாணவியாக அவர் இருந்தாலும் அவர் ஆற்றிய உரையானது சமூக விழுமியங்களுடன் கூடிய உரை யாக அமைந்திருந்தமையையிட்டு சபையில் இருந்த அடியார் கள் அனைவரும் அவரது உரையை வரவேற்றார்கள்.

அதனைத் தொடர்ந்து ஞானச்சுடர் மலர் வெளியீட்டுரையில் ஆச்சிரமம் ஆற்றும் பணிகள் பற்றிய கருத்துக்களைக் கூறிய தோடு முதன்முறையாக இம்மலர் வெளியீட்டில் பங்குபற்றி யதையிட்டும் சந்நிதி வேலவனுக்கு நன்றிகூறி தனது வெளி யீட்டுரையினை நிறைவு செய்தார்.

## மதிப்பீட்டுரை:

ஆடிமாத மலருக்குரிய மதிப்பீட்டுரையினை சைவப்புலவரும் ஆசிரியையுமாகிய திருமதி சசிலேகா ஜெயராஜன் அவர்கள் மேற்கொண்டிருந்தார்.



அவர் தமது மதிப்பீட்டுரையின்போது ஆச்சிரமம் ஆற்றும் சகல பணிகளிலும் தலையாயது மாதந்தோறும் வெளியிடப்படும் ஞானச்சுடர் மலர் வெளியீடேயாகும். ஒருவித தடங்களுமின்றி 223 மாதகாலம் 223 மலர் வெளிவந்திருக்கின்றது என்றால் அது மனிதரால் செய்யக்கூடிய காரியமா? சந்நிதி வேலவனது பூரணமான அருள் ஆச்சிரமத்தில் அலைவீசுகின்றமையால்த் தான் இவ்வகைச் செயற்பாடுகள் எளிதாக நிறைவேறுகின்றது.

இத்தகைய அருளாட்சிக்குள் நாமும் உள்வாங்கப்பட்டதனால்த் தான் ஆச்சிரமத்தில் நடைபெறும் இவ்வகையான செயற்பாடு களில் கலந்துகொள்ள முடிகின்றது என்று கூறியதோடு மலரில் இடம்பெற்ற ஆக்கங்களின் தன்மைபற்றி சபையில் உள்ள அடியார்களுக்கு எடுத்துக்கூறி தனது மதிப்பீட்டுரையினை நிறைவு செய்தார்கள்.

# சுடர் தரும் தகவல்

"கோவில் இல்லா ஊரிற் குடியிருக்க வேண்டாம்" என்பது எமது முன்னோர் வாக்கு. அதற்கமைவாக யாழ்குடா நாட்டைப் பொறுத்தவரையில் இருக்கின்ற ஒவ்வொரு சிறு சிறு கிராமங்களில்கூட தத்தமது இயல்புக்கேற்ற வகையில் மரத்தடியிலோ, அல்லது அதற்கென்று ஒதுக்கப்பட்ட இடங்களிலோ சிறு சிறு ஆலயங்கள் அமைத்து அதனைச் சூழ மக்கள் குடியிருப்புக்களையும் அமைத்து ஆலய வழிபாட்டை இயற்றி வந்தனர்.

காலப்போக்கில் அந்த ஆலயங்கள் எல்லாம் வளர்ச்சிபெற்று வழிபாட்டில் சிறந்து விளங்குவது கண்கூடு. அதேபோன்று ஆலயத்தைச் சார்ந்த பிரதேச மக்களும் ஆலய வளர்ச்சியில் முன்நின்றுழைப்பது போற்றப்பட வேண்டியதே. இவ்வகைச் செயற்பாட்டில் பல ஆலயங்கள் முன்னிலைப்பட்டு விளங்குகின்றது. அவற்றில் ஒன்றுதான் ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலயமாகும்.

வடமராட்சிப் பிரதேசத்தின் ஒரு கரையில் மூர்த்தி, தலம், தீர்த்தம், தலவிருட்சம் என்ற பெருமைபெற்று விளங்குவது செல்வச்சந்நிதி ஆலயம். நல்லூர்க் கந்தனை அலங்காரக் கந்தனென்றும் மாவிட்டபுரக் கந்தனை அபிஷேகக் கந்தனென்றும், கதிர்காமக் கந்தனைக் காவடிக் கந்தனென்றும், சந்நிதிக் கந்தனை அன்னதானக் கந்தனென்றும் அழைப்பது வழமை. அத்தகைய சிறப்பு வாய்ந்த அன்னக் கந்தனாக விளங்கும் செல்வச்சந்நிதி வேற்பெருமானுக்கு 01.09.2016 உற்சவதினம் ஆரம்பமாகி 16.09.2016வரை நடைபெற இருக்கின்றது. அன்னக்கந்தன் என்ற அடைமொழியைப் பெற்று அருள்பாலிக்கும் வேலவனின் இடத்தில் அன்னத்துக்குப் பஞ்சமிருக்காது. ஆலயச் சூழலில் பல மடங்கள், ஆச்சிரமங்களில் வழிபாட்டுக்கு வரும் அடியவர்கள் அனைவருக்கும் அன்னம் வழங்கும் செயற்பாடு வேறு எங்கும் காண முடியாத ஒன்று.

கந்தபுராணக் கலாச்சாரத்திற்கு பெயர் பெற்ற யாழ் மண்ணில் இவ்வகை ஆலய வழிபாட்டுக்கு வரும் மக்கள் ஆசாரசீலர்களாக வருகை புரிந்து சந்நிதி வேலவனது அருள் பெறுவதோடு எமது பாரம்பரிய வழிபாட்டு முறையினைப் பேணிப் பாது காப்போமாக.

# பாலகுமரா வாராய்

தொண்டைமா னாற்றூரில்
கோயில்கொண்ட முருகா
சுற்றிக்கட லலையேத்தித் தொழுதிட வாராய்
அண்டர்களின் சிறை நீக்கி
அரசேற்றி வைத்த
ஆறுமுகப் பெருமானே ஐயா எழுந்து வாராய்
பண்டுகதிர் காமர் போற்றும்
பரஞ் சுடரே வாராய்
பால்வடியும் முகமுடன்பன் னிருகையாய் வாராய்
வண்டமிழால் யான்பாட
நீ கேட்டு மகிழ
பாலகுமரா சந்நிதி பத்தர்முன்னே வாராய்

### வேறு – வரவேண்டும்

ஆடுமயி லேறிவிளை யாடிவர வேண்டும்
அரிய குயில் இசைபாட அன்பின் கிளி பேச
பாடியடி யவர்கூட்டம் பண்பாட வேண்டும்
பாவையர்கள் சுடரேந்தி வழிபடவும் வேண்டும்
தேடித் தேடி பாலினனீர் தினமாடி நீயே
திருப்புகழைக் கேட்டுப் பூசை செய்ய வேற்று மீண்டும்
நாடித் தேனும் தினைமாவும் நன்று படைத்தோம் உனக்கு
நற்கடம்பா வேலுடனே நயந்து வாராயோ? நீயே.

### ஞானச்சுடர் அடியெடுத்து வைக்கும்

தேவயானை அம்மையோடு வள்ளியம்மை பாங்காய்
சிவசுப்ர மணியகுகா ஆச்சிரம திருவை வேலுடனே
ஆவலைச் சந்நிதியில் ஆச்சிரமச் சபையார்
அன்னமுடன் செய்தொண்டைப் பார்க்கவர வேண்டும்
தேவர்கள் போலன்னவர்கள் செய்தொண்டிற் சிறந்த
திரு ஞானச் சுடரின்று பதினெட்டாம் ஆண்டில்
பாவியடி வைத்து நடைபோடுவதைப் பார்த்து
பயனுறவே நீ வாழ்த்திப் பாராட்டவே வா வா.

-அமரர்: முதுபெரும்புலவர் வை.க. சிற்றம்பலம் அவர்கள்-

# ஆவணிமாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

**A. ஆனந்தகுமார்**

(லண்டன்)

**Dr. G. பவானி**

(மகப்பேற்று நிபுணர், யாழ்ப்பாணம்)

**உரிமையாளர்**

(மதுரா நகைமாடம், யாழ்ப்பாணம்)

**Dr திருமதி பத்மராணி குகானந்தன்**

(பல்வைத்திய நிபுணர், அச்சுவேலி)

**S.S. ரஜீந்திரன்**

(நீர்வேலைப்பகுதி, மாநகரசபை, யாழ்ப்பாணம்)

**சி. சிவமூர்த்தி**

(ஸ்ரீ சிவாஞ்சனா நகைமாளிகை, யாழ்ப்பாணம்)

**அ. சிவகுமார்**

(யாழ்ப்பாணம்)

**A. நாகரெத்தினம்**

(கஜானன் அரைக்கும் ஆலை, நீர்வேலி)

**இ. குமாரசாமி J.P.**

(ஆசிரியர், பத்தமேனி, அச்சுவேலி)

**பொ. குமாரசாமி**

(சட்டத்தரணி, நவிண்டில்)

**திருமதி கௌரி சுரேசன்**

(ஆசிரியர், ஆவரங்கால்)

**செ. கந்தசாமி**

(வங்கியாளர், சண்டிலிப்பாய்)

**நா. சிவசிதம்பரம்**

(கோணாவளைலேன், கொக்குவில்)

**இராசையா தங்கவேல்**

(அச்சுவேலி)

**S. அருளையா**

(கொழும்பு)

**ச. பத்மநாதன்**

(தெற்குத் தோப்பு, புத்தூர்)

**சி. சிவயோகநாதன்**

(விக்னேஸ்வரா வீதி, கரணவாய்)

**தே. தேவராஜேந்திரன்**

(திகிரி லேன், தும்பளை)

**பொ. நாகலிங்கம்**

(கெருடாவில் தெற்கு, தொண்டைமானாறு)

**முத்து கணேஷ்**

(மஞ்சத்தடி, இணுவில்)

**K. கஜமுகன்**

(இராசவீதி, நீர்வேலி)

**செ. சிவலிங்கம்**

(மலர் வசந்தம், இணுவில்)

**N. ஜெயரட்ணராசா**

(பண்ணாகம், சுழிபுரம்)

**சி.து. கலைச்செல்வம்**

(பரமானந்தி அம்மன் கோவிலடி, இணுவில்)

**வ. ரவிச்சந்திரன்**

(நல்லூர், யாழ்ப்பாணம்)

**வை.ச. பரஞ்சோதி**

(சோதி ஸ்ரோர்ஸ், கோண்டாவில்)

**ச. ஸ்ரீவிவேகானந்தராசா**

(கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்)

**சீ.சி. கந்தையா (பலாலி)**

(ஆவரங்கால்)

**மு. முருகதாஸ்**

(சிறுப்பிட்டி தெற்கு)

**T. தியாகலிங்கம்**

(இராமையாச் செட்டியார் வீதி, யாழ்ப்பாணம்)

**S. K. பஞ்சாட்சரம் ஆச்சாரியார்**

(மானிப்பாய் தெற்கு)

**இ. தயாபரன்**

(கோண்டாவில்)

**S. சாம்பவி**

(யாழ்ப்பாணம்)

**சிவபாதம் முருகதாஸ்**

(வட்டுக்கோட்டை)

**த. புவனேந்திரன்**

(அந்திரானை, ஈவினை)

**ஆ. விநாயகமூர்த்தி**

(சாளம்பை, கரணவாய் மத்தி)

**ப. திருக்குமரன்**

(அமுதசுரபி, கட்டுடை)

**சி. நவரெத்தினம்**

(ஆனந்தா வீதி, மானிப்பாய்)

**சி. சுப்பிரமணியம்**

(சமரபாகு, உடுப்பிட்டி)

**சிறி மாதவன்**

(கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்)

**ந. பொன்னுத்துரை**

(தொம்பை வீதி, உடுவில்)

**ச. திவாகரன்**

(உரும்பராய் மேற்கு)

**க. சச்சிதானந்தன்**

(சந்தை வீதி, உடுப்பிட்டி)

**நா. மகேந்திரராசா**

(பிறேம மகால், வல்வெட்டி)

**சு. சிவராசா**

(கொக்குவில்)

**வ. சிவலிங்கம்**

(குருபரன் தொலைத் தொடர்பு நிலையம், கரவெட்டி)

**கா. அருளானந்தன்**

(அராலிவீதி, சங்கானை)

**பத்மநாதன் குணசுந்தரி**

(ஆதிகோயிலடி, வல்வெட்டித்துறை)

**ஆசைப்பிள்ளை சுப்பிரமணியம்**

(அச்சுவேலி)

**வே. இராஜேந்திரா**

(ஆவரங்கால்)

**ச. மார்க்கண்டு**

(ஊரெழு மேற்கு)

**திருமதி கமலஹாசன் மஞ்சுளா**

(வல்வெட்டி)


# விநாயகப் பெருமான் எங்கள் நாயகர் காணீர்

- திரு கு. சிவபாலராஜா அவர்கள் -

"மின்னெறி சடாமுடி விநாயகர் அடி தொழ
நன்னெறி வெண்பா நாற்பதும் வருமே"

"மண்ணுலகத்தினில் பிறவி மாசற
எண்ணிய பொருளெலாம் எளிதின் முற்றுறக்
கண்ணுதல் உடையதோர் களிற்று மாமுகப்
பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவாம்"

-கந்தபுராணம்.



எந்தக் கருமமும் செய்யத் தொடங்குமுன் முன்னதாகத் துதிக்கப்படும் விநாயகப் பெருமானது அருட்கடாட்சமானது நம் அனைவர்க்கும் கிடைக்க வேண்டுவது அவசியம். இப்பிரபஞ்சத் திற்குக் கருத்தா சிவபெருமான். அவர் தாங்கிய மூர்த்தங்கள் சிவசக்தி, விநாயகர், பைரவர், வீரபத் திரர், சுப்பிரமணியர் என்போர். இந்த மூர்த்தங்கள் அனைத்தும் சிவபெருமானே. வழிபடும் அடியார் களின் வினைகளை வேரோடு இல்லாமல் செய் பவர் விநாயகர். விநாயகப் பெருமானைத் தனது குலதெய்வமாக வழிபடுபவர்கள் பலர். அதற்குரிய நற்பலன்களைப் பெற்று வருகின்றனர். "பிள்ளையார் சுழி" என்பது, ஒலி வடிவமாகிய "o"வும், வரி வடிவமாகிய கோடும் சேர "உ" என வடிவம் பெற்று பிள்ளையார் சுழியாகின்றது. பிள்ளையார் சுழி இட்டு எக் கருமத்தையும் தொடங்கினால், அக் கரும பலன் நிறைவேறும். விநாயகரின் வடிவம் ஓங்கார வடிவம், அவ்வடிவ எழுத்து மருவிப் பிள்ளையார் சுழியாயிற்று. சக்தியையும் சிவனையும் வேண்டி இடப்படும் சுழி பிள்ளையார் சுழியாகும். ஒலி வடிவம் நாதம் என்றும், வரி வடிவம் விந்து என்றும் கூறப் படுகின்றது. உயிரும் உலகமும் உண்டாக இவ்விரண்டும் வேண்டும். பிள்ளையாரின் வடிவம் ஒரு விந்தையான வடிவம். யானைத் தலையும், பெரு வயிறும், மனித உடலும், ஐந்து கைகளும் (ஒரு கை தும்பிக்கை) கொண்ட உருவமே பிள்ளையார். இரு பக்கமும் கொம்புகள் உள்ளவர். ஒரு கொம்பு ஆண் தன்மையையும், மற்றையது பெண் தன்மையையும் குறிக்கும். பிள்ளையார், தேவராய், மனிதராய், விலங்காய், ஆணாய், பெண்ணாய் விளங்கும் அற்புதம் காணலாம். உலகங்கள் அனைத்தையும் தம்முள் அடக்கியிருப்பவர் விநாயகர்

*தேவைப்படும்போது தன் முடிவை மாற்றிக்கொள்ளத் தெரிந்தவன்தான் அறிவாளி.*

என்பதைக் குறிக்கவே அவர் தொந்தி வயிற்றினைக் கொண்டு விளங்குகிறார். விநாயகரின் துதிக்கை வலப்புறம் வளைந்து திரும்பியிருந்தால் "வலம்புரி" விநாயகர் என்பதைக் குறிக்கும்.

விநாயகர், கணபதி, பிள்ளையார், லம்போதரர், விக்கினேஸ்வரர், விநாயகமூர்த்தி எனப் பல பெயர் கொண்டவர். அவர், "கயமுக அசுரனைச்" சங்காரம் செய்தபோது தனது ஒற்றைக் கொம்பினை முறித்து கையிலேந்தினார். இதனால் ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களையும் நீக்குபவர் தான் என்பதை உலகிற்குணர்த்தினார். ஆணவ மலமென்னும் யானையை, பாசம் என்னும் கயிற்றினால் கட்டி, அங்குசத்தால் அதை அடக்கி, மறைத்தல் என்னும் தொழிலைச் செய்பவர் விநாயகப் பெருமான்; என்பதை உணர்த்தவே இவ்வாறு உருவெடுத்து அருள் புரிகின்றார். கயமுகன் மலங்கள் அழிந்து பெருச்சாளி வடிவெடுத்து வந்ததும், விநாயகர் அப் பெருச்சாளியை தனது வாகனமாக்கினார். சிவனுக்கும், உமைக்கும் மூத்த மகன் விநாயகப் பெருமான். பிள்ளை என்பதும் மகன்தான். "பிள்ளையார்" என்பது தலைசிறந்த மகன். பிள்ளைகளுக்கெல்லாம் பிள்ளை, மூத்த மகன் பிள்ளையார் என்பன அதன் கருத்துக்கள். ஓங்கார ஒலியின் வடிவமே பிள்ளையார், அகரம், உகரம் இரண்டும் சேர்ந்து ஓம் என்னும் ஓங்கார ஒலி பிறக்கின்றது. ஓங்கார ஒலி இறைவனை உணர்த்தும் சொல்.

வடமொழியில் பிள்ளையார் பெயர் "விநாயகர்". "விநாயகர்" என்பது தனக்கு வேறு தலைவர் இல்லாதவர் என்பது கருத்து. விநாயகர் ஒப்பாரும் மிக்காருமற்ற தலைவர் என்பதும் பொருள். தீவினைகள் எம்மை அணுகாமல் இருப்பதற்கு நாம் பிள்ளையாரை வழிபடுகிறோம். புலன்வழி வரும் துன்பங்கள், துயரங்கள், இடையூறுகள், அச்சங்கள், ஆபத்துக்கள் வரும்போது நாம் பிள்ளையாரையே நினைக்கின்றோம். எந்தச் செயலிலும் ஈடுபடுமுன் பிள்ளையாரை வழிபட்டுத் தொடங்கும் வழக்கம் நம்மிடையே உண்டு. அகத்திய முனிவரின் கமண்டலத்திலிருந்து பெருகிய நீரைக் காவிரியாகக் கண்டோம். இக் கதையில் பிள்ளையாரே காக வடிவெடுத்து அகத்திய முனிவரின் கமண்டலத்தைக் கவிழ்த்து காவிரியாற்றை உண்டாக்கினார். அகத்தியர் காகத்தை விரட்டினார். காகம் சிறுவனாக வடிவெடுத்து ஓடினார். அகத்தியர் சிறுவனைத் துரத்திக்கொண்டு ஓடினார். சிறுவன் தன் சுயவடிவான பிள்ளையார் வடிவம் தாங்கியதும், பின்னர் அகத்தியர் பிள்ளையாரிடம் மன்னிப்புக்கேட்டு, தன் தலையில் குட்டிக் கொண்டதும் புராணக் கதையில் வருவன. இதிலிருந்துதான் நாம் பிள்ளையாரை வழிபடும்போது தலையில் குட்டிக்கொள்ளும் வழக்கம் உண்டானது. தமது தலைமீது குட்டி வணங்கும் அடியார்களுக்கு கூரிய அறிவினையும் சீரிய செல்வத்தையும் தந்து அவர்கள் இனிதே வாழ்வதற்கு அருள்புரிவதாக விநாயகப் பெருமான் கூறியருளினார். தேவர்கள் கயமுக அசுரனுக்குத் தோப்புக்கரணம் இட்டு வந்தனர். பிள்ளையார் அவ் அசுரனை அழித்துத் தேவர்களைக் காப்பாற்றினார். இதனால் தாம் அசுரர்களுக்கு இட்டுவந்த தோப்புக்கரணத்தைப் பிள்ளையாருக்கு இட்டு வணங்கும் முறை உருவானது. தேவர்கள் 1008 முறை (ஆயிரத்தெட்டு) தோப்புக் கரணம் இட்டனர். பிள்ளையார் தமக்கு மூன்று முறை தோப்புக்கரணம் இட்டால் அதுவே போதும் எனக் கூறியருளினார். அதிலிருந்தே தோப்புக்கரணம் (மூன்று முறை) இட்டு வழிபடும் வழக்கம் ஏற்பட்டது. "தோர்பி" என்றால் கைகள், "கர்ணம்" என்றால் காதைப் பிடித்துக் கொள்வது. எனவேதான், தோர்பிக்+கரணம்- தோப்புக்கரணம் என வழங்கியது.

*உண்மையை நேசி; பிழையை மன்னித்துவிடு.*

முனிவர்கள் அறுகம்புல் கொண்டு பிள்ளையாரை அர்ச்சனை செய்தனர். அதனால் "அனலாசுரனை" விழுங்கியதால், பிள்ளையாருக்கு ஏற்பட்ட வெப்பம் தணிந்து இருபத்தொரு (21) அறுகம் புற்களால் பிள்ளையாருக்கு முனிவர்கள் அர்ச்சனை செய்து வந்தனர். அதனால் பிள்ளையார் அவர்களை நோக்கி "எத்தனை நறுமண மலர்கள் கொண்டு என்னை அர்ச்சனை செய்தாலும், அறுகம்புல்லினால் செய்யும் அர்ச்சனை உங்களுக்கு மேலான பலன்களைத் தரும் எனப் பிள்ளையார் அருளினார். இயலாதவர்கள், ஒரு அறுகம்புல்லினா லாவது அர்ச்சனை செய்தாலும் அது மேலானது எனவும் கூறியருளினார். அறுகம்புல் இல்லாதவிடத்து "வன்னிமர" இலைகளால் பிள்ளையாரை அர்ச்சித்தல் சிறப்பானதாகும். வன்னி இலைகள் அறுகம்புல்லுக்குச் சமனான அர்ச்சனைப் பொருளாகும்.

வளர்பிறைச் சதுர்த்தி அன்று (நான்காம் பிறை) மக்கள் சந்திரனைப் பார்க்காது ஒதுங்குகின்றனர். அப்படி பார்க்க நேர்ந்தால், ஆவணிமாதச் சதுர்த்தியன்று விநாயகர் விரதம் அனுஷ்டிப்பது அவசியம். இதனால் சாப விமோசனம் கிடைக்கும். ஆவணிமாதச் சதுர்த்தி அன்றுதான் (வளர்பிறை) விநாயகர் திரு அவதாரம் செய்த தினம் என்று புராணங்கள் கூறுகின்றன. ஒவ்வொரு மாதமும் சதுர்த்தி வருகின்றது. ஆனால் ஆவணிச் சதுர்த்தி இவற்றுள் பிரதானமான (மிக) விரத தினமாகும். சதுர்த்தி நாளன்று விநாயகப் பெருமானை இருபத்தொரு (21) இலைகளால் அர்ச்சிப்பது சிறப்புடையது. அவை; வில்வம், கரிசலாங் கண்ணி, ஊமத்தை, துளசி, முல்லை, வன்னி, நாயுருவி, மாதுளை, தேவதாரு, மருவு, அரசு, ஜாதி மல்லிகை, தாழை, அகத்திக்கீரை, இலந்தை, வெள்ளறுகம்புல், கண்டங்கத்தரி, அரளி, எருக்கு, மருதை, விஷ்ணுகாந்தி ஆகியவற்றின் இலைகளே அவையாகும்.

விநாயகரின் நிவேதனப் பொருட்கள் பல. மோதகம், அவல், பொரி, கடலை, மாதுளம்பழ முத்துக்கள், மாம்பழம், தோடம்பழம், விளாம்பழம், வெள்ளரிப்பழம், நாவற்பழம் ஆகியவை அவற்றுள் சிறப்பிடம் பெறுவன. துளசி தவிர்ந்த மலர்கள் விநாயகப் பெரு மானுக்குப் பூசைக்கு உகந்தன. விநாயகருக்கு சகோதரர்களாக முருகன், ஐயப்பன், வீரவாகு, உமாதேவியாரின் காற்சிலம்பிலிருந்து தெறித்த நவரத்தினங்களில் உருவான நவ கன்னிகைகளின் பிள்ளைகள் ஒன்பதுபேர், இவர்களுடன் விநாயகரும் சேர எல்லாமாக பதின்மூன்று பிள்ளைகள் சிவனுக்குண்டு. இவர்கள் யாவரும் விநாயகரின் சகோதரர்களேயாம். விநாயகரின் மனைவியர்கள் சித்திதேவி, புத்திதேவி மற்றும் ஞான சக்தியான வல்லபை, மகாவிஷ்ணுவின் புதல்வியர்களான பன்னிருவர் ஆகியோர். மகன்மார் சித்திராங்கதன், புத்திராங்கதன் ஆகியோர் மாமன் மகாவிஷ்ணு. இருப்பிடம்; திருக்கைலாயத்தின் ஒரு பகுதியான ஆனந்த புவனம் மற்றும் ஆற்றங்கரை, குளக்கரை, மரத்தடி, முச்சந்தி இடம் முதலியனவாம் அவர் உறைவிடங்கள். விநாயகப் பெருமான் முப்பத்திரண்டு (32) வடிவங்கள் தாங்கியவர். அவை; யோக கணபதி, சிங்க கணபதி, மும்முகப் பிள்ளையார், துவிமுக கணபதி, துண்டி விநாயகர், ரணமோசனர், உத்தண்ட கணபதி, சிருஷ்டி கணபதி, ஏகதந்தர், ஹரித்திரா கணபதி, ஷிப்ரபிரசாதர், திரியாஷர கணபதி, வர கணபதி, ஏகாட்சர கணபதி, ஊர்த்துவ கணபதி, நிருத்த கணபதி, விஜய கணபதி, மஹா கணபதி, ஏரம்ப கணபதி, ஷிப்ர கணபதி, விக்ன கணபதி, உச்சிஷ்ட கணபதி, சித்தி கணபதி, துவிஜ கணபதி, சக்தி கணபதி, வீர கணபதி, ஸ்ரீ பக்தி கணபதி, தருண கணபதி, பால கணபதி, சங்கடகரர், துர்க்கா கணபதி, லட்சுமி கணபதி ஆகியவை அவரின் மூர்த்தி வடிவங்களாம்.

*நம்மிடமுள்ள குறைகளை நீக்கிக் கொள்வதே நமக்கு ஏற்படக்கூடிய பெரிய அதிஷ்டம்.*

விநாயகர் போசனப் பிரியர். அவரை எப்போது வழிபட்டாலும் பலவகைப் பட்சணங் களைப் படைத்து வழிபடுவது சிறப்பு. அவை கரும்பு, தேங்காய், மோதகம், சுண்டல், முக் கனிகள், விளாம்பழம், நாவல்பழம், தோடம்பழம் முதலியன நாம் படைக்கும்போது இடம்பெற வேண்டிய சில உணவுப் பொருட்கள். மோதகம் இவற்றுள் முக்கியமான உணவுப்பொருள் என்பதை அறிக.

"பாலும் தெளி தேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலந்துனக்கு நான் தருவேன்"

என்பது ஔவையார் வாக்கு.

மதுரை, சுசீந்திரம், திருச்செந்தூர், திருவண்ணாமலை முதலிய திருத்தலங்களில் மிகப்பெரிய விநாயகர் சிலைகள் உள்ளன. திருவண்ணாமலையில் உள்ள வடிவம் அவற்றுள் மிகப் பெரியது. விநாயகரின் பெரிய வடிவத்தை "முக்குறுணி விநாயகர்" என வழங்குவர். மோதகத்தைக் "கொழுக்கட்டை" என்றும் கூறுவர். தேங்காய் உடைத்தல் விநாயகருக்குரிய சிறப்பான வழிபாடாகும். சிதறு தேங்காய் உடைத்தல் இவற்றுள் முக்கியம். இது விநாயகருக்கு மட்டும் உரியது. சிதறு தேங்காய் அடிப்பதும், தேங்காயின் ஓடு உடைவதும் அகங்காரத்தின் முடிவைக் குறிப்பது.

விநாயகர் மகாபாரதம் எழுதினார். வேதவியாசர் பாரதம்பாட விநாயகர் வேகமாக அவற்றை எழுதினார். தனது ஞானமாகிய கொம்பினால் பாரதம் எழுதினார். "ஓம் கம் கணேசாயநம" என்பது விநாயகருக்கு உரிய மந்திரமாகும். இம் மந்திரத்தை உச்சரித்தால் எல்லாக் காரியங்களும் விக்கினமின்றி நிறைவேறும். கருங்கல், பொன், வெள்ளி, செம்பு, பளிங்கு முதலியவற்றால் செய்த விநாயகர் திருவுருவங்களையே வழிபடல் வேண்டும். மாக்கல்லினால் செய்த விநாயகர் உருவம் உகந்ததல்ல. மரத்தால் செய்த திருவுருவங்களை யும், ஓவியம் (சுவாமிப் படம் முதலியன) முதலியவற்றையும் மலர் இட்டு மட்டும் வழிபடலாம். வெள்ளெருக்கில் செய்த விநாயகர் திருவுருவம் வழிபாட்டிற்கு மிக உகந்தது. வெள்ளிக் கிழமை, சதுர்த்தி, மார்கழி வளர்பிறை சஷ்டி ஆகிய நாட்கள் விநாயகரை வழிபட உகந்த நாட்களாகும். இந்நாட்களில் உபவாசமிருந்து வழிபடல் வேண்டும். விநாயகர் கதைபடிப்பு இருபத்தொரு நாட்கள் தொடர்ந்து நீடிக்கும். இது மார்கழி மாதத்தில் வருவது. நெய்த்தீபம் இட்டு விநாயகரை வழிபடுதல் சிறப்பு. விநாயகருக்கு "பெருச்சாளி" வாகனத்தைத் தவிர வேறு வாகனங்களும் உண்டு. அவை சிங்கம், மயில், குதிரை, இடபம், யானை முதலியனவாம். ஆனால் இவற்றில் அமர்ந்த விநாயகர் வடிவங்கள் கோவில்களில் அரிதாகவே காணப்படுகின்றது. கலியுகத்தில் விநாயகரின் வாகனம் குதிரையாகும். ஏரம்ப கணபதி பஞ்ச முகங்களை (ஐந்து முகம்) உடையவர். விநாயகர் திருமணமானவர். விநாயகர் திரு மணம் ஆகாத "பிரம்மச்சாரி" என எண்ணுபவர்களும் நம் மத்தியில் உள்ளனர். விநாயகருக்குப் பிரியமான கனி மாம்பழம், மாதுளை முதலியன. பிரியமான பலகாரம் மோதகம். இந்தியா, இலங்கை நாடுகளில் மட்டுமன்றி விநாயகக் கடவுள் வழிபாடு வெவ்வேறு நாடுகளிலும், வெவ்வேறு பெயர்களிலும், வடிவங்களிலும் மற்றும் யாவா, போர்ணியோ (இந்தோனேசியா), தீபெத், பர்மா, சீயம், சீனா, யப்பான் முதலிய நாடுகளிலும் விநாயகருக்கு கோவில்களும், வழிபாடுகளும் உள்ளன. மஞ்சள் தூள், சந்தனத் தூள், பசுவின் சாணம் முதலியவற்றாலும் பிள்ளையார் பிடித்து வைத்து நாம் வழிபடலாம்.

*தன் கையே தனக்கு உதவி என்பவர்களுக்குத்தான் கடவுளும் உதவுகிறார்.*

# திருச்சதகம்

(தொடர்ச்சி...

## பத்திவைராக்கிய விசித்திரம்

(திருப்பெருந்துறையிலருளிச் செய்யப்பட்டது)

மறைந்த
– சங்கநூற் செல்வர் பண்டிதர் சு. அருளம்பலவனார் அவர்கள் –
(யாழ்ப்பாணம் – காரைநகர்)

### 2. அறிவுறுத்தல்

23. வேனில்வேள் மலர்க்கணைக்கும் வெண்ணகைச்செவ் வாய்க்கரிய
பானலார் கண்ணியர்க்கும் பதைத்துருகும் பாழ்நெஞ்சே
ஊனெலா நின்றுருகப் புகுந்தாண்டான் இன்றுபோய்
வானுளான் காணாய்நீ மாளாவாழ் கின்றாயே.

**ப.ரை:**

வேனில்வேள் மலர் கணைக்கும்- இளவேனிற் காலத்தைத் தனது ஆட்சிக்குரிய சிறந்த காலமாகக் கொள்கின்ற மன்மதன் எய்யும் மலர் அம்பிற்கும், வெள் நகை செவ்வாய் கரிய பானல் ஆர் கண்ணியர்க்கும்- வெள்ளிய முறுவலையும் சிவந்த வாயினையும் கருங்குவளை மலர் போன்ற கரிய கண்களையுமுடைய மகளிர்பொருட்டும், பதைத்து உருகும் பாழ் நெஞ்சே- பதைத்து உருகும் பயனற்ற நெஞ்சமே, ஊன் எல்லாம் நின்று உருக புகுந்து ஆண்டான்- என் உடம்பின் உறுப்புக்கள் எல்லாம் உருகி நிற்கும் வண்ணம் என்னுள்ளே புகுந்து ஆட்கொண்ட எம்பெருமான், இன்றுபோய் வான் உளான்- இன்று நம்மை விட்டு மறைந்து நுண்ணிய பரவெளியின்கண் உள்ளான்; நீ காணாய்- நீ அவனைக் கண்டிலை; மாளா வாழ்கின்றாயே- அதனால் மாண்டொழியாமல் இன்னும் வாழ்கின்றனையே; உன் அறியாமை இருந்தவாறென்னே.

வேனில்வேள் மலர்க்கனைக்கும் வெண்ணகைச் செவ்வாய்க்கரிய யானலார் கண்ணியர்க்கும் பதைத்து உருகும் பயனற்ற நெஞ்சே, என் உடம்பின் உறுப்புக்கள் எல்லாம் உருகி நிற்கும் வண்ணம் என்னுள்ளே புகுந்தாண்ட எம்பெருமான் இன்று நம்மைவிட்டு மறைந்து வானின்கணுள்ளான்; நீ அவனைக் கண்டிலை; மாளா வாழ்கின்றாயே- அதனால் மாண்டொழியாமல் இன்னும் வாழ்கின்றாயே; உன் அறியாமை இருந்தவாறென்னே என்பதாம்.

வேனில் எனப் பொதுபடக் கூறினும் மலர்க்கணைகள் மலரும் இளவேனிற்காலமே கொள்ளப்பட்டது. வேள் என்பது முருகனையும் உணர்த்துமாயினும் வேனில்வேள் என்றதனால் மன்மதனைக் குறித்தது. மலர்க்கணை என்றது மன்மதன் ஆற்றலைப் புலப்படுத்தியது. கணை- அம்பு.

வெண்ணகை- வெள்ளிய முறுவல். திருக்கோவை 58பேர். வெண்ணகை, செவ்வாய் என்பன கண்ணியர் என்பதில் விகுதியால் உணர்த்தப்படும் மகளிர் என்பதனோடு முடிந்தன. கரியகண், பானலார் கண் எனத் தனித்தனி இயையும். பானல்- கருங்குவளை. "பானல்

*மாணவர்களை மதிப்பதில்த்தான் கல்வியின் ரகசியம் அடங்கியுள்ளது.*

கருங்குவளை" எனப் பிங்கலந்தையில் (9:365) வருதலுங் காண்க, ஆர் உவமப்பொருட்டு. "யாழார் மொழிமங்கை" (திருக்கோவை 51) என்புழிப்போல. பானலார் கரிய கண்ணியர் எனக்கூட்டிக் கருங்குவளை மலர்போலும் கரிய கண்ணியர் எனவுரைக்க. "குவளைக் கருங்கட் கொடியே ரிடைக்கொடி" எனத் திருக்கோவையாரில் (51) வருதலுங் காண்க. கணைக்கும் கண்ணியர்க்கும் என்புழி உம்மைகள் எண்ணுப் பொருளன. மலர்க்கணைக்குப் பதைத்துக் கண்ணியர்க்கு உருகும் நெஞ்சு என நிரனிறையாகக் கொள்க. மலர்க் கணையால் வருந்தி அதனைத் தீர்த்தற்கு மகளிரைப் பெறும் பொருட்டு உருகும் எனக் காரணகாரிய முறைப்படி கொள்க. மன்மதனுக்குக் கணையாகும் மலர்கள் தாமரைப்பூ, மாம்பூ, அசோகம்பூ, முல்லைப்பூ, கருங்குவளைப்பூ என்பன. இவை முறையே மகளிர் கூட்டுறவு விருப்பினையும் அதனால் உடல் பசலையடைதலையும் வேறு உலக சிந்தனை ஒழிதலையும் செயலற்றுக் கிடத்தலையும் அறிவு மயங்குதலையும் செய்வனவாம். அவை இங்கே "பதைத்து" என்பதாற் குறிக்கப்பட்டனவாகும். நெஞ்சு இறைவன் பொருட்டுப் பதைத்து உருகாது கண்ணியர் பொருட்டுப் பதைத்துருகுதல் பயனற்ற செயலாதலின் "பதைத்துருகும் பாழ்நெஞ்சே" என்றார். நெஞ்சு இறைவன் பொருட்டுப் பதைத்துருக வேண்டுமென்பது. "வெள்ளந்தாழ் விரிசடையாய் விடையாய் விண்ணோர் பெருமானேயெனக்கேட்டு வேட்ட நெஞ்சாய்ப், பள்ளந்தாழுமாறு புனலிற் கீழ்மேலாகப் பதைத்துருகும் அவர்" (சத 21) என அடிகள் பிறிதோரிடத்து அருளியவாற்றானுமாறிக.

ஊனெலாம் என்பது ஆகுபெயராய் உடம்பின் எலும்பு முதலிய உறுப்புக்கள் எல்லாவற்றையும் உணர்த்தி நின்றது. நின்று உருக என்பதனை உருகி நிற்ப என எச்ச விகுதியைப் பிரித்துக்கூட்டி முன்பின்னாக மாற்றிப் பொருள்கொள்க. ஊனெலாம் உருகப் புகுந்தாண்டான்.... என்க. கல்நெஞ்சுருக்கிக் கருணையினாலாண்டு கொண்ட அம்பலவன்" (கோத்தும்பி 11) "என் என்பெலா முருக்கி எளியையா யாண்ட ஈசனே" (பிடித் 10) "வியனுலகில் எனைத்தான் புகுந்தாண்டான்" (உயிருண்ணிப் 4) என அடிகள் பிறாண்டு அருளியவாறுங் காண்க.

போய்- மறைந்து, வான் எனப் பொதுபடக் கூறினும் ஈண்டு இறைவனுக்குரிய பரவெளியைக் குறித்தது. காணாய்- கண்டிலை மாளா- மாண்டொழியாமல் வாழ்கின்றாயே என்பதன் ஆற்றலால் உன் அறியாமை இருந்தவாறென்னே என்பது வருவிக்கப்பட்டது.

இதன்கண் நெஞ்சை முன்னிலைப்படுத்தி விளித்து அதன் இழிவை அறிவுறுத்தமையின் அறிவுறுத்தல் என்னும் இரண்டாம் பத்து நுதலிய பொருள் புலப்படுமாறு காண்க.

24. வாழ்கின்றாய் வாழாத நெஞ்சமே வல்வினைப்பட்
டாழ்கின்றாய் ஆழாமற் காப்பானை யேத்தாதே
சூழ்கின்றாய் கேடுனக்குச் சொல்கின்றேன் பல்காலும்
வீழ்கின்றாய் நீயவலக் கடலாய வெள்ளத்தே.

**ப.ரை:**

வாழாத நெஞ்சமே- அழிவில்லாத பேரின்ப வாழ்க்கையில் வாழக் கருதாத நெஞ்சமே, வாழ்கின்றாய்- அழியும் இயல்புடைய இவ்வுலக இன்ப வாழ்வில் வாழ்ந்து அவ்வளவில்

அமைந்திருக்கின்றாய்; வல்வினைப்பட்டு ஆழாமல் காப்பானை ஏத்தாது ஆழ்கின்றாய்- வலிய இருவினைகளின் வயப்பட்டு அழுந்தாமல் நம்மைக் காப்பாற்றும் இறைவனைப் புகழ்ந்து துதியாமல் விடுத்து அவ்விருவினைப் பயன்களில் அழுந்துகின்றாய்; உனக்குக் கேடு சூழ்கின்றாய்- இவற்றால் உனக்குக் கேட்டினை நீயே தேடிக்கொள்ளக் கருதுகின்றாய்; பல்காலும் சொன்னேன்- உனக்குப் பல முறையும் அறிவுரை அறிவுறுத்தி வருகின்றேன்; நீ அதனைக் கேளாதொழியின், நீ அவலம் ஆய கடல் வெள்ளத்தே வீழ்கின்றாய்- நீ துன்பமாகிய கடற்பெருக்கில் வீழ்ந்தொழிகின்றாய்.

பேரின்ப வாழ்க்கையில் வாழக் கருதாத நெஞ்சமே, வல்வினைப்பட்டு ஆழாமற் காப்பாற்றும் இறைவனைப் புகழ்ந்து துதியாமல் அவ்விருவினைப் பயன்களில் அழுந்துகின்றாய். இவற்றால் உனக்குக் கேட்டினை நீயே தேடிக்கொள்ளக் கருதுகின்றாய்; உனக்குப் பலமுறையும் அறிவுரையை அறிவுறுத்தி வருகின்றேன்; அதனைக் கேளாதொழியின் நீ அவலமாகிய கடல் வெள்ளத்து வீழ்ந்தொழிகின்றாய். என் செய்வது? என்பதாம்.

வாழ்தல்- இன்புற்று வாழ்தலைக் குறிப்பதாகலின் வாழ்கின்றாய் என்பதற்கு அழியும் இயல்புடைய இவ்வுலக இன்ப வாழ்வில் வாழ்ந்து அவ்வளவில் அமைந்திருக்கின்றாய் எனக் குறிக்கப்பட்டது. அழிவில்லாத பேரின்ப வாழ்வில் வாழக்கருதா நெஞ்சமாதலின் "வாழாத நெஞ்சமே" என்றார். வல்வினையென்றது பிறவிக்கேதுவாகிய ஒத்த வலியை யுடையவாகிய நல்வினை தீவினை இரண்டினையும் குறித்து நின்றது. நல்வினைப்பட்டு ஆழாமற் காப்பானை ஏத்தாதே ஆழ்கின்றாய் என மாறிக் கூட்டுக.

உனக்குக் கேடு சூழ்கின்றாய் என்றது வாழாமல் வாழ்ந்தும் ஆழாமற் காப்பானை ஏத்தாது ஆழ்ந்தும் உனக்குக் கேட்டினை நீயே தேடிக்கொள்ளக் கருதுகின்றாய் என்றவாறு. சூழ்தல்- கருதுதல். "பலசூழும் மனத்தோடு பைதலேன் யானாக" (கலி 46:17) என்புழிப்போல. சொல்கின்றேன் பல்காலும் என்றதன் ஆற்றலால் அறிவுறுத்தியும் கேளாதொழியின் என்பது வருவிக்கப்பட்டது. அவலக் கடலாய வெள்ளம் என்றதனை அவலமாய கடல்வெள்ளம் என ஆய என்பது பிரித்துக் கூட்டப்பட்டது அவலமாய கடல்- துன்பமாகிய கடல். "அவலக் கடல் வீழ்ந்த, என்னேரனையேன்" (ஆனந்த 1) என அடிகள் பிறாண்டு அருளியமையுங் காண்க. வீழ்வாய் என்னும் எதிர்காலம், துணிவுபற்றி வீழ்கின்றாய் என நிகழ்காலத்தாற் கூறப்பட்டது.

இதன்கண், பல்கால் அறிவுறுத்தியும் கேளாமல் வாழாமல் வாழ்ந்தும் ஆழாமற் காப்பானை ஏத்தாது ஆழ்ந்தும் உனக்குக் கேட்டினை நீயே தேடிக்கொள்ளக் கருதுகின்றாய்; அதனால் துன்பமாய கடல்வெள்ளத்தே வீழ்வாய் என நெஞ்சினை முன்னிலைப்படுத்தி அறிவுறுத்தமையின் அறிவுறுத்தல் என்னும் இரண்டாம்பத்து நுதலிய பொருள் புலப்படுமாறு காண்க.

(தொடரும்...

தேறியிடா மாந்தர்க்கு வழிகாட்டுவாய்

மூவிரண்டு முகமுடையாய் முகமுழுதும் அருளுடையாய்
ஆறிரண்டு தோளிலும்தான் அருளுடையாய் - தேறியிடா
உளமுடைய மாந்தர்க்கு உய்யும்வழி காட்டிடுவாய்
அழகுநிறை சந்நிதி யுளோய்.

*-திருமதி பொன். பாக்கியம்-*

*ஒரு கணத்தில் இழந்த மானத்தை ஓராயிரம் ஆண்டுகளானாலும் பெற்றுவிட முடியாது.*

# கிராமியத் தெய்வ வழிபாடு

– திரு குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள் –

சைவ மக்களிடையே காணப்படுகின்ற தெய்வ வழிபாட்டுமுறைகள், சமய நம்பிக்கை, சமய அநுட்டானங்கள், விரதங்கள், பண்டிகைகள் மற்றும் சமய விழாக்கள், சடங்கு சம்பிரதாயங்கள் என்பன காலங் காலமாக; மனிதர்கள் நோய்கள், வறுமை நீங்கப் பெற்றவராய்; சமூக நலன்கள், பண்பு நலன்கள் பேணி, வாழ்வாங்கு வாழும் தன்மைகள் பொருந்தியவர் களாய்; இம் மண்ணில் மனிதத் தன்மைகளுடைய மனிதர்களாக, நல்ல வண்ணம் வாழ்வதற்கு உறுதுணையாக அமைந்து வந்துள்ளன. இன்றும் அமைந்து வருகின்றன. மருத்துவ வசதிகள் அரிதாக இருந்த பண்டைய காலங்களில், மனிதர்களை நலமாக வாழ்வித்து வந்தது இந்தத் தெய்வ நம்பிக்கையேதான். "நம்பினார் கெடுவதில்லை" என்பது நான்கு மறைகளின் தீர்ப்பு ஆகும். மறை என்பது வேதம். வேதம் என்னும் சொல்லுக்கு அறிவு என்பது பொருள்.

சைவ ஆலயங்களை அமைத்து, தெய்வப் பிரதிட்டை செய்து, ஆகம முறைப்படி, நித்திய நைமித்தியக் கிரியைகள், பூசை ஆராதனைகள் என்பவற்றைத் தடங்கலின்றிச் செய்வித்து வருபவர்களை, எவ்வித துன்பங்களோ, இடர்களோ, இன்னல்களோ அணுகு வதில்லை. "ஆலயம் தொழுவது சாலவும் நன்று", "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" போன்ற முதுமொழிகள் உயிர்ப்புப் பெற்றிருந்த காலம் ஒன்றிருந்தது. ஆனால், நம் முன்னோர்கள் நமக்களித்த அரும் பெரும் சமய, ஆன்மீக, கலாசார, பண்பாட்டுச் செல்வங்களையும், ஒழுக்க விழுமியங்களையும் தற்காலத்தில் வாழுகின்ற மனிதர்களில் பெரும்பாலானவர்கள் உதாசீனஞ் செய்தும், அலட்சியம் செய்தும் வருகிறார்கள். அதனால் ஒழுக்கச் சீரகேடுகள், நடத்தைப் பிறழ்வுகள், வன்முறைகள், பலாத்காரங்கள், துஷ்பிரயோகங் கள் என்பன சமுதாயத்தில் தாராளமயமாகி வருகின்றன. மக்கள் அமைதியை இழந்து வாழ்க் கையில் வேதனைகளையும், விரக்திகளையும் அநுபவித்து வருகிறார்கள்.

இன்றைய காலகட்டங்களில் பகுத்தறிவு வாதம், எதிலும் விஞ்ஞான முறையிலான நோக்கு, நாத்திகத்தின் அதிதீவிர வளர்ச்சி என்பன மனிதர்களிடம் புகுந்து அவர்களை ஆட்கொண்டு வருகின்றன. அதனால் ஆத்திகத்திற்கும் நாத்திகத்திற்கும் இடையில் அகப்பட்டு அல்லல்படுகிறார்கள். ஆத்திகத்தையும் முழுமையாக ஏற்கமுடியாமல் நாத்திகத்தையும் தள்ளிவைக்க இயலாமல் சிரமப்படுவதை இன்று பலரிடம் காணக்கூடியதாக உள்ளது.

ஆலயங்களை ஆகம விதிப்படி அமைத்து, வழிபாடு செய்து வருவதை வைதிக சமய வழிபாட்டுமுறை என்பர். நியமமான வைதிக ஆகம மரபு உலகளாவிய நிலையில் இருக்க; கிராமங்களில் கிராமியத் தெய்வங்களைப் பாரம்பரிய முறைகளைப் பின்பற்றி, வழிபாடு செய்துவரும் வழக்கத்தையும் காணக்கூடியதாக உள்ளது. இங்கு ஆகம விதிமுறைகள் இடம்பெறுவதில்லை. இங்கு பயபக்திக்கே முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. நம்பிக்கை, பயம் என்பனவே தெய்வத்தின்மீது மக்கள் கொள்ளும் பக்திக்கு அடிநாதம் ஆக உள்ளது.

ஊர்கள், கிராமங்கள்தோறும் அங்கு வாழும் மக்களின் விருப்பங்கள், நம்பிக்கைகள் என்பனவற்றிற்கேற்ப, பக்தி, பரவசம், ஆவேசம், உருவந்து ஆடுதல் ஆகியவற்றுடன் கூடிய தெய்வ வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன. இவற்றில் கிராமியப் பண்புகள்,

*கேள்வி கேட்கத் தெரிந்தாலே பாதி தெரிந்து கொண்டதாக அர்த்தம்.*

கலாசாரங்கள், மரபுவழிப் பூசை முறைகள் என்பன இடம்பெறுவதைக் காணலாம். பொங்கல், படையல், மடை என்பனவற்றைத் தாமே செய்து; தெய்வங்களுக்கு நைவேத்தியங்களாகச் சமர்ப்பணம் செய்து; அன்பு உள்ளத்தோடும், பயபக்தி, நம்பிக்கையோடும் வழிபாடு செய்வர்.

இக்கிராமியத் தெய்வங்கள் வரிசையில் வைரவர், வீரபத்திரர், ஐயனார், நாகதம்பிரான், பெரியதம்பிரான், முனியப்பர், அண்ணமார் முதலிய ஆண் தெய்வங்களும், காளி, கண்ணகி, முத்துமாரி, நாச்சிமார், திரௌபதி, வராகி, துர்க்கை, பத்தினி ஆகிய பெண் தெய்வங்களும் இடம்பெறுகின்றன. வெவ்வேறு நாமங்களும் வடிவங்களும் கொண்ட கிராமியத் தெய்வங்களும் உள்ளனர். இத்தெய்வங்களுக்குப் பெரும்பாலும் நித்திய பூசைகள் நடைபெறுவதில்லை. வெள்ளி, செவ்வாய் நாட்களில் மட்டும் விளக்கேற்றி, மலர்தூவி, சங்கு ஊதி, சேமக்கலம் அடித்து, மாலைவேளையில் வழிபாடு செய்யும் வழக்கம் உள்ளது.

ஆயினும் ஆண்டுக்கொரு தடவை, குறிப்பிட்ட தினத்தில் பெரும் பொங்கல் விழா பக்தி சிரத்தையோடும் அசைக்க முடியாத நம்பிக்கையோடும், மக்கள் நேரடியாகப் பொங்கிப் படைத்து பழமடை, பலகாரமடை பரவி பூசை வழிபாடு செய்யும் அற்புதக் காட்சி பரவசம் நிறைந்ததாக இருக்கும். இத்தெய்வங்களின் மூர்த்தி, தலம் சிறிதாக இருப்பினும் கீர்த்தியும் அருட்திறனும் மிகப்பெரியதாகவே உள்ளன. நம்பிக்கையே வாழ்க்கை என்பது இங்கு உறுதியாக விளக்கம் பெறுகிறது. மக்களின் நம்பிக்கை வலுவுள்ளது. அது வீண்போவதில்லை. அந்த நம்பிக்கையிலேயே, இயற்கைச் சீற்றங்களிலிருந்தும், கொடிய விலங்குகள், நச்சுப் பாம்புகள் மற்றும் விஷ செந்துக்கள் ஆகியவற்றின் தாக்குதல்களிலிருந்தும்; மனித எதிரிகள், பகைவர்கள், திருடர்கள், தீயவர்கள் ஆகியோரின் ஆக்கிரமிப்புக்களிலிருந்தும்; இயற்கைக்கு அப்பாற்பட்டதும், மனித அறிவுக்குள் அகப்படாததுமான அமானுஷ்ய சக்திகள், பேய், பிசாசுகள் மற்றும் செய்வினை, பில்லி சூனியம், கண்ணூறு, திருஷ்டி என்பவற்றின் தாக்கங்களிலிருந்தும், கொடிய நோய்கள், தொற்று நோய்கள், பிணிகள், கவலைகள், வறுமை, உடல் ஊனங்கள், உளப்பிணிகள், கடன் தொல்லைகள், பஞ்சம், பசி, விபத்துக்கள், அகால மரணங்கள், போர் அழிவுகள் என்பவற்றின் பாதிப்புக்களினால் ஏற்படும் துன்பங்கள், துயரங்கள், இழப்புக்கள் ஆகியவற்றிலிருந்தும், மக்களினம் காலங் காலமாகத் தம்மைப் பாதுகாத்துக்கொண்டு மன உறுதியோடு இற்றைவரை வாழ்ந்துள்ளது. இது எதனால்? எப்படி? என்பதை ஆறறிவு படைத்த மனிதர்கள் சிந்தித்துத் தெளிய வேண்டும்.

தெய்வநம்பிக்கை, பயபக்தி, சமய அனுட்டானங்கள், தவறு செய்தால் தெய்வ தண்டனை கிடைக்கும் என்பதில் உறுதியான நிலைப்பாடு, தெய்வத்தின் அறக்கருணை மறக்கருணை என்பவற்றில் திடமான நம்பிக்கை, அதனால் ஒழுக்க வாழ்வு; பெற்றோர், மூத்தோர், பெரியோர், ஆசிரியர் ஆகியோரின் சொற்கேட்டு, பணிந்து இளையோர் வாழ்ந்தமை என்பன. விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப மருத்துவ வசதி வாய்ப்புக்கள் இன்றுபோல அத்துணை விருத்தியடையாத நீண்ட நெடுங்காலத்தில் மக்களை வாழ்வாங்கு வாழ்வித்து வந்துள்ளன என்ற உண்மையை நாம் மறந்துவிடலாகாது. மறைக்கவும் முயலக்கூடாது. இன்றும் எம்மை நல்லவண்ணம் வாழ்விக்கும் திறனும், வலிமையும் இவற்றிற்கு உண்டு.

*உழைப்பிற்கு ஓர் உதாரணம் எறும்பு; மற்றொன்று இதயம்.*

# மேற்குலகில் திராவிடக் கட்டடக் கலைக்கு தலைசிறந்த எடுத்துக்காட்டு பர்மிங்காம் பாலாஜி வெங்கடேஸ்வரர் கோயில்

– திரு மு.க. மாசிலாமணி அவர்கள் –

சுவாமி விவேகானந்தர் 1893இல் அமெரிக்காவில் இடம்பெற்ற உலக சமயங்களின் பாராளுமன்றத்தில் இந்து சமயத்தின் உயர் தனிச் சிறப்பை அது விபரிக்கும் உலகந் தழுவிய உன்னதமான ஒருமைக் கோட்பாட்டின் ஆழ அகலங்களை ஆணித்தரமாக எடுத்து விளக்கிய உலகப் புகழ் பெற்ற சிக்காக்கோ உரை மேற்குலகில் இந்துசமயம்பற்றி ஓர் விழிப்புணர்வினை ஏற்படுத்தியது. அதனைத் தொடர்ந்து பாரதம், இலங்கை போன்ற கீழை நாடுகளிலிருந்து சென்று அங்கு குடியேறியவர்கள் தங்கள் சமயம், பண்பாடு, வாழ்வியல் விழுமியங்கள் அனைத்தையும் கைக்கொண்டு வாழ்ந்ததுடன் அவற்றினை அந்நாடுகளில் பரப்பவும் முயற்சித்தனர். அண்மைக் காலங்களில் அமெரிக்கா, கனடா, பெரிய பிரித்தானியா, பிரான்ஸ், ஜேர்மனி, சுவிற்சலாந்து, அவுஸ்திரேலியா எனப் பல நாடுகளில் இந்து சமயமும் அது சார்ந்த தத்துவங்கள், பண்பாடு, கோயிற் கட்டிட சிற்பக் கலைகள், இசை, நடனம், நாட்டியம், நாடகம் என நாகரீகக் கூறுகள் எல்லாம் மிகச் சிறப்பான முறையில் முன்னெடுக் கப்பட்டு வருகின்றன. குறிப்பாகக் கேயிலை மையமாகக் கொண்டு தென்னிந்தியாவில் மறுமலர்ச்சியுற்ற கோயிற் பண்பாடு மேற்குலக நாடுகளிலும் வளர ஆரம்பித்துள்ளது என்பதனை இன்று அந்நாடுகளில் நிர்மாணிக்கப்பட்டுக் கிரமந் தவறாது பூசை வழிபாடுகள் இடம்பெற்று வரும் கோயில்கள் எடுத்துக்காட்டுகின்றன. மேற்படி நாடுகளில் ஏற்பட்டுவரும் இந்துப் பண்பாட்டின் விரிவாக்கத்திற்கான மிகச் சிறந்த உதாரணமாகப் பெரிய பிரித்தானியாவின் கைத்தொழில் நகரமெனப் பிரசித்திபெற்ற பர்மிங்காம் நகரில் நிறுவப்பட்டுள்ள ஸ்ரீ வெங்கடேஸ்வர பாலாஜி கோயிலைக் குறிப்பிடலாம். நிர்மாணிக்கப்பட்டுப் பன்னிரண்டு ஆண்டுகள் நிறைவுறும் இக்கோயில் பிரித்தானியாவில் மட்டுமன்றி ஐரோப்பிய நாடுகளிலும் நிறுவப்பட்டுள்ள இந்து நிறுவனங்களில் தலையாயது எனக் கணிக்கப்படுகின்றது.

வழிபாட்டு நிறுவனம் என்ற வகையில் வத்திக்கான் கிறிஸ்தவ தேவாலயத்திற்கு அடுத்துப் பெருமெண்ணிக்கையில் பக்தர்கள் கூடும் தென்னிந்தியத் திருப்பதி வெங்கடேஸ்வரருக்கு இணையாக ஒத்ததாக இக்கோயில் காணப்படுகிறது. பல ஆயிரம் மைல்களுக்கு அப்பாலுள்ள தென்னிந்தியத் திருப்பதி வெங்கடேஸ்வரர் கோயிலுக்குச் செல்லும் வாய்ப்பு அரிதாகவுள்ள ஐரோப்பாவில் வாழும் குறிப்பாகப் பெரிய பிரித்தானியாவில் வாழும் பாலாஜி பக்தர்கள் வழிபடுவதற்கு வசதியாகவே இக்கோவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. பர்மிங்காம் பிரதேசத்திலுள்ள திவிடேல் என்ற இடத்தில் 21ஏக்கர் பரந்த நிலப்பரப்பில் 450அடி நீளமும் 200அடி அகலமும் கொண்ட வளாகத்தினுள் மிக இடவசதியுடையதாக இக்கோயில் அமைந்துள்ளது. சமுத்திரம், கடல், ஆறு போன்ற நீர் நிலைகளின் பக்கத்தில் நிர்மாணிக்கப்படும் ஆலயங்களில் பிரதிஷ்டை செய்யப்படும் திருவுருவங்களில் மூர்த்திகரம், இறை சாந்நித்தியம் விசேடமாகச் சிறந்து பொலிந்திருக்குமென்ற இந்துக்களின் அசைக்க முடியாத நம்பிக்கைக்கு அமைவாகத் தேம்ஸ் நதி பாயும் பக்கம் வடகிழக்காக அமையத் திராவிடக் கட்டிடக்கலை எனச் சிறப்பித்துப் பேசப்படும் தென்னிந்தியக் கோயிற் கட்டிடக்

பணமும் மகிழ்ச்சியும் பரம விரோதிகள். ஒன்று தங்குமிடத்தில் மற்றொன்று தங்காது.

கலைப் பாணியில் மிகப் பிரமாண்டமான அளவில் அருளுணர்வும் ஆன்மிக ஒளியும் பரப்பும் ஓர் ஒப்பற்ற கலைக்கூடமாக இக்கோயில் நிர்மாணிக்கப்பட்டுள்ளமை மனம் கொள்ளத்தக்கது.

ஸ்பெயின் நாட்டுக் கருங்கற்கள் இந்தியச் சிற்பிகளின் கைவண்ணத்தில் கலைநுணுக்கம் நிறைந்த கோயிற் கட்டிடமாக உருவெடுத்துள்ளமை பார்ப்போரை மெய்சிலிர்க்கச் செய்கின்றது. "கோபுர தரிசனம் கோடி புண்ணியம்" என்ற அருள் வாக்குப்படி கம்பீரமாக உயர்ந்து நிற்கும் வாயிற்கோபுரம் வருவோரை எல்லாம் "வா வா" என அழைக் கின்றது. "முதல் வணக்கம் கணபதிக்கே" என்ற இந்து வழிபாட்டு மரபுப்படி மூலவர் கோயிலின் முன்னரங்கின் வலப்பக்கத்தில் 1999இல் விநாயகருக்கும் இடப்பக்கத்தில் 2000இல் முருகனுக்கும் கோயில்கள் நிறுவப்பட்டுள்ளன. நேரே உயர்ந்த படிக்கட்டுக்களைத் தாண்டிச் செல்ல இருமருங்கிலும் கலையழகு மிளிரும் இரு வெள்ளை யானைகள் வரும் பக்தர்களை வரவேற்கத், தொடர்ந்து மேற்குலகில் திராவிடக் கட்டிடக்கலையின் பரம்பலுக்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டாகக் கலைப் பெட்டகமாக ஐந்து தளங்களுடன் உயர்ந்து நிமிர்ந்து நின்று எழிலான தோற்றத்தில் காட்சி தரும் இராசகோபுரம் "இன்னுந் தாமதியாது வெங்கடேஸ்வரர் தரிசனம் காண விரைந்து செல்லுங்கள்; விரைந்து செல்லுங்கள்" எனக் கூறுவதுபோலப் பிரதான வாசல் வழியாக வழிவிடுகின்றது. இரு மாடிகளைக் கொண்ட மூலவர் கோயிற் கட்டிடத்தின் கீழ்ப்பகுதி கோயில் நிர்வாக மண்டபங்கள், அலுவலக அறைகள் என அமைந்திருக்க மேற்தளத்திலே கோயில் அமைந்துள்ளது. பிரதான வாசல் வழியாக உள்நுழைய நின்ற திருக்கோலத்தில் அழகும் அலங்காரமும் ஒருசேர வெங்க டேஸ்வரர் தரிசனம் கண்கொள்ளாக் காட்சியாக உள்ளத்தில் பதிந்துவிடுகின்றது. மூலவரின் கோயில் 166அடி நீளமும் 111அடி அகலமும் உடையதாக அமைய 55அடி உயரமான விமானத்தின் உச்சியில் கலசம் பொருத்தப்பட்டுள்ளது. கண்ணாடிபோல் பளிங்குக் கற்கள் பதிக்கப்பட்ட கோவிலின் முன்மண்டபம் 700 பக்தர்கள் அமர்ந்திருக்கக்கூடிய விசாலமுடையது. கோயிலின் உள் வீதியில் மூலவருக்கு இடப்பக்கத்தில் அவரின் சக்தியாகிய பத்மாவதி தேவியும் வலப்பக்கத்தில் இராம பக்தரான அனுமானும் தனித்தனி பரிவாரக் கோயில்களில் காட்சி தருகின்றனர். உள்வீதியிற் பல இடங்களில் திராவிடச் சிற்பக்கலை மரபில் கண்ணையும் கருத்தையும் கவரும் வகையில் மரத்திலாலான சிற்பங்கள் நிறைவாகப் பொருத்தப் பட்டுள்ளமை கோவிலின் கலையழகிற்கு மேலும் மெருகூட்டுகின்றன. இவ்வாறு அளவிலும் அழகிலும் ஐக்கிய இராச்சியத்திலுள்ள மிகப் பிரமாண்டமான கட்டிட சிற்பக் கலைப் பெட்டகமாக ஆகம சாஸ்திர விதிகளுக்கமைவாக நிர்மாணிக்கப்பட்ட இக்கோவிலின் மகா கும்பாபிசேகம் 2006 ஆவணி மாதம் மிகப் பக்திபூர்வமாகவும் வெகு விமரிசையாகவும் நிறைவேறியது. பூசை ஆராதனைகளின்போது, ஆங்கிலம், தெலுங்கு, ஹிந்தி, தமிழ் ஆகிய மொழிகளில் "ஓம் நமோ நாராயணா, ஓம் வெங்கடேஸ்வராய நமஹ" என எழுதப்பட்ட விஷ்ணு நாமங்களும் சுலோகங்களும் அடங்கிய பத்திரம் மண்டபம் நிறைந்திருக்கும் பக்தர்களிடம் கொடுக்கப்படுகின்றது. கொடுக்கப்பட்ட இறை நாமங்களையும் சுலோகங்களை யும் எல்லோரும் மென்மையான இனிய இசையில் அட்சர சுத்தியுடன் ஓதுகின்றார்கள். தீபாராதனை இடம்பெறுகின்றது. அந்த இறைநாம சங்கீர்த்தன தெய்வீக ஒலி மண்டபம் முழுவதும் பரவி ஓர் ஆன்மீக அலையாகப் பரந்து எல்லோர் உள்ளத்தையும் உணர்வையும்

*வாழ்க்கை அனுபவமில்லாத எவரும் கல்வி கற்றவராக முடியாது.*

வெங்கடேஸ்வரரின் தெய்வீகக் காட்சியில் ஒன்ற வைக்கின்றது. நாராயணனுக்கு முன்பிருந்த அந்த ஒருமணி நேரமும் உண்மையில் வார்த்தைகளில் வடிக்கமுடியாத ஓர் இறையனுபவ உணர்வு நிறைந்த பூரண திருப்தியுடன் பக்தர்கள் கோபுர வாயிலால் வெளியே வருகின்றார்கள்.

விஷ்ணுவிற்கான இக்கோயிலில் சைவத்தின் முழுமுதற் தெய்வமான சிவனுக்கும் தனிக்கோயில் நிர்மாணிக்கப்பட்டு புனித கங்கையில் இருந்தெடுக்கப்பட்ட சுயம்புலிங்கம், பார்வதி, நந்தி, ஆகிய தெய்வ விக்கிரகங்களும் பிரதிஷ்டை செய்யப்பட்டு 2010 ஆவணியில் கும்பாபிஷேகமும் மிகச் சிறப்பாக நிறைவேற்றப்பட்டது. கோயில் வளாகத்தினுள் ஸ்ரீ ரங்க நாதருக்கும் நவக்கிரகங்களுக்கும் தனித்தனியாகக் கோயில்கள் உண்டு. இக்கோயிலில் சிவனுக்கான மகாசிவராத்திரி, சக்திக்கான நவராத்திரி, கணபதிக்கான சதுர்த்தி, முருகனுக் கான கந்தசஷ்டி, விஷ்ணுவுக்கான வைகுந்த ஏகாதசி, ஸ்ரீனிவாச கல்யாணம், இராமநவமி, அகண்ட விஷ்ணு சகஸ்ரநாமம், இலட்சார்ச்சனை, அனுமன் ஜெயந்தி, தீபாவலி, தீபத்திருநாள், தமிழ்ப் புதுவருடப் பிறப்பு, தெலுங்கு புதுவருடப்பிறப்பு எனப் பலவகையான பூசைகளும் விழாக்களும் மிகக் கோலாகலமாகக் கொண்டாடப்படுகின்றன. இத் திருவிழாக்கள் எல்லாம் பூசை தீபாராதனைகளுடன் மிகத் தரமான இசைக் கச்சேரி, இந்தியாவிலிருந்து வரவழைக் கப்படும் சிறப்புத்தேர்ச்சி பெற்ற கலைஞர்களின் பரதநாட்டியம், குச்சுப்புடி, கதகளி போன்ற நடன நிகழ்வுகள், வாத்திய விருந்துகள், அனுபூதி பெற்ற இந்தியச் சுவாமிகளின் உரைகள் போன்றன உள்ளத்திற்கும் உணர்வுக்கும் ஆக்கந்தரும் உன்னதமான நிகழ்வுகளுடனேயே விழாக்கள் நிறைவுறுவது விசேடமாகக் குறிப்பிடப்பட வேண்டும். இக்கோயிலில் கடவுள் வழிபாடு அல்லது சமய வழிபாடு என்பதற்கும் மேலாக ஆன்மீகம் என்ற தளத்தில் நின்று இந்து சமயம் உலகிற்கு அளித்த மிகவுயர்ந்த தத்துவங்களைத் தர்மங்களை வாழ்வியல் விழுமியங்களை, மனிதநேய ஒருமைப்பாட்டினை அங்கு கூடும் பக்தர்களுக்கும் மிகச் சிறப்பாக ஆன்மிக வாழ்விற்குச் சவால்விடும் உலோகாயுத உலகிற்கு முகம் கொடுத்து வாழவேண்டிய இளைஞர்களுக்கும் உணர்த்தும் வகையிலேயே கோயிற் செயற்பாடுகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. இன்றைய இளைஞர்களை நல்வழிப்படுத்தலே சமயத்தின் முக்கிய இலக்காக அமைய வேண்டுமென்பதே கோயில் நிர்வாகத்தினரின் தலையாய எண்ணமாக இருக்கின்றதென்பதனை அவர்களின் ஒவ்வொரு செயற்பாட்டிலும் அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது. இதற்காக 8-21 வயதிற்குட்பட்ட இளைஞர்களை ஒன்று சேர்க்கும்

1) பாலாஜி இளைஞர் குழாம் 2) பாலாஜி இளைஞர் தினம்
3) பாலாஜி இளைஞர் கோடைகால முகாம் 4) பாலாஜி இளைஞர் குளிர்கால முகாம்

எனப் பல நிகழ்வுகள் நடாத்தப்படுகின்றன. பல இன, மொழி, மதம் சார்ந்த இளை ஞர்கள் பெருமெண்ணிக்கையில் பங்கு கொள்ளும் மேற்படி நிகழ்வுகள் அவர்களைச் சமூகத்தின் நற்பிரசைகளாக உருவாக்குவதற்காகவே ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன. இந்நிகழ்வு களின்போது இளைஞர்களுக்கு வதிவிடப் பயிற்சியாகத் தியானம், யோகாசனம், இந்து சமயம், இந்து தர்மம் சார்ந்த விரிவுரைகள், அவ்விரிவுரை தொடர்பில் இளைஞர்கள் பங்கு கொள்ளும் விவாத அரங்குகள், விளையாட்டுக்கள், தலைமைத்துவப் பயிற்சி என இளைஞர்கள் ஈடுபாட்டை அதிகரிக்கும் வகையிலான பன்முகப்படுத்தப்பட்ட முழுமையான பயிற்சிகள் வழங்குவதன்மூலம் தொல் புகழ் மிக்க இந்துப் பண்பாட்டின் பெருமைமிகு பாரம்பரியங்களை- மரபுகளை- விழுமியங்களை அவர்கள் உள்ளத்தில் ஆழப் பதித்து

*ஒழுக்கம் உண்டாக்காத இலக்கியக் கல்வியால் ஒருவித உபயோகமும் கிடையாது.*

அறிவும் ஆற்றலும் ஆளுமையுமிக்க நற்பிரசைகளாக உருவாக வழிகாட்டப்படுகின்றது. இக்கோயில் இந்து மதத்தவர்களுக்கு மட்டுமன்றி ஏனைய கிறிஸ்தவ, இஸ்லாமிய, பௌத்தம் போன்ற அனைத்துச் சமயத்தினரையும் அரவணைத்துச் செல்லும் உயரிய நோக்குடன் அவரவர்களின் சமய வழிபாட்டுக்கென ஏழு சமயக் குன்றுகள் என்ற பெயரில் கோயில் வளாகத்தினுள் ஒவ்வொரு சமயத்தவர்களுக்கும் இடங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. வேற்றுமையில் ஒற்றுமை காணும் கோயில் நிர்வாகத்தினரின் மிக முற்போக்கான இவ்வுயரிய செயற்பாடு எல்லோரினதும் ஏகோபித்த பாராட்டுக்களைப் பெற்றுள்ளது.

கோயிலின் ஓரங்கமாகப் பௌத்தக் கட்டிடக் கலைப்பாணியில் இரு பிரார்த்தனை மண்டபங்கள், சமயலறை கல்வி, கலாச்சார நிகழ்வுகள் நடாத்தக்கூடிய வசதிகளுடன் நிர்மாணிக்கப்பட்டுள்ள சமூக மண்டபம் எல்லாச் சமயத்தவர்களும் தங்கள் தங்கள் கொண்டாட்டங்களை வெகு விமரிசையாக கொண்டாடுவதற்குக் கொடுக்கப்படுகின்றது. ஆலயத்திற்கு வருகை தரும் பக்தர்கள் தினம் தினம் அதிகரித்து வருவதனைக் கவனத்திற்கெடுத்து அவர்களுக்குத் திருப்திகரமான சேவையினை வழங்கும் நோக்குடன் சேவை மனப்பாங்குடைய தொண்டர் குழாம் ஏற்படுத்தப்பட்டு நன்முறையில் செயற்படுகின்றது. முக்கிய திருவிழாக்களின்போதும் வார விடுமுறையின்போதும் ஆலயத்திற்கு வருகைதரும் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்குவது குறிப்பிடத்தக்கது. கோயிற் தொண்டர் சபையே அன்னதானம் வழங்கலையும் மிக நேர்த்தியாகச் செய்கின்றது. கோயில் வழிபாட்டிடமாக மட்டுமன்றி ஆன்மீகம், சேவை, இன, மத, மொழி வேறுபாடின்றி அனைவரையும் அரவணைத்தல், இயற்கையினைப் போற்றுதல் என்ற இந்நான்கு இலக்குகளையும் அடைவதற்காக இளைஞர்களையும் உள்ளடக்கிய குழுக்கள் அமைக்கப்பட்டு திட்டங்களுக்கமைவாகச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

சமய நிறுவனமாகவிருந்தும் கோயிலினால் முன்னெடுக்கப்படும் சில செயற்பாடுகள் பன்மைச் சமூகமொன்றில் சமய, சமூக கலாச்சார வேறுபாடுகளுக்கிடையில் புரிந்துணர்வு, ஒற்றுமை, ஒருங்கிணைப்பு, சமாதானம் வளர்ந்து செழிக்க மகத்தான பணியாற்றி வருகின்றமையினைச் சம்பந்தப்பட்டவர்கள் மனந்திறந்து பாராட்டியுள்ளனர். கோவில் அமைந்துள்ள உள்ளூர் நிர்வாகத்திற்குப் பொறுப்பான “சான்ட் வெல்” உள்ளூர் அதிகார சபையும், என்ற வர்த்தக சபையும் வெங்கடேஸ்வரர் கோயிலின் கட்டிட சிற்பக் கலைச் சிறப்பினையும் அதன் ஆன்மிக சேவையினையும் மதித்துப் போற்றுவதுடன் தூய்மையும் அழகும் விளங்க ஆலயச் சுற்றாடல் பராமரிக்கப்படுவதனையும் விதந்தும் இப்பிரதேசத்திற்கு இக்கோயில் ஒரு பெரும் சொத்து எனவும் மனம் திறந்தும் பாராட்டியுள்ளனர்.

1975இல் பர்மிங்காமில் வாழ்ந்த இந்துக்கள் வாரத்தில் ஒருநாள் தனியார் வீட்டில் வெங்கடேஸ்வரர் வழிபாட்டினை ஆரம்பித்தபோது தென்னிந்தியக் கோயிற் கட்டிடக் கலைப் பாணியில் கோயிலொன்று நிர்மாணிப்பதென்பது தூரத்துக் கனவு என எண்ணப்பட்டதாயினும் மதிப்பிட முடியாத அர்ப்பணிப்பு நிறைந்த இரவு பகலென உழைத்த பலரின் அயரா உழைப்பினாலும் இல்லையென்னாது வாரி வழங்கிய வள்ளல்களின் உயர்ந்த உள்ளத்தினாலும் அக்கனவு இன்று நனவாகி ஐக்கிய இராச்சியத்தில் மட்டுமல்ல ஐரோப்பாவிலேயே மிகப் பெரிய இந்து நிறுவனமாகவும் ஆன்மீகம், சேவை, கலை, கலாச்சாரம், சமூக ஒற்றுமை என எல்லா நிலையிலும் ஆங்கிலேயரும் மதித்துப் போற்றும் வகையில் மிகச் சிறப்பாக அரும்பணியாற்றும் பிரமாண்டமான அமைப்பாகப் பிரகாசிக்கின்றது.

*சான்றோன் ஆக்காத கல்வி சாமர்த்தியமாய்க் கழித்த சோம்பலேயாகும்.*

தொடர்ச்சி...

# உமாபதி சிவம் அருளிய திருவருட்பயன்



(விரிவான பொருளுரையும் தெளிவுரையும்)

முனைவர் ஆ. ஆனந்தராசன்

### 47. இருள் நீங்குவது குருவின் திருநோக்கால்

விடம்நகுலம் மேவினும் மெய்ப் பாவகனின் மீளும்
கடனில் இருள் போவதுஇவன் கண்.

**பொருள்:**

பாம்பு கடித்து ஏறிய நஞ்சானது, பாம்புக்குப் பகையாகிய கீரியே வந்து கடிபட்டவன் உடல்மீது விழுந்து புரண்டாலும் நீங்காது. ஆயின், மாந்திரிகன் ஒருவன் மந்திரத்தால் தன்னைக் கீரியாகப் பாவித்து அந்த மந்திர வடிவேயாக நின்று பார்க்கும் பார்வையினால் அந்த விடம் நீங்குவதாகும்.

உயிரில் உள்ள மலமாகிய இருள் நீங்குவதும் இம்முறைமையில் ஆகும். இறைவன் உயிர்க்கு உயிராக உடன் நின்ற போதிலும் உயிரிலுள்ள ஆணவ மலம் நீங்குவதில்லை. இறைவனாய் நிற்கும் ஞான குருவின் திருநோக்காலேயே அது நீங்குவதாகும்.

**சொற்பொருள்:**

விடம்- பாம்பு கடித்து ஏறிய நஞ்சு, நகுலம்- பாம்புக்குப் பகையாகிய கீரியே, மேவினும்- நேரே வந்து பாம்பு தீண்டியவனது உடல்மேல் விழுந்து புரண்டாலும் (நீங்காது. ஆனால்), மெய்ப்பாவகனின்- மந்திரத்தால் தன்னைக் கீரியாகப் பாவிக்கவல்ல உண்மையான மாந்திரிகனது பார்வையால், மீளும்- நீங்கும், கடனில்- முறைமைபோல, இருள்- ஆணவ மலமாகிய இருள், போவது- நீங்குவது, இவன்- (உயிர்க்கு உயிராய் உள் நிற்கும் சிவனால் அன்றி) சிவமேயாய் நிற்கும் ஞானகுருவின், கண்- திருநோக்கினால் ஆகும்.

**விளக்கம்:**

இறைவன்தான் ஆன்ம அறிவில் எப்பொழுதும் நீங்காமல் இருக்கிறானே. அவ்வாறு இருக்கின்ற அவன் உள்ளிருந்தபடியே ஆணவ மலத்தை நீக்கக் கூடாதா? என்று கேட்கலாம். அக்கேள்விக்கு விடையாகவே இச்செய்யுளை அமைத்துள்ளார் ஆசிரியர். மாந்திரிகனை உவமை காட்டி மேற்கூறிய ஐயத்தைத் தெளிவிக்கிறார்.

கருட பாவனை என்பது நூல்களில் சொல்லப்படுகிறது. அதனை அறிந்து கொண்டால் இச்செய்யுளில் கூறப்பட்டுள்ள பாவகன் நிலை எளிதில் விளங்கிவிடும்.

*கடினமான வேலைகளைச் செய்வதில் மகிழ்ச்சி அடைபவர்களே எப்போதும் புகழ் பெறுகிறார்கள்.*

மந்திர நூல்களில் உலகப் பொருள் ஒவ்வொன்றும் மூன்றாகக் கொள்ளப்படுகிறது. அவை பௌதிகப் பொருள், ஆன்மிகப் பொருள், தைவிகப் பொருள் என்பன. பௌதிகப் பொருள் என்பது உலகத்தில் நாம் கண்ணாற் காணும் பொருள். அப்பொருளுக்குரிய மந்திரம் ஆன்மிகப் பொருள் எனப்படும். அம் மந்திரத்தை இடங்கொண்டு பயன்தரும் அதி தெய்வம் தைவிகப் பொருள் எனப்படும்.

கருடனிடத்திலும் இவ்வாறு மூன்று உள்ளன என அறியலாம். நாம் காணும் கருடப் பறவை ஆதி பௌதிக கருடன். அதற்குரிய மந்திரம் ஆதி ஆன்மிக கருடன். அந்த மந்திரத்திற்குரிய அதி தெய்வம் ஆதி தைவிக கருடன். இங்கே அதி தெய்வம் என்றது சிவனது சக்தியேயாகும். அச்சத்தியே மந்திர வடிவாய் நின்று அம்மந்திரத்தைக் கணிக்கும் மாந்திரிகனுக்குப் பயன்தருகிறது.

மாந்திரிகன் அந்தச் சத்தியைத் தியானிக்கின்றான்; அந்தச் சத்தியையே தானாகப் பாவிக்கிறான். ஆன்மா சார்ந்ததன் வண்ணமாகும் இயல்புடையது என்பது நாம் அறிந்தது. அம்முறையில் மாந்திரிகனது ஆன்மா மந்திர வடிவாய் உள்ள சத்தியைத் தானாகப் பாவித்தால் அந்தச் சத்திமயமாய் ஆகிவிடுகிறது. அதனால் அவன் கருடனாகவே நிற்கிறான். அவனது உடம்பு கருடனாக மாறவில்லை. அவன் மந்திர கருடனை நாள்தோறும் தியானித்துப் பழகிய பயிற்சியினால் அவனது ஆன்மா அக்கருடனே தானாய் நிற்கிறது. எனவே கருடனாய் நிற்கிறான் என்பதற்குப் பொருள், மந்திர வடிவாய் நிற்கிறான் என்பதேயாகும். அவ்வாறு நின்று அவன் பாம்பினால் கடியுண்டவனைத் தன் மந்திரக் கண்கொண்டு பார்ப்பானாயின் விடம் நீங்கியொழியும். சிவசத்தியே மந்திர வடிவாய் நின்று விடத்தை நீக்குகிறது.

இக்கருடபகவானைப்போல மாந்திரிகன் மந்திரத்தால் தன்னைக் கீரியாகப் பாவிக்கின்ற பாவனையை இச்செய்யுளில் கூறியுள்ளார் ஆசிரியர். கருடபாவனை பற்றி மேலே சொன்ன அத்தனையும் இப்பாவனைக்கும் பொருந்தும்.

கீரியே நேரே வந்தும் பாம்பின் விடம் நீங்காமை, இறைவன் உயிரில் பொருந்தி யிருந்தும் உயிரிலுள்ள ஆணவ மலம் நீங்காமைக்கு உவமையாகும். மந்திர வடிவாய் நிற்கும் பாவகன் அருள்மயமாய் நிற்கும் குருவிற்கு உவமையாவான். பாவகனது மந்திரப் பார்வையால் விடம் நீங்குதல், குருவினது அருள் நோக்கத்தால் மலம் போவதற்கு உவமையாகும்.

இறைவன் சகலர் ஆகிய உயிர்களுக்கே இவ்வாறு குருமூர்த்தி வழியாக மலத்தைப் போக்கி ஞானத்தை உணர்த்துவான். சகலரினும் மேம்பட்ட வேறு உயிர்களுக்கு அவன் வேறு வகையில் உணர்த்துவான். அம்முறைகளை அடுத்த செய்யுளில் நாம் காணவிருக்கிறோம்.

### 48. மூவகை உயிர்களுக்கும் ஞானம் உணர்த்தும் முறை.

அகலர்த் தரும் அருளை; ஆர்க்கும் வினை நீக்கும்
சகலர்க்கு வந்து அருளும் தான்.

**பொருள்:**

இறைவன் விஞ்ஞானகலர் ஆகிய உயிர்களுக்கு உள்ளிருந்தே ஞானத்தை உணர்த்துவான்; பிரளயாகலர் ஆகிய உயிர்களுக்குத் தெய்வ வடிவில் முன்தோன்றி

*விசிறியை அசைக்காமல் காற்று வராது; வியர்வை சிந்தாமல் உயர்வு வராது.*

அவரைப் பிணித்துள்ள வினையை நீக்கி ஞானத்தை அருள்வான்; சகலர் ஆகிய உயிர்களுக்கு ஆசிரியர் வடிவில் வந்து அஞ்ஞானத்தைப் போக்கி மெய்ஞ்ஞானத்தை அருள்வான்.

**சொற்பொருள்:**

தான்- இறைவன், அகலர்(க்கு)- விஞ்ஞானகலர் ஆகிய அகலர்க்கு, அருளைத் தரும்- குருவாகி வராமலே உள்நின்று ஞானத்தை உணர்த்திவிடுவான், (பிரளயாகலர் ஆகிய அகலர்க்கு இறைவன் தனது இயற்கை வடிவத்துடன் முன்னே நின்று) ஆர்க்கும் வினை- அவரைப் பிணித்துள்ள வினையாகிய கட்டினை, நீக்கும்- அறுத்து ஞானத்தை உணர்த்துவான், சகலர்க்கு- (இனி, மேற்கூறிய இருவர் போலன்றி) மாயாமல பந்தம் உடையவராகிய சகலர்க்கு, வந்து- குரு வடிவில் பின்நின்று, அருளும்- அஞ்ஞானத்தைப் போக்கி மெய்ஞ்ஞானத்தை அருள்வான்.

**விளக்கம்:**

மூவகை உயிர்களும் இறைவன் உணர்த்தவே ஞானத்தைப் பெறும் என்பதும், அவர் தம் பக்குவ வேறுபாட்டிற்கேற்ப அவர்களுக்கு ஞானத்தை உணர்த்தும் முறை ஒரே வகையாக அமையாமல் வெவ்வேறாய் அமையும் என்பதும் இச்செய்யுளில் கூறப்பட்டன.

அகலர் பற்றியும், சகலர் பற்றியும் உயிரவை நிலையில் (செய்யுள் 12,13) விரிவாக அறிந்தோம். விஞ்ஞானகலரும், பிரளயாகலரும் அகலர் எனப்படுவர். அவ்விருவருக்கும் இறைவன் அருள்புரியும் முறைமை முதலடியில் கூறப்பட்டுள்ளது.

முதலடியில் இரண்டு வாக்கியங்கள் உள்ளன. முதல் வாக்கியம் விஞ்ஞானகலர் பற்றியது. இரண்டாம் வாக்கியம் பிரளயாகலர் பற்றியது. எனவே விஞ்ஞானகலர்க்கு (உள்நின்று) அருளைத் தரும்; பிரளயாகலருக்கு (முன்நின்று) ஆர்க்கும் வினையை நீக்கும் எனப் பொருள் கொள்ள வேண்டும்.

ஆணவம் ஆகிய ஒரு மலம் மட்டுமே உடையவர் விஞ்ஞானகலர். அம்மலமும் அவர்களிடம் மிக மெல்லியதாய் வாசனை அளவாய் நிற்கும். அஃது அவர்கள் அறிவை மயக்காது. ஆதலால் அவர்களுக்கு இறைவன் உயிர்க்குயிராய் உள்நின்று உணர்த்தினாலே போதும். அவர்கள் ஞானம் பெற்றுவிடுவர்.

பிரளயாகலரிடத்தில் ஆணவமலம் வன்மையாயும் இல்லாமல், மென்மையாயும் இல்லாமல், இடைப்பட்ட நிலையில் இருக்கும். அவர்களுக்கு வினையும் உண்டு. இவ்வாறு இருமலம் உடையவராயிருப்பர். இம்மலங்களால் ஓரளவு மயங்கும் நிலை அவர்களுக்கு இருக்கும். அவர்களில் பக்குவம் உடையவர்களுக்கு இறைவன் நான்கு தோள்களும், முக்கண்ணும், கறைமிடறும் ஆகிய தனது இயற்கை வடிவத்துடன் முன்தோன்றி ஞானத்தை உணர்த்துவான்.

இனி, சகலர் என்போர் மும்மலம் உடையோர். ஆணவமலம் அவர்களை வன்மையாய்ப் பற்றியிருக்கும். வலிய வினையும் அவர்களைப் பிணித்திருக்கும். பெரு மயக்கத்தைச் செய்கின்ற பிரகிருதி மாயையின் தொடக்கில் அகப்பட்டவர்கள் அவர்கள். அவர்களில் பக்குவப்பட்டவர்களுக்கு ஞானத்தை வேறு முறையில்த்தான் உணர்த்தவேண்டும்.

*உன்னிடமுள்ள திறமை எவ்வளவு சிறிதாக இருந்தாலும் பயன்படுத்தத் தயங்காதே.*

பிரளயாகலருக்குப்போல இவர்களுக்கும் நேர் நின்று அருள்புரிய இறைவன் தனது உண்மை வடிவில், அஃதாவது நான்கு தோள்களும் நெற்றிக்கண்ணும் நீலகண்டமும் ஆகிய வடிவில் முன்னே தோன்றினால் அவர்கள் அதைக் கண்டு அஞ்சி விடுவர். மக்கள் வடிவிற்கு வேறுபட்ட எந்த வடிவமும் அவர்களுக்கு அச்சத்தையே தருவதாகும். அது பற்றியே சகலராகிய பக்குவான்மாக்கள் அச்சமின்றி அணுகுதற்பொருட்டு இறைவன் தனது உண்மை வடிவில் தோன்றாமல் ஆசிரியர் வடிவில் மறைந்து நின்று ஞானத்தை உணர்த்துவான் என்பது கூறப்பட்டது.

(தொடரும்...

**தொண்டையூர் வெண்மணற் குன்றமே போற்றி**

சித்தி மிகு சரணம் தந்த சக்திவேல் பாதம் போற்றி
சிவலோக ஞானமேந்தும் சிங்கார வேலா போற்றி
சிவகாமி கருணையூட்டும் செம்பவளக் குன்றமே போற்றி
சிந்தை தெளிந்தெமை யாண்ட செஞ்சுடர் வேலா போற்றி.

பந்தமிகு வாழ்வை யார்த்த பவளமணி மார்பாபோற்றி
பாசமிகு நேசங்கொண்ட பார்வதி மைந்தா போற்றி
பாற்கடற் பள்ளி கொள்ளும் பார்த்திபன் மருகா போற்றி
பாவவினை பண்டுற் றோடக் கூர்வேல் கொள்பவனே போற்றி.

சேருமிப் புவனம் யாவும் செழிப்புற்று நின்றாய் போற்றி
சிந்தையில் எழுந்த ஞானச்சுடராக மலர்ந்தாய் போற்றி
சென்றிடும் பரம்சோதி செழுங்குன்றக் கடலேயானாய் போற்றி
சேர்விலாப் பதியே யோக போகமே தந்தாய் போற்றி.

மந்திர வடிவே போற்றி மாறு கொள்வதனா போற்றி
மருட்சிசேல் மங்கைஞான வள்ளியை வனத்திலணைத்தாய் போற்றி
மாயவன் மருகனாகி வேங்கையாய் முளைத்தாய் போற்றி
வேழ மருப்பினை முறித்த மாயவன் மருகா போற்றி.

மாங்கனிக் காகவன்று மயூரத்தில் மண்டலம் சுற்றிவந்தாய் போற்றி
மாதவப் பொருளே நின்றன் பதமலர் தொண்டைமானாற்றில் ஒளிருதே போற்றி
மன்றாடி மைந்தா மயில் வாகனச் சுடரொளியேற்றாய் போற்றி
மோகனச் சீலமே மொய்ம் பூஷண ஞானபாதமே பரனே போற்றி.

தொண்டையூர் வெண்மணற் குன்றமே குகனே போற்றி
தத்தி மித்தோமென கதிர்காமர் முன்னின்ற கடவுளே போற்றி
எத்துயர் வந்தாலும் அத்துயர் மாய்ந்திடப் பேரவையுற்றாய் போற்றி
பெரும் பசிப்பிணியழித்தருளுயரறிவுக் கலைமிகுத்தாய் போற்றி! போற்றி!!


-க. தெய்வேந்திரம்-

*வாழ்க்கையை வளமாக்க விரும்பினால் காலத்தை வீணாக்காதே.*

# முருகனை வணங்குவோம்

– செல்வி பா. வேலுப்பிள்ளை அவர்கள் –

எங்கே நினைப்பினும் அங்கே முன் வந்து நிற்பவன் முருகன். இந்த முருகன் யார்? அசுரர்களைக் கொன்றொழித்து தேவர்களின் துயரைத் தீர்க்க இறைவனால் தோற்றுவிக்கப்பட்டவன். இறைவனின் நெற்றிக்கண்ணிலிருந்து தோன்றிய ஆறு பொறிகளுமே ஆறுமுகன். இறைவனின் அம்சமானவன். கந்தபுராணம்,



"...ஆதலின் நமது சக்தி அறுமுகன் அவனும் யாமும்
பேதகம் அன்றால் நம்போல் பிரிவிலன் யாண்டும்
நிற்பான்" எனச் சொல்கிறது. ஆகவே சிவனும் முருகனும் ஒருவரே.

"...என்றும் இளையாய் அழகியாய்
ஏறூர்ந்தான் ஏறு" எனவரும் திருமுருகாற்றுப்

படைவரிகள் என்றும் முருகன் இளமையானவன் எனச் சொல்கிறது.

"அருவமு முருவு மாகி
அநாதியாய் பலவா யொன்றாய்
பிரமமாய் நின்ற சோதிப்
பிழம்பதோர் மேனியாகக்
கருணைகூர் முகங்க ளாறும்
கரங்கள் பன்னிரண்டுங் கொண்டே
ஒரு திரு முருகன் வந்தாங்
குதித்தனன் உலக முய்ய"

அடுத்து உலகம் உய்ய வந்த முருகன் அழகு வடிவைப் பார்ப்போம்.

"திருவடியும் தண்டையும் சிலம்பும் சிலம் பூடுருவப்
பொருவடி வேலும் கடம்பும் தடம்புயம் ஆறிரண்டும்
மருவடிவான வதனங்க ளாறும் மலர்க் கண்களும்
குருவடி வாய்வந் தென்னுள்ளங் குளிரக் குதிகொண்டவே"

ஏழை ஒருவன் செல்வந்தனை நாடிப் பணிந்து உபசார வார்த்தைகள் கூறி தன் கஷ்டங்களைக் கூறி உதவி கேட்கும்போது கருணை உள்ளவர் உதவலாம்; அல்லாதவர் புறம் தள்ளிவிடலாம். ஏழை என்ன நினைப்பான்? முருகா இந்தக் கஞ்சனிடமா உதவி கேட்டு வந்தேன்? என் நிலைகண்டு இரங்குவார் யார்? இறைவனை வாழ்த்தி வணங்கி தன் நிலை கூறி மனக்கவலைகள், வேண்டுவன கேட்டால் பயன் கிடைக்கும் என எங்கோ யாரோ சொன்னதைக் கேட்டிருக்கின்றான். மனதில் ஒரு தெளிவு. வேண்டுவார் வேண்டுவதைத் தருபவன் இறைவன்.

கச்சியப்பர், நக்கீரர், குமரகுருபரர், அருணகிரி யாவரும் முருகனின் அநுபூதி பெற்றவர்கள். கருத்தாழமுள்ள பாடல்களைத் தந்துள்ளனர். அவற்றை மெய்யுருகப் பாடினால் மனதில் அமைதியும், நினைப்பன நடந்தே தீரும். ஆகையால் நாம் அனைவரும் முருகனை வணங்குவோம்.

"முருகா! உன்னை யொழிய ஒருவரையும் நம்புகிலேன்
பின்னை யொருவரை யான் பின் செல்லேன்
என் கொடிய வினைகள் கவலைகளைத் தீர்ப்பாய்"

முதலில்,

"ஆறிரு தடந்தோள் வாழ்க
ஆறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க
குக்குடம் வாழ்க செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க
யானை தன்னணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க
வாழ்க சீரடியா ரெல்லாம்"

என வாழ்த்துவோம்.

"மூவிரு முகங்கள் போற்றி
முகம் பொழி கருணை போற்றி
ஏவருந் துதிக்க நின்ற
ஈராறு தோள்கள் போற்றி காஞ்சி
மாவடி வைகுஞ் செவ்வேள்
மலரடி போற்றி யன்னான்
சேவலும் மயிலும் போற்றி
திருக்கை வேல் போற்றி போற்றி"

பன்னிரு கரத்தாய் போற்றி பசும்பொன் மாமயிலாய் போற்றி
முன்னிய கருணையாறு முகப்பரம் பொருளே போற்றி
கன்னியர் இருவர் நீங்காக் கருணை வாரிதியே போற்றி
என்னிரு கண்ணே கண்ணுளிருக்கு மாமணியே போற்றி

என வணங்குவோம்.

உலக வாழ்வில் மனிதன் பல கஷ்டங்கள், துன்பங்களை அனுபவிக்க நேரிடும். நாமும் நமக்குள்ள கவலைகள், கடன் தொல்லை, நோய், பிணி, பகைவர் தொல்லை இப்படிப் பலவற்றால் கஷ்டப்படலாம். பேராசை எனும் பிணியால் பிணிபட்டு வினையேன் உழலுகின்றேன். "எம் தாயும் எனக்கு அருள் தந்தையும்நீ சிந்தா குலமானவை தீர்ப்பாய்" நாலு காசு சம்பாதிக்கும் தொழிலையும் இழந்து கைப்பொருளும் இழந்து குடும்பம் நிர்க் கதியாய் விட்டதே. முருகா! நீதான் ஒரு வழிகாட்டு என முருகனிடம் மனமுருகி வேண்டுதல் செய். வேண்டுவார் வேண்டுவதை இறைவன் தருவான். முன் வினைப்படி பயன் கிடைக்கும்.

*ஒருவன் தனக்காக, தன் வாழ்க்கைக்காக உழைக்கும்போது மனிதனாகிறான்.*

முருகனை நம்பு. நாள் நாளாக உன் மனம் நிம்மதியடையும். "சேவலும் மயிலும் போற்றி திருக்கைவேல் போற்றி" எனச் சொல்கிறோமே! ஏன்? அதையும் தெரிந்து கொள்வோம். அறியாமை என்னும் உறக்கத்திலிருந்து எழுப்புவது சேவல். (அறியாமை- இருள்) நம் பாசங்களை அறுப்பது மயில். மயிலின் வாயில் கவ்வியுள்ள பாம்பும் காலின்கீழ் மிதிபடும் பாம்பும் மாயையை விழுங்கியும் அழித்தும் இல்லாதொழிக்கிறது. மாயையுள் சிக்காவிடின் கன்மம் இல்லை. வேல் நமது ஆணவமாகிய அகங்காரத்தை கூறுபோட்டு அறிவைத் தருகிறது. அழிக்கப்பட்ட சூரனின் உடல் ஒரு பாதி சேவல்; ஒரு பாதி மயிலாக மாறி முருகனைத் தாங்கி நிற்கின்றது. ஜீவாத்மாவில் உள்ள மும்மலங்கள் திருவருளின் துணையினால் அழிக்கப்பட்டு இறுதியாக இறைவனிடம் சரணாகதியடையும் என்பதே சேவல், மயில், வேல் மூன்றையும் குறிக்கிறது.

அடுத்து முருகன் கருணையால் மனதில் உள்ள கவலைகள், கஷ்டங்கள் தீர்ந்துவிட்டன. பிள்ளைகட்கும் நல்வழி காட்டி அவரவர்க்குரிய பொறுப்புக்கள், கொடுத்துக் கரையேற்றி விட்டேன். ஆனால் மரணபயம் ஒன்று உள்ளது. அதற்கு நாம் என்ன செய்ய வேண்டும்? பற்றுக்கள் யாவற்றையும் படிப்படியாக விடவேண்டும்.

அதற்கு ஒரு வழியுண்டு. என்ன? முருகனுடைய நாமங்களையும் "ஓம் சரவணபவ" எனும் ஆறெழுத்து மந்திரத்தையும் மனதில் ஜெபிக்க வேண்டும். கச்சியப்பர் அருளிய கந்தபுராணம், அருணகிரியாரின் கந்தரலங்காரம், கந்தரநுபூதிப் பாடல்கள், திருப்புகழ், தேவராஜரின் கந்தசஷ்டிக் கவசம், திருமுருகாற்றுப் பாடல்களை மனமுருகிப் பாடவேண்டும்.

"பேராசை எனும் பிணிபட்டு ஓரா வினையேன் உழலத் தகுமோ"
"இரவும் பகலும் துதிசெய்து இருதாள் பரவும் பரிசே தருவாய்"

எனக் கந்தரநுபூதியிலும்?

"இறவாமல் பிறவாமல் எனையாண்டு பெருவாழ்வைத் தருவாய்"
"இருவினையில் மதிமயங்கித் திரியாதே எழுநரகில் உழலு
நெஞ்சுற்றலையாதே"

"காலன் எனை அணுகாமல் உனதிரு காலில் வழிபட அருள்வாயே"

எனத் திருப்புகழ் வரிகளை நினைவிற் கொள்வோம்.

வயோதிபம் வந்து நோய் பிணிகளால் பாய் படுக்கையாகி மனது துன்பமடையும்போது கந்தரலங்காரம் படியுங்கள். அருணகிரிநாதரே சொல்கிறார்.

"சலங்காணும் வேந்தர் தமக்கும் அஞ்சார் யமன் சண்டைக் கஞ்சார்
துலங்கா நரகக்குழி அணுகார் துட்ட நோயணுகார்
கலங்கார் புலிக்கும் கரடிக்கும் யானைக்கும் கந்தனன்னூல்
அலங்காரம் நூற்றுளொரு கவிதான் கற்றறிந்தவரே"

"சூலம் பிடித்தெம பாசம் சுழற்றித்
தொடர்ந்து வரும்
காலன் தனக்கொரு காலுமஞ்சேன்
கடல் மீதெழுந்த

ஆலங் குடித்த பெருமான்
குமாரன் ஆறுமுகவன்
வேலுந் திருக்கையு முண்டே
நமக்கொரு மெய்த்துணையே"

"சூலாயுதம் கொண்டு யமதூதர்
வந்தென்னைச் சூழ்ந்து கொண்டால்
வேலாயுதா என்று கூப்பிடுவே
னந்த வேளை தன்னில்
மாலான வள்ளி தெய்வானையோடு
மயில் விட்டிறங்கி
காலால் நடந்து வரவேண்டும்
எந்தனருகே"

"நாளென் செயும்வினை தானென்
செயுமெனை நாடிவந்த
கோளென் செயுங் கொடுங் கூற்றென்
செயுங் குமரேசரிரு
தாளும் சிலம்பும் சதங்கையும்
தண்டையும் சண்முகமும்
தோளுங் கடம்பு மெனக்குமுன்
னேவந்து தோன்றிடினே"

இப்பாடல்களைத் தினமும் படிப்பதால் நோய் பிணி, பாவவினை, மரணபயம் நீங்கும். இன்னும் கந்தசஷ்டி கவசம் காலையும் மாலையும் பாராயணம் செய்வதால்,

"துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம்போம் நெஞ்சில்
பதிப்போர்க்கு செல்வம் பலித்துக் - கதித்தோங்கும்
நிஷ்டையும் கைகூடும் நிமலரருள் கந்தர்
சஷ்டி கவசம் தனை"

இப்படி முருகன் அருள்பெற்ற பாலன் தேவராஜன் பாடியுள்ளார்.

"பாடும் பணியே பணியாய்க் கொள்வோம்"
வேலும் மயிலும் துணை.
சரணம் சரணம் ஷண்முகா சரணம்.

---

**அருள்**

தன்னை உணரத் தெய்வீக அருள் கட்டாயம் தேவை. ஆனால் உண்மையான பக்தனுக்கு அல்லது யோகிக்கு மட்டுமே அருள் கிட்டும். விடுதலைப் பாதையில் இடைவிடாது உழைப்பவர்களுக்கே அது தரப்படுகிறது. அருள் எப்போதும் உண்டு. ஆனால் பயிற்சியும் அவசியம். முயற்சி செய்து ஆன்மாவில் நிலைத்தல் என்பது, அடங்காது அலைந்து திரியும் காளையை, புல்லைக் காட்டி தறியில் கட்டி வைப்பது போன்றது. -ரமணர்-

சிறு சிறு பகுதிகளாகப் பிரித்துக்கொண்டு செய்தால் எந்த வேலையும் கடினமானதாக இருக்காது.

# பகவத்கீதையின் உலகம் தழுவிய பரந்த நோக்கு

(தொடர்ச்சி...

– சுவாமி கிருஷ்ணானந்தா –

தமிழில்: திரு பூ. சோதிநாதன் அவர்கள் –

### அத்தியாயம் – 04

## எல்லை இல்லாததை அடைவதற்கான போராட்டம்

### 06. நிகழ்ச்சிகளின் தொடர்ச்சி.

மனிதன் வாழுவதாக ஒருபோதும் சொல்லப்படுவதில்லை. அவன் இன்னொன்றாக ஆகிறவனாகவே சொல்லப்படுகின்றான். ஒருசில நிமிடங்களுக்கேனும் நாம் தொடர்ச்சியாக எம்மோடு இருப்பதில்லை. புத்தர் பெருமான் தனது செயலில் கூறியிருப்பதுபோல எல்லாமே மாறிக்கொண்டு இருக்கின்றன. எல்லாம் கணத்துக்குக் கணம்தான் இருக்கின்றன. எல்லாம் ஒன்றோடு மற்றையவை தொடர்புபட்டுக்கொண்டு இருக்கின்றன. நிகழ்ச்சிகள் ஒன்றன்பின் ஒன்றாக நிகழ்ந்துகொண்டு இருக்கின்றன. எதுவும் நிலையாக இருப்பது இல்லை. மாறிக்கொண்டிருக்கும் இந்தப் பிரபஞ்சத்தில் நாமும் ஒரு பகுதியாக இருப்பதனால் எம்மிடத்தில் உண்மையானதாக எதுவும் இருப்பதில்லை. இதனாலேதான் பௌத்த தத்துவயியலாளர் ஆன்மா என ஒரு பொருள் இல்லை என்கின்றனர். விடயங்களின் தன்மையைச் சரியாகப் புரிந்துகொள்ளாமையினாலேதான் நாம் "நான்" என்பதை அப்படிப் புரிந்துகொள்வதாகக் கொள்ளவேண்டும். நாம் எம்மை மனமும் உடலும் சேர்ந்த ஒரு கலவையாகவே கருதிக்கொள்கின்றோம். இதனையே உண்மையான ஆத்மாவாகக் கருதமுடியாது. மனமும், உடலும் இயற்கை விதிகளின்படி இயங்குவதால் இக்கலவைக்குப் பிறப்பும் இறப்பும் உண்டு. தொடர்ந்து பிறந்து இறந்து கொண்டிருக்கும் நிகழ்ச்சியை நாம் பரிணாம வளர்ச்சி என்று அழைக்கின்றோம். மரணம் என்கிற ஒரு நிகழ்ச்சியும் பிறப்பு என்ற மற்றொரு நிகழ்ச்சியும் தொடர்ந்து வருவதற்கு நிகழ்ச்சிகளின் தொடர்ச்சி என நாம் வேறொரு பெயர் கொடுக்கின்றோம்.

### 07. எல்லைக்கு உட்பட்டது.

நிகழ்ச்சிகளின் தொடர்ச்சி என்பது ஒவ்வொரு பொருளினதும், நிகழ்ச்சியினதும் எல்லைக்கு உட்பட்ட தன்மையைக் குறிக்கின்றது. எல்லைக்கு உட்பட்ட எதுவும் வேறு எல்லைக்கு உட்பட்டதோடு சேர்ந்து எல்லை இல்லாததாக மாறக்கூடும் என்ற ஒரு மாயப் போக்கே உள்ளது. இதனாலேதான் நாம் இரண்டு பொருள்கள் இணையும்போது அவற்றின் எல்லைக்கு உட்பட்டதன் தன்மை அழிக்கப்படுகின்றது என்ற நம்பிக்கையில் பொருள்களை விரும்புகின்றோம். எல்லைக்கு உட்பட்டவை இரண்டு இணைந்து எல்லையில்லாததாக ஒருபோதும் மாறுவதில்லை. மில்லியன் கணக்கான எல்லைக்கு உட்பட்டவை இணைந்தாலும் கூட அவை ஒருபோதும் எல்லையில்லாதது ஆக மாறமுடியாது.

ஒவ்வொரு நல்ல செயலும் நல்ல எண்ணமும் முகத்தில் ஒரு அழகைக் கொடுக்கிறது.

எல்லைக்கு உட்பட்டவற்றை விபரிக்கும் முறையினால் எல்லை கடந்த உண்மையை விபரிக்க முடியாது. எல்லை கடந்தது கணித விதிகளைக் கொண்டு அளவிடுவதற்குப் பொருத்தமான கணியமாக இருப்பதில்லை. எமது புலன்கள் காலம்- வெளி என்ற கணிதஅடிப்படைகளின் மூலமாகவே செயற்படுகின்றன. தருக்கவாதம் கணித அடிப்படையிலேயே அமைந்துள்ளது. நாம் உலகத் தோற்றப்பாட்டுக்குள் முழுகிக்கொண்டு ஆன்மீக அபிலாட்சைகளில் ஈடுபட விரும்புகின்றோம். அதாவது உலகினால் தளைப்பட்டுக் கொண்டே உலகை வெல்ல விரும்புகின்றோம். உலகம் என்ற எல்லைக்கு உட்பட்டதையும், வாழ்க்கை என்ற எல்லைக்கு உட்பட்டதையும் வெற்றிகொள்ளும் எமது விருப்பம் எல்லைக்கு உட்பட்ட உலகத்தினாலேயே நெறிப்படுத்தப்படுகிறது. நாம் மீண்டும் மீண்டும் ஒரு நச்சுச் சுற்று வட்டத்திற்கு உள்ளேயே இயங்குவதால் மீண்டும் ஆரம்பித்த இடத்திற்கே வந்து சேருகின்றோம். அந்த வட்டத்திற்குள் இருந்து எம்மால் வெளிவர முடிவதில்லை. அருச்சுனனது வாதங்களும் ஒரு நச்சுச் சுற்றுவட்டத்திற்கு உள்ளே நிற்கின்ற வாதங்களாகும்.

### 08. உறவுகளும் போராட்டமும்.

இந்த உலகத்தோடு தொடர்புபட்ட ஒரு நோக்கத்திற்காகத்தான் நாம் கடவுளை விரும்புகின்றோம். உலகத் துன்பத்தைக் கடப்பதற்கான விருப்பம், எல்லைக்கு உட்பட்ட உடலோடு கூடிய உயிர் வாழ்க்கையை வெல்லுவதற்கான விருப்பம் என்ற இரண்டுக்கும் பின்னால் எல்லை இல்லாததற்கான விருப்பம் உள்ளது. இது நாம் எல்லைக்கு உட்பட்டதை நியாயப்படுத்துவதற்காகவே எல்லையில்லாததை விரும்புவதாக அமைகிறது. அதாவது எமது புலன்கள் உண்மை எனக் கருதுபவற்றைக்கொண்டு நாம் விரும்புவதை உறுதிப்படுத்திக் கொள்வதாகவே அம்முயற்சி அமைகிறது. அத்துடன் கடவுளை அடையும் எண்ணத்தில்கூடச் சமூக விழுமியங்கள், உளவியல் விழுமியங்கள், உடல்ரீதியான விழுமியங்கள் என்பன கட்டுப்படுத்தும் காரணிகளாக வந்துவிடுகின்றன. இதனால் நாம் மக்களுக்காகவும், எமது அகங்காரத்தைத் திருப்தி செய்வதற்காகவும் இயல்பான உலகத்திற்காகவும் கடவுளை விரும்புகின்றோம் என்றே தோன்றுகிறது. ஆச்சரியப்படும் முறையில் அருச்சுனன் வாழ்க்கைப் போராட்டத்தில் இருந்து விடுபடப் பார்க்கின்றான். அந்தப் போராட்டம் தனிப்பட்ட முறையிலும், இருக்கின்ற எல்லா வகையான உறவுகளையும் கொண்ட உலகத்திலும் மேற்கொள்கின்ற ஒரு போராட்டம் ஆகும்.

### 09. மாயை.

உறவுகளைப் பற்றியதே புரிந்துகொள்வதற்கு மிகக் கடினமான விடயம் ஆகும். உறவு என்ற வார்த்தைக்கு நாம் நன்கு பழக்கப்படுத்தப்பட்டு இருக்கின்றோம். "நான் உனது உறவினன்", "நீ எனது உறவினன்", நான் உனது சகோதரன்", "நீ எனது சகோதரன்" என்பவற்றில் இந்த வார்த்தையின் உபயோகத்தைக் காணலாம். உண்மையில் இது ஒரு வகையான உறவே. ஆனால் இது அவ்வார்த்தைக்கு உண்மையான பொருளை எடுத்துக்கொள்ளாமல் நாம் உரையாடுவதும், கருதிக்கொள்வதுமாகும். அந்த வார்த்தை தொடர்புபடுத்துகின்ற இரண்டு விடயங்களின் இணைப்பையும் விலக்கி விடுவதால் அந்த உறவைப் புரிந்துகொள்வது மிகவும் கடினமாகும். நான் உனது உறவினனாயின் அந்த

*அடக்கத்திலிருந்து அறமும் அறத்திலிருந்து அனேக நன்மைகளும் உண்டாகின்றன.*

உறவின் அர்த்தத்தை விளக்குவது எனக்கு மிகக் கடினமானதாக இருக்கும். நாம் பேசிக்கொள்கின்ற உறவு இலக்கண அர்த்தத்தோடு ஒரு வார்த்தை ஆகவே நின்றுவிடுகிறது. ஆனால் அதில் எந்தவிதமான தத்துவ நியாயப்படுத்தலும் இருக்காது. நான் உனது உறவினன் என்று சொல்லும்போது நான் உன்னோடு இணைந்து ஒன்றாகி உள்ளேன் என்பது அதன் அர்த்தம் இல்லை.

"அ" என்பது "ஆ" என்பதோடு நெருங்கிய உறவு உடையதாக இருப்பின் அதிலிருந்து "அ" என்பது "ஆ" என்பதோடு இணைந்துள்ளமை பொருளன்று. அவை இரண்டுக்கும் இடையே உறவு இருக்குமாயின் அவற்றுக்கிடையே வித்தியாசம் இருக்கும். "ஆ" என்பதில் இருந்து "அ" என்பது வித்தியாசம் இல்லாதது எனின் அங்கு உறவு இருக்க முடியாது. அவை இரண்டும் ஒன்றேயாயின் அவையிரண்டும் உறவு உடையன என நாம் இரண்டுபற்றிப் பேசவேண்டிய அவசியம் இல்லை. ஆனால் அவை இரண்டும் முற்றும் வித்தியாசமானவை எனின் அங்கும் உறவு இருக்கமுடியாது. எனவே உறவு என்பது எம்முன் புரியமுடியாத ஒரு விடயமாகவே உள்ளது. எமது வாழ்வைத் தளைப்படுத்தும் இந்த அடிப்படை விடயத்தினால் முழு உலகமுமே எமக்குப் புதிராக உள்ளது. இதனைத்தான் மாபெரும் தத்துவஞானிகள் சிலசமயம் மாயை என்று அழைக்கின்றனர்.

**10. சமுக உறவால் சாத்தியமில்லை.**

மாயை என்பதனை உண்மை அற்றது அல்லது போலியானது என்று கூறலாம். நாம் முற்றும் ஆதரவற்றவர்களாக இருக்கும் அளவுக்கு மாயையானது புரிய முடியாது இருக்கும்வரை அது எம்மைக் கட்டுப்படுத்தும். எனவே மாயையைப் போன்ற உறவை அடிப்படையாகக் கொண்ட வாதங்கள் இறுதியில் தோற்றுப் போகின்றன. இதேபோலப் பொருள்களுக்கு இடையேயான உறவுத் தத்துவத்தை நியாயப்படுத்தவும் முடியாது. எனவே உறவுகளை அடிப்படையாகக் கொண்ட எந்த வாதத்தின் வலிமைக்கும் நியாயப்படுத்தல் இருக்கமுடியாது. எல்லாவிதமான தருக்கமும் ஒரு வாதத்தின் எழுவாய் பயனிலைகளுக்கு இடையேயான உறவின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட கட்டமைப்பே அன்றி வேறல்ல. ஆனால் எழுவாயும் பயனிலையும் தொடர்புபடுத்தப்பட முடியாதன ஆகும். அவை தொடர்பு படுத்தப்பட முடியாததெனின் அங்கே தருக்கம் இருக்க முடியாது. தருக்கம் இல்லை எனின் அங்கே வாதம் இருக்க முடியாது. வாதம் இல்லை எனின் அங்கே எவ்வித நியாயப்படுத்தலும் இருக்க முடியாது. நியாயப்படுத்தல் இல்லை எனின் இவ்வுலகில் எதுவும் சாத்தியமில்லை.

(தொடரும்...

## குருபூஜை தினங்கள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஒக்டோபர் | 02 | புரட் | 16 | ஞாயிறு | சங்கரபண்டிதர் |
| ஒக்டோபர் | 14 | புரட் | 28 | வெள்ளி | கடையிற்சுவாமி |
| ஒக்டோபர் | 30 | ஐப் | 14 | ஞாயிறு | மெய்கண்டதேவர் |
| நவம்பர் | 21 | கார் | 06 | திங்கள் | ஆறுமுகநாவலர் |
| நவம்பர் | 24 | கார் | 09 | வியாழன் | மெய்ப்பொருளார் |

*அரிய சாதனைகள் வலிமையினால் அல்ல, விடாமுயற்சியால்த்தான் சாதிக்கப்படுகின்றன.*

# இறைவனும் உலகமும் மனிதனும்

— திருமதி பரமேஸ்வரி நடராஜா அவர்கள் —

என்னுள்ளே எழுந்தருளி இயங்குகின்ற இறைவா
தன்னையறிந்து இன்பமுற தானே குருவாகி
முன்னைப் பிறவி வேரறுத்த விநாயகனே
அன்னை தந்தை தெய்வமென்ற ஆனைமுகனே காப்பு.

இறைவன் முழுமையான பூரணமான, பகுக்க, அழிக்க, சிதைக்க, மறைக்க முடியாத உண்மைப்பொருள். இது உண்மை, இது சத்தியம், இது என்றும் உள்ளது. உலகம் என்பது இந்த இறைவனால் சிருஷ்டிக்கப்பட்டது. இறைவனால் சிருஷ்டிக்கப்பட்ட உலகத்தை நாம் ஏன் மாயை என வெறுக்கின்றோம்? உலக வாழ்வை ஏன் வெறுக்கின்றோம்? உலகம் துன்பமயமானது என்ற அச்சமே இந்த வெறுப்புக்குக் காரணம் ஆகின்றது.

சிருஷ்டி கர்த்தாவான இறைவன் இந்த உலகைச் சிருஷ்டித்தது விளையாடி மகிழ்வதற்காகவே. அந்த இறைவனின் திருவிளையாடலே இந்த உலகச் சம்பவங்கள் யாவும். இதை அறிந்துகொண்டு இன்பமாக வாழும் ஆற்றல் மனிதனுக்கு மட்டுமே உண்டு. இதனாலேயே மனிதப் பிறவி உயர்ந்த பிறவியாகக் கூறப்படுகிறது. உலகில் சிருஷ்டிக்கப் பட்டவை எல்லாம் எப்போதும் ஒன்றுபோல் இருப்பதில்லை. ஒவ்வொரு வினாடியும் உலகில் மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டேயிருக்கின்றன. நேற்றைய காட்சி இன்றில்லை. இன்றைய காட்சி நாளை இல்லை. இவையெல்லாம் தானாகவே நடக்கின்றது. மனிதன் இவற்றிற்குக் கர்த்தா அல்ல. வந்ததையும் போனதையும் மனத்தில் கொள்ளாமல் நேற்று நடந்ததையும், நாளை நடக்க இருப்பதையும் மனதில் வைக்கும்போது மனதில் சுமை அதிகரிக்கின்றது. இவற்றைத் தள்ளி வைத்துவிட்டு இன்றைய பொழுது இறைவனால் நமக்கு அளிக்கப்பட்ட நன்கொடை என எண்ணி வாழ்ந்தால் உலக வாழ்வைக் கண்டு அஞ்சவேண்டிய அவசியமில்லை.

இறைவன் ஒன்று முழுமுதல். மனிதனுக்கு மட்டுமே மனம் உண்டு. மனத்தை உடையவன் ஆதலால் மனிதன் எனப்படுகின்றான். இந்த மனது பூச்சியம். இங்கே எதுவும் இல்லை. காணும் காட்சிகளைப் பற்றிக்கொள்வதாலும் புறப்பொருட்களில் ஆசை வைப்பதாலும் அவற்றைப் பற்றிச் சிந்திப்பதாலும் எண்ண அலைகள் தோன்றி மனம் சலிப்படைகின்றது. காட்சிகள் மாறி மாறி வந்துபோய்க் கொண்டிருக்கும். இவற்றைப் பற்றிக்கொண்டால் மனம் அலையும் சலிக்கும். இறைவனைப் பற்றிக்கொண்டால் அது சலியாத மனது ஆகும். அது எப்போதும் தெளிவாக இருக்கும். இந்த ஒன்றாகிய இறைவனுக்குப் பக்கத்தில் அதாவது இடது பக்கத்தில் மனிதன் நின்றால் இறைவன் 1 மனிதன் 0 இதன் பெறுமதி 10 என்றாகிறது. இந்தப் 10ஐ உருவடிவாகப் பார்த்தால் இறைவன் பாதி மனிதன் பாதி. ஆனால் பெறுமதியளவில் இறைவன் பூரணம். மனிதன் பூச்சியம். இறையருளால் மனது நிரப்பப்படும்போது அங்கே தீய சிந்தனைகட்கு இடமில்லை. நற்சிந்தனை, இறைசங்கற்பம் தோன்றுகின்றது.

இந்தப் 10றகுப் பின்னால் எத்தனை பூச்சியங்கள் சேர்கின்றனவோ அத்தனை பெறுமதி கூடிக்கொண்டே போகின்றது. உ+ம்- 10, 100, 1000, 10000, 100000 இவ்வாறு.

*தவறுகளை ஒப்புக்கொள்ள மறுப்பதைவிட வேறு அவமானமில்லை.*

முன்னால் இருக்கும் 1ஐ எடுத்துவிட்டால் (விலக்கி) இதற்கு எந்தப் பெறுமதியும் இல்லை. ஆகவே மனத்தால் இறைவனைப் பற்றிக்கொண்டு முன் வைத்து எந்தக் காரியத்தைச் செய்தாலும் மனக் குழப்பமின்றித் தெளிவான சிந்தனையுடன் செய்ய முடிகின்றது. இதனால் அவன் காரியசித்தியடைகின்றான். வாழ்வைப்பற்றிய அச்சம் நீங்கி ஆனந்தம் உதயமாகின்றது. இந்த இறைவனாகிய 1ஆல் பிரபஞ்ச மனதாகிய அத்தனை மனங்களையும் நிரப்பினாலும் 1 தன் பூரணத் தன்மையை இழப்பதுமில்லை. அழிந்து இல்லாமற் போவதுமில்லை. இந்த உண்மையைக் கொடுக்கக் கொடுக்க இறைசக்தி பெருகுமேயன்றிக் குறையாது. எந்த மனிதனும் மூல முதலாகிய இறைவனைப் பற்றிக் கொண்டால் அவன் பூரணன் ஆகின்றான்.

உலகியல் அறிவில் உதாரணமாக ஒரு வைத்தியருக்கு உடலைப் பற்றிய அறிவு மேலோங்கியுள்ளது. உள்ளுறுப்புக்கள் ஒவ்வொன்றும் எவ்வெவ்விடத்தில் எவ்வாறு இணைக்கப்பட்டுள்ளது, எவ்வாறு ஒன்றுக்கொன்று தொடர்புகொண்டு இயக்கம் சீராக அமைகின்றது. இரத்தச் சுற்றோட்டம் எவ்வாறு நிகழ்கின்றது. உணவு எவ்வாறு சீரணமாகின்றது. கழிவு எங்ஙனம் வெளியேறுகின்றது என்பதை அறிந்துகொண்டு இந்த ஒழுங்குவிதிகள் மாறினால் உடலின் இயல்புநிலை மாறுகின்றது. இதனால் நோய் உண்டாகின்றது. இவற்றையெல்லாம் ஆராய்ந்து அறிந்து அதற்கான மருந்து வகைகளையும் கண்டு பிடித்து நோயைக் குணப்படுத்துகின்றனர். ஆனால் நோய்க்கான காரணத்தை ஆராய்ந்து அறிந்து நோய் வராமற் காப்பது ஆன்மீக அறிவு.

இங்கே மனிதனைக் கூறுபோட்டுப் பார்த்தால் உடல், மனம், (எண்ணங்கள்) உயிர், புத்தி, ஆன்மா என்று பல கூறுகளைக் கொண்டிருக்கின்றது. "நான்" என்பது எல்லோராலும் உரிமையுடன் கூறக்கூடிய ஒரு பொதுவான சொல். ஒரு மனிதன் நான் என்று கூறும்போது இந்த உடலை மட்டும் நினைத்தால் அது பொய்யாகின்றது. மனம் என்பது வெறும் எண்ணங்களின் சேர்க்கையாதலால் அதுவும் பொய்யாகின்றது. உயிராகிய மூச்சுக்காற்று உள்ளேயும் வெளியேயும் போய் வந்து கொண்டிருப்பது. அது தன் இயக்கத்தை நிறுத்திக்கொண்டால் அதுவும் பொய்யாகின்றது. புத்தி என்பது அறிவுக் கூர்மை. இவையெல்லாம் நிலையற்றவை. ஏனெனில் இவையனைத்தும் மாறும் இயல்புடையவை. ஆனால் ஆன்மாதான் தானாய் இருப்பது இன்னோர் ஆதாரம் இல்லாதது. அழியாதது. இது சுத்த சக்தி. இதுவே நான் என்பதின் மூலமாகின்றது.

இது தன்னில் தானே இலயித்து இருப்பதால் எதையும் அறிவதில்லை. எதனையும் காண்பதில்லை. அதனால் ஆன்மா தனித்து இயங்குவதில்லை. இது சக்தி. இது எங்கும் நிறைந்திருப்பதால் இது "பராசக்தி" எனப்படுகின்றது. இந்த ஆன்மாவாகிய சக்தியை இயக்குபவர் இறைவன். உடல், மனம், புத்தி, உயிர், ஆன்மா எல்லாவற்றையும் ஒழுங்குபடுத்த, ஒருங்கிணைத்து அவற்றைப் பூரணமாக இயங்கச் செய்பவர் மனிதனை ஆளும் ஆளுநராகிய இறைவனே. இறைவன் இச்சக்தியை எப்படி ஆள்கின்றார்? அன்புடன் எல்லா உயிர்களின் நன்மையைக் கருத்திற்கொண்டு ஆட்சி புரிகின்றான்.

ஆனால் இந்த இறைவனாகிய இயக்குனரை மறந்து மனம் "தானே கர்த்தா" என அகங்கரிக்கும்போது இந்த சக்தி அழிவுக்குப் பயன்படுகின்றது. இறைவன் அன்பு சொரூபம். அதனால் "சிவம்" எனவும், ஆன்ம சக்தி சொரூபம் ஆதலால் சக்தியெனவும் வழங்கப்படுகின்றது.

*ஆசை புத்தியை மறைக்கும்போது அறிவு வேலை செய்யாமல் போய்விடுகிறது.*

உலகம் சிவசக்தி சொருபமானதே. சிவம் அன்பு. இதை உணர்வால் உணரலாமேயன்றிச் சாதாரண அறிவால் கண்டறிய முடியாது. ஆனால் ஆன்மா இறைவனில் இலயித்திருப்பதால் திருப்தியாக ஆனந்தமாக இருக்கின்றது. இந்த ஆனந்தத்தை அனுபவிக்க வைப்பது பக்தியுணர்வேயாகும். அன்பின் முதிர்நிலையே பக்தி. இந்த உணர்வே மனிதன் தன்னையறிந்து இன்பமுறச் செய்யும் சத் சித் ஆனந்த உணர்வாகும்.

இந்த ஆன்மீக அறிவாகிய மெய்யறிவாகிய மனிதன் அறியவேண்டியது ஏழாம் அறிவாகும். தன்னைச் சுற்றியுள்ள சேதன, அசேதனப் பொருட்களைத் தன்னுணர்வால் அறியும் அறிவு எட்டாவது அறிவாகும். தன்னைச் சுற்றியுள்ள எல்லாவற்றையும் தன்வயப்படுத்தி ஒழுங்குவிதிப்படி ஆளும் அறிவே ஒன்பதாவது அறிவு. ஆள்பவன், ஆளப்படுவது இரண்டும் ஒன்றுக்கொன்று ஆதாரம் ஆள்பவன் இல்லாவிட்டால் ஆளப்படுபவை இயங்காது. ஆளப்படுபவை இல்லாவிட்டால் ஆள்பவன் என்று ஒருவன் இருக்கமுடியாது. நான் ஒரு தனிமனிதனாக என்னை எண்ணிக்கொண்டால் ஆள்பவன் இறைவன். ஆளப்படுவது உடல், மனம், புத்தி என்பவையாகும்.

நான் என்னை இந்த உலகமாக எண்ணும்போது ஆள்பவன் இறைவன் ஆளப்படுவது உலகம் முழுவதிலுமுள்ள சேதன அசேதனப் பொருட்கள் எல்லாமாகும். இறைவன் இல்லாமல் உலகமில்லை. உலகமில்லாமல் இறைவனை உணரமுடியாது. இதுவே பத்தாம் அறிவு. இந்த ஒன்றாகிய இறைவனின் பூரண அனுக்கிரகத்தைப் பெற்ற மனிதன் பூரணன் ஆகின்றான். இவ்வாறு இறைநிலை அடைந்த மனிதன் மீண்டும் இந்த உலகில் பிறந்து அனுபவிக்க வேண்டியது ஒன்றுமில்லை. இதனால் பிறவிப்பிணி அகல்கின்றது. சம்சார சாகரத்தில் நீந்திக் கரையேறியவன் ஆகின்றான். பிறப்பில்லாத் தன்மை உண்டாகின்றது. இந்த உடம்புடன் வாழும்போதே கர்ம பந்தம் இல்லாமல் இறைவன் கட்டளையை நிறைவேற்றுபவனாக வாழ்கின்றான். "நான் இறைவன்" என்ற நிலை வரும்போது பேச்சில்லை மௌனமே மொழியாகின்றது.

மீண்டும் இந்த மனிதன் பூமியில் அவதாரம் செய்யும்போது மனிதனாகப் பிறந்து இறை பணியாளனாக வாழ்ந்து புனிதனாகின்றான். இத்தகை மனிதனை இந்த உலக இன்ப துன்பங்கள் பாதிப்பதில்லை. எந்த எண்ணங்களும் அவன் மனதில் பிறப்பதில்லை. எந்த ஆசையாலும் அவன் மனம் நிரப்பப்படுவதில்லை. இறைவனின் கருவியாக இயங்கி அப்பணி நிறைவுற்றதும் கருவியாகிய உடலைவிட்டு நித்தியானந்த வாழ்வு வாழ்கின்றான். இதற்குமேல் மனித அறிவாகிய சிற்றறிவினால் எதையும் காண, அறிய முடியாது. இனி எல்லாம் அவன் செயலன்றிருப்பதேயல்லால் வேறொன்றறியேன் பராபரமே.

---

**ஆன்மிகச் சிந்தனை**

"வெளிநோக்கியே ஓடும் புலன்களின் பின்னால் மனதை ஓடவிடாமல், அதைக் கட்டுப்படுத்தி உள்முகமாகத் திருப்பி ஆத்ம தரிசனம் பெற முயலவேண்டும்" என்று கடோப நிஷதம் கூறுகிறது. அவ்விதம் நமது மனதை உள்முகமாகத் திருப்புவதற்குப் பழகிக்கொண்டோமானால் நாமும் சிறிது சிறிதாக ஆன்மீக வாழ்க்கையில் முன்னேற்றம் பெறமுடியும். மனதில் தினமும் ஜபமும் தியானமும் சரியாகச் செய்யமுடிகின்றது. ஆனால் அந்த நிலையை அடைவதற்குப் பலகாலம் தீவிர முயற்சி தேவைப்படுகிறது.

*நல்ல எண்ணத்துடன் இரு; அது உன் நடத்தையைப் பாதுகாக்கும்.*

# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம்

| | | |
|---|---|---|
| இ. திருக்குமரன் | மானிப்பாய் | 2000. 00 |
| வி. ராஜேஸ்வரி | பருத்தித்துறை | 1000. 00 |
| K.V. துரைசாமி நினைவாக | மயிலிட்டி | 2000. 00 |
| Dr. சி. இராசலிங்கம் | அச்சுவேலி | 1000. 00 |
| திருமதி ஸ்ரீதரன் ரேணுகா | அவுஸ்திரேலியா | 30000. 00 |
| அ. தவக்குமாரன் | கொழும்பு | 10000. 00 |
| சிவசக்தி மில் | வவுனியா | 10மூடை அரிசி |
| சரவணமுத்து பாலசுப்பிரமணியம் | சுவிஸ் | 10மூடை அரிசி |
| திரு சிவனேசன் குடும்பம் | பிரான்ஸ் | 5000. 00 |
| மு. விஜயரட்ணம் (வேலு) | காட்டுப்புலம் | 50000. 00 |
| தி. விசுவலிங்கம் சைவ சித்தாந்த மன்றம் | கனடா | 10000. 00 |
| தே. சுகந்தன் | சண்டிலிப்பாய் | 1000. 00 |
| க. நற்குணராஜா | யாழ்ப்பாணம் | 2000. 00 |
| தனஜா வெப்சைட் | ஜேர்மனி | 2000. 00 |
| Dr குணராஜசிங்கம் | மானிப்பாய் | 2000. 00 |
| குமாரசாமி சோமசுந்தரம் | தெகிவளை | 5000. 00 |
| திரு பரமேஸ்வரன் | சிறுப்பிட்டி | 1000. 00 |
| ம. பாமினி | சிறுப்பிட்டி | 2200. 00 |
| J. சந்திரப்பிரகாசம் ஆசிரியர் | பருத்தித்துறை | 3000. 00 |
| T. ராஜதுரை | கொழும்பு-6 | 4500. 00 |
| திருமதி கார்த்திகா சிவகுமார் | அச்சுவேலி | 1500. 00 |
| செ. சண்முகலிங்கம் (இளை. தபாலதிபர்) | திருநெல்வேலி | 12000. 00 |
| பொ. வெங்கடேஸ்வரன் | வல்வெட்டித்துறை | 5000. 00 |
| பார்வதி திருநாவுக்கரசு நினைவாக | நல்லூர் | |
| விக்னேஸ்வரி நவரட்ணம் நினைவாக | மயிலிட்டி | 18000. 00 |
| திரு நாகலிங்கம் குடும்பம் | மயிலிட்டி | |
| ச. ஜெயதாசன் | சுண்ணாகம் | 500. 00 |
| அமரர் கந்தசாமி நினைவாக | ஆனைக்கோட்டை | 1000. 00 |
| S.K. சண்முகசுந்தரம் | சொய்சாபுரம் | 500. 00 |
| சிவகுமாரி சொக்கலிங்கம் | கொழும்பு-15 | 5000. 00 |
| பொ. தர்மராஜசிங்கம் மைக்கிலியேற் வைத்தியசாலை | இணுவில் | 5000. 00 |
| நி. சரவணபவன் | நல்லூர் | 2000. 00 |
| கா. வக்கிரன், கா. கவிவர்னன் | சுண்ணாகம் | 2000. 00 |

*வெற்றி என்பது முழுத் தியாகமும் செய்தபின்னரே கிடைக்கக்கூடிய ஒன்று.*

| | | |
|---|---|---|
| இ. வள்ளிநாயகி | கனடா | 100 டொலர் |
| முருகன் அடியார் | உரும்பராய் | 1000. 00 |
| கு. தயாளன் | அவுஸ்திரேலியா | 10000. 00 |
| அருளினி திருச்செல்வம் | கொழும்பு | 5000. 00 |
| லலிதா றெக்ஸ் | வவுனியா | 500. 00 |
| சுப்பிரமணியம் சோதீஸ்வரன் | வல்வெட்டி (U.K) | 10000. 00 |
| த. கமலதீபன் | இன்பசிட்டி | 2000. 00 |
| திரவியம் | மந்திகை | 2000. 00 |
| இ. சுதாகரன் குடும்பம்<br>ஸ்ரீகிருஷ்ணதாஸ் குடும்பம் | லண்டன் | 10000. 00 |
| திரு அப்புத்துரை | வசாவிளான் | 500. 00 |
| நெ. காயத்திரி | கோப்பாய் தெற்கு | 5000. 00 |
| கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயம் | கிளிநொச்சி | 4000. 00 |
| செ. சின்னத்துரை ஆசிரியர் | நெல்லியடி | 1000. 00 |
| ச. கணபதிப்பிள்ளை | புலோலி | 10000. 00 |
| இ. குமாரசாமி குடும்பம் | அச்சுவேலி | 1000. 00 |
| க. ஜெயந்தினி | அச்சுவேலி | 2500. 00 |
| ச. பூரணம் குடும்பம் | கொழும்பு | 10000. 00 |
| சி. இனோஜன்<br>சி. ஹர்சினி<br>சி. மகிஷன் | யாழ்ப்பாணம் | 1500. 00 |
| Dr V. பாலகிருஸ்ணன் குடும்பம் | வதிரி | 2000. 00 |
| க. ஸ்ரீகந்தநடராஜா | கனடா | 5000. 00 |
| கா. தயாபரன் | கொழும்பு | 5மூடை அரிசி |
| ஸ்ரீ சிவராம் ரேடேர்ஸ் | யாழ்ப்பாணம் | 2புட்டி பருப்பு |
| சி. குமாரதாஸ் | நல்லூர் (சுவிஸ்) | 30000. 00 |
| காயத்திரி யோகநாதன் | சுவிஸ் | 15000. 00 |
| சி. கிரிதரன் | நல்லூர் | 20000. 00 |
| கா. பொன்னம்பலம் | ஆவரங்கால் | 10000. 00 |
| க. அம்பிகாபதி அல்லாரை | மீசாலை | 5000. 00 |
| தே. தீபன்ராஜ் | தும்பளை | 500. 00 |
| இ. திருக்குமரன் | மானிப்பாய் | 1000. 00 |
| சைவ மங்கையர் கழகம் | கிளிநொச்சி | 1000. 00 |
| S. குமரன் | வவுனியா | 5000. 00 |
| திருமதி காசிலிங்கம் | வண்ணார்பண்ணை | 4000. 00 |
| இ. திருமேனிப்பிள்ளை கன்னாதிட்டி ஒழுங்கை | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| கு. லீலானந்தன் | சிறுப்பிட்டி | 1000. 00 |
| சி. பத்மலிங்கம் | ஆவரங்கால் | 10000. 00 |

(தொடரும்...

*கடின உழைப்பு தெய்வ வழிபாட்டிற்குச் சமம்.*

# அதிசயம்! ஆனால் உண்மை

– திரு சி. ஆறுமுகானந்தன் அவர்கள் –

தொண்டைமானாறு ஆற்றங்கரையில் வீற்றிருந்து அடியார்களின் துயர் களையும் ஆறுமுகத்தானாம் முருகப்பெருமானுடைய அற்புதங்களை இங்கு வருகின்ற அடியார்கள் நேரடியாகக் கண்டும் உணர்ந்தும் செல்வதை நாம் அறிவோம். அன்னதானக் கந்தனாக விளங்கும் சந்நிதி முருகன் அடியார்களின் பசிப்பிணியை மட்டுமன்றி உடற்பிணி, உளப்பிணி என்பவற்றையும் போக்கும் வைத்தியனாகக் காணப்படுகின்றமை அம் முருகனின் பக்தியை உணர்ந்த அடியவர்களுக்குப் புரியும். தமக்கு நிகழ்ந்த அற்புதங்களையும் அதிசயங்களையும் பல அடியார்கள், சந்நிதி உற்சவகாலத்தில் வெளியிடப்படுகின்ற நூல்கள் வாயிலாகவும் சந்நிதியான் ஆச்சிரமத்தினால் வெளியிடப்படுகின்ற ஞானச்சுடர் மலர்களினூடாகவும் வெளிப் படுத்தியுள்ளமையை அறியலாம். அந்த வகையில் சந்நிதி முருகனின் மீளா அடியவனாகிய நான், எனக்கு நிகழ்த்திய அதிசயமொன்றை அடியவர்களுடன் பகிர்ந்து கொள்ளலாம் என எண்ணுகின்றேன்.

கிட்டத்தட்ட 1970ஆம் ஆண்டிற்கு முன்பு நானும் எனது நண்பர்கள் ஆறுபேரும் சேர்ந்து எழுவராக சந்நிதி முருகனுடைய சந்நிதிக்குச் சென்று வழிபடுவது வழக்கம். சந்நிதியான் வீதியிலே இருந்து வணங்கும்போது ஒருநாள் பக்தர்களுக்குப் போதியளவு சந்தனம் இல்லை என்பதை உணர்ந்தோம். அன்றிலிருந்து நாம் ஏழுபேரும் சேர்ந்து அடியார்களுக்குத் தேவையான சந்தனத்தை வாங்கிக்கொடுக்கலாம் என நினைத்தோம். அந்தக் காலத்திலே (No- 1) சிறந்த சந்தனம் ஒரு இறாத்தல் 10 ரூபாவாகவும் (No- 2) சாதாரண சந்தனம் ஒரு இறாத்தல் 5ரூபாவாகவும் விற்பனை செய்யப்பட்டது. நாம் 10ரூபா சந்தனத்தைப் போதியளவு வாங்கி உள்வீதியைச் சுற்றிவர நின்று பக்தர்களுக்கு வழங்கி வந்தோம். காலப்போக்கில் எனது நண்பர்கள் ஆறுபேரும் வெளிநாடு சென்றுவிட நான் மட்டுமே இப்பணியைச் செய்யும் நிலை ஏற்பட்டது. தனியாகச் செய்வது கடினமாக இருந்த போதிலும் இடைவிடாது செய்து வரலானேன். அப்போதுதான் இச்சந்தணங்களைக் கொண்டு முருகனுக்கு அபிஷேகம் செய்தால் என்ன என்ற எண்ணம் மனதிலே தோன்றியது. அன்றில் இருந்து முருகனின் தீர்த்த உற்சவத்தின்போது சந்தணாபிஷேகம் செய்து அது குளத்து நீருடன் கலக்க அந்த நீரிலே முருகன் தீர்த்தமாடும் காட்சியைக் கண்டு களிக்கலானேன்.

இவ்வாறு செய்துவரும் வேளை எனது மகளின் படிப்பிற்காக கொழும்பிற்குக் கொண்டு செல்லும் நிலை ஏற்பட்டது. பாதைகள் அடைக்கப்பட்டு கடற் போக்குவரத்தினூடாகத் திருகோணமலை சென்றுதான் கொழும்பிற்குச் செல்லமுடியும். அந்நிலையில் கடற்கப்பலால் கொழும்பு சென்று விட்டோம். அவ்வேளையில்தான் கடற்போக்குவரத்துக் கப்பலான "லங்கா முடி"க் கப்பல் தாக்கப்பட்டு நீரில் மூழ்கியது. இதனால் கடற்போக்குவரத்தும் தடைப்பட்டது. நான் மகளைப் பாடசாலையில் சேர்த்துவிட்டு யாழ்ப்பாணம் திரும்பியவேளை கடற்போக்கு வரத்துத் தடைப்பட்டதால் யாழ்ப்பாணம் வரமுடியாத நிலை ஏற்பட்டது. ஆகாய வழிப் போக்குவரத்து மட்டுமே நடைபெற்றது. ஆனால் அதில் வருவதென்றால் ஏற்கனவே பதியப்பட்ட இலட்சக்கணக்கான மக்கள் வந்த பின்னரே நாம் பதிந்து பயணச்சீட்டைப் பெறமுடியும்

*உண்மை ஒன்றுதான் என்றும் நிலைத்துநிற்கும் தகுதியைப் பெற்றிருக்கிறது.*

என்ற நிலை காணப்பட்டது. இது இவ்வாறிருக்க சந்நிதி முருகன் மகோற்சவ காலம் ஆரம்பமாகி நாட்கள் ஓடிக்கொண்டிருக்கின்றன. எனக்கோ இம்முறை சந்தண அபிஷேகம் செய்யமுடியாமல் போய்விடுமோ என்ற துன்பம். அதை எப்படிச் சொல்வேன். தாங்கமுடியாத ஏக்கம், வேதனை என்பன என்னை வாட்டியது. முருகனைப் பிரார்த்தித்து அழுது புலம்பினேன். என்ன செய்வதென்று தெரியாது திகைத்து நின்றேன். மனவேதனையுடன் பலரிடம் சென்று மன்றாடினேன். எப்படியாவது ஒரு பயணச்சீட்டைப் பெற்றுத் தாருங்கள் எனக்கெஞ்சினேன். கிடைக்கவில்லை. அப்போதுதான் முருகனிடம் ஒரு வேண்டுதலை வைத்தேன். “முருகா! உன் சந்தணாபிஷேகத்தைப் பார்க்காமல் உன் சந்நிதியிலே வந்து ஒருபிடி அமுது உண் ணாமல் சோறு சாப்பிடுவது இல்லை” என்ற விண்ணப்பத்துடன் இருந்தேன். நாட்களும் சென்றன. அன்று சப்பறத் திருவிழா. இரவு வேதனையுடன் அழுது கொண்டு நித்திரையாகி விட்டேன். அருள் வடிவான வேலன் என் வேதனையையும் தணிவித்துத் தன் சந்தணாபிஷேகத் தையும் தடைப்படா வண்ணம் செய்யும் பொருட்டு என் கனவிலே தோன்றி ஒரு அற்புதக் காட்சியைக் காட்டினார். அதாவது “பூசகர் தம்பி ஐயாவின் உருவிலே நான்கு முழ வேட்டி யும் சால்வையும் உருத்திராட்ச மாலையும் பெரிய சந்தணப் பொட்டும் இட்ட கோலத்திலே தீர்த்த அபிஷேகம் நடைபெறுகின்ற குளத்தின் சுவர் கட்டில் தெற்கே பார்த்தபடி இருந்து தனது வலது கையினால் என்னைக் காட்டி வரும்படி அழைக்கின்றார். திடுக்குற்று அழுதபடி கண் விழித்தேன். என்ன புதுமை! நான் தங்கியுள்ள (லொட்ஜ்) வாடகை வீட்டின் முன்னால் வாசலிலே ஒரு வாகனம் வந்து நிற்கிறது. எனது நண்பர் லிங்கம் ரெக்ஸ் உரிமையாளர் தர்மலிங்கம் அவர்கள் இறங்கிவந்து என்னைப் பார்த்து “இந்தாடா சந்நிதியான் சந்நிதியான் என்று அழுது புலம்பினாய். இன்று காலை 10.30 மணிக்கு முதலாவது பிளைட் இருக்கிறது. இந்தா ரிக்கெற்” எனக் கூறி எனது கையிலே பயணச்சீட்டையும் தந்தார். நான் உடனே புறப்பட்டு வந்து முதலிலே சந்நிதியான் வாசலுக்கே சென்று தாயைக் கண்ட கன்றுபோல மகிழ்ச்சியில் அழுதேன். உடனே யாழ்ப்பாணம் சென்று அத்தர், பன்னீர், விபூதி, சந்தணம் மற்றும் பல வாசனைத் திரவியங்களை வாங்கிக் கொண்டுவந்து மறுநாள் தீர்த்த உற்சவத்தின் போது முருகனுக்குத் தீர்த்தக் குளத்திலே சந்தணாபிஷேகம் செய்தேன். அந்த அபிஷேகம் தொடர்ந்து இன்றுவரை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இடையிடையே மகளின் கல்வியின் பொருட்டு இந்தியா சென்ற வேளையிலும்கூட அந்த நேரத்திலே வந்து சந்தணாபிஷேகத்தைச் செய்யும் பாக்கியத்தை முருகன் தந்தருளினார். இதுபோல என்றும் என்னோடு துணையாக இருந்து முருகன் எனக்கு அருள்புரிவதோடு மட்டுமன்றி ஏனைய அடியார்களுடைய துன்பங் களையும் களைய அவனருள் வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

---

**ஆன்மிகச் சிந்தனை**

நம்மிடம் நல்ல சிந்தனைகளைத் தோற்றுவிப்பது, நல்ல பேச்சுக்களைப் பேசும்படி செய்வது, நல்ல செயல்களைச் செய்யும்படி தூண்டுவது, நம்மை மனம்போன போக்கில் போகாமல் இருக்கச் செய்வது, நம்மைத் தீய செயல்களிலிருந்து விடுவிப்பது, யாவும் எமது அறிவே. மேலும் மனம் எந்த அளவுக்கு உள்ளே ஒடுங்கிறதோ, அந்த அளவுக்கு அது ஆண்டவனுக்கு அருகில் இருக்கும். நாம் ஆசாபாசமாகிய மேகமூட்டத்தைக் கடந்து சென்றால் இறைவனை தரிசிக்கலாம். கடுமையான தவப்பயிற்சிகளும் முயற்சிகளும்தாம் நம்மை இறைவனிடம் அழைத்துச் செல்லும்.

*நம்பிக்கை உண்டானால் வெற்றியும் உண்டு.*

(தொடர்ச்சி....

# விதுர நீதி

– திரு இரா. செல்வவடிவேல் அவர்கள் –

## உண்மையான நண்பன்

கோபத்தினால், பயத்தை உண்டாக்குபவனை நண்பனாகக் கொள்ளக்கூடாது. பிறரைப் பயமுறுத்தி மரியாதை பெறுபவனும் நண்பன் இல்லை. தந்தையைப்போல ஆறுதலைத் தருபவன் எவனோ அவன்தான் நண்பன். மற்றவர்கள் பேருக்காக உடன் இருப்பார்கள் அவ்வளவுதான்.

எந்தவிதமான உறவுமில்லாமல், உண்மையான நண்பனாக இருப்பவன் எவனோ, அவனே உறவினன்; அவனே நண்பன்; அவனே பற்றுக் கோடு, அவனே புகலிடம்.

சஞ்சலமான மனம் கொண்டவன் பெரியவர்களுடன் சேராதவன், அறிவில் மயக்கம் உடையவன், இப்படியான மனிதனுக்கு நட்பு நிலையில்லாததாகவே எப்போதும் இருக்கிறது. தண்ணீரில்லாத குளத்தைவிட்டுப் பறவைகள் பறந்து போவதைப்போலச் சலிக்கின்ற சித்தம், நல்ல புத்தி இல்லாமை, பொறிபுலன்களை அடக்காமை முதலியவை கொண்ட மனிதனை விட்டுச் செல்வம் விலகிப் போகின்றது. காரணமில்லாமல் கோபிப்பதும், காரணமில்லாமல் மகிழ்வதுமான குணங்களைக்கொண்ட தீயவனின் ஒழுக்கம் கலைந்துபோகும் மேகத்தைப் போன்றது.

தன்னைப் பெருமைப் படுத்தியவர்களும், தனக்கு உதவியவர்களுமான நண்பர்களின் நன்மைக்காக எவன் உதவவில்லையோ அந்த நன்றி கெட்டவன் இறந்தபோதும் அவன் உடலைப் பிணம் திண்ணிக் கழுகுகூட சாப்பிடுவதில்லை. நண்பர்களிடம் செல்வம் இருந்தாலும், இல்லாவிட்டாலும் அவர்களை விரும்பவேண்டும். அப்படி விரும்பாதவன் நட்பின் உறுதியையும், உறுதி இல்லாத் தன்மையையும் அறிய முடியாது.

சோகத்தினால் மனிதனின் உடலின் நிறம் மங்குகின்றது. பலம் குறைகின்றது. அறிவு அழிக்கின்றது. மனிதனுக்கு நோய் ஏற்படுகிறது. துன்பத்தினால் அடையக்கூடிய நன்மை ஒன்றும் இல்லை. உடம்பு கெட்டுப் போவதுதான் மிச்சம்.

மனிதன் அடிக்கடி இறக்கிறான், பிறக்கவும் செய்கிறான். அடிக்கடி தாழ்வையும் உயர்வையும் அடைகிறான். அடிக்கடி பிச்சையும் எடுக்கிறான்; பிச்சையிடவும் செய்கிறான். அடிக்கடி துயரப்படுகிறான், அடுத்தவரைத் துயரப்படவும் வைக்கிறான். சுகம், துக்கம், இருப்பு, இல்லாமை, இலாபம், நஷ்டம், பிறப்பு, இறப்பு எனும் இவைகள் வரிசையாக எல்லோருக்கும் ஏற்பட்டுக் கொண்டுதான் இருக்கின்றன. ஆகவே தீரனானவன், சந்தோஷப் படவும் துக்கப்படவும்கூடாது.

மனிதனுடைய மெய், வாய், கண், மூக்கு, செவி, மனம் என்னும் இந்த ஆறும் சஞ்சலமானவை. இதில் எது எது? எது எதில் பற்றிக்கொள்கிறதோ, அதன் வழி மனிதனுடைய புத்தியானது ஓடுகிறது. இதைக் கேட்ட திருதராஷ்டிரன், "விதுரா! தர்மன் விறகில் மறைந் திருக்கும் நெருப்பைப் போன்றவன்; நுட்பமான தர்மத்திற்குக் கட்டுப்பட்டவன். அப்படிப்பட்ட வனிடம் நான் கபடமாகவே இருந்திருக்கிறேன். யுத்தத்தில், தர்மன் என் பிள்ளைகளை

*வாழ்க்கை என்கின்ற மரத்துக்கு இளமையில் கற்பது வேர் போன்றது.*

அழித்து விடுவானோ என்று எனக்கு எப்போதும் பயமாகவே இருக்கிறது. பயத்தினால் துக்கப்படும் என் மனது அமைதி பெறும்படியானது எதுவோ அதைச் சொல்" என்று கேட்டான்.

விதுரர், "குற்றமில்லாத மன்னா! எனக்குத் தெரிந்தவரை அல்லது என்னைப் பொறுத்த வரை உங்களுக்கு மன அமைதி உண்டாக கல்வியறிவு, தவம், புலனடக்கம், பேராசையை விடுதல் முதலியவைகளைத் தவிர வேறு வழி இருப்பதாகத் தோன்றவில்லை" மனிதன் அறிவினாலேயே பயத்தை நீக்குகிறான். தவத்தினால் பெருமையை அடைகிறான். குருவுக்குப் பணிவிடை செய்வதால் ஞானத்தை அடைகிறான். யோகத்தினால் அமைதியை அடைகிறான். முத்தியை விரும்புபவர்கள் தானத்தாலும் வேதத்தாலும் உண்டான புண்ணியங்களை விரும்பாமல், விருப்பையும் வெறுப்பையும் விட்டு, இந்த உலகில் பலன் கருதாமல் செயலாற்று பவர்களாக நடமாடுகிறார்கள்.

முறையுடன் கூடிய கல்வி, தர்மமான யுத்தம், குறைவற்ற நல்ல செயல், நன்றாகச் செய்யப்பட்ட தவம் முதலியவை முடிவில் மனிதனை சுகமாக மேன்மையடையச் செய்கிறது.

தன் இனத்திற்குள் வேறுபாடு- முரண்பாடு கொண்டவர்கள் விலை உயர்ந்த அழகான படுக்கையில் படுத்தாலும், ஒருக்காலும் தூங்கமாட்டார்கள். வேறுபாடு கொண்டவர்கள் பெண்களிடத்தில் மகிழ்ச்சியை அடைய மாட்டார்கள். ஒருபோதும் தர்மத்தைக் கடைப்பிடிக்க மாட்டார்கள். இந்த உலகில் சுகத்தையோ கௌரவத்தையோ அடைவதும் இல்லை. மன நிம்மதியும் கிடையாது. வேறுபாடு கொண்டவர்களுக்கு இனிமையான வார்த்தைகள் சுவைப் பதில்லை. அவர்களுக்கு விருப்பமான பொருளின் லாபமும், இருக்கின்ற பொருளின் பாதுகாப்பும் உண்டாவதே கிடையாது. வேறுபாடு கொண்டவர்களுக்கு அழிவைத் தவிர ஒரு கதியும் இல்லை.

பசுக்களிடத்தில் எப்படிப் பால் பெருக்கு உண்டாகிறதோ அதுபோல, பிரம்மத்தை அறிந்தவரிடத்தில் தவமும், பெண்களிடத்தில் ஆலோசிக்காமல் செயற்படும் குணமும், பங்காளிகளிடமிருந்து பலமும் உண்டாகின்றது.

நூல் மெல்லியதாக இருந்தாலும், பல நூல்கள் ஒன்றாகச் சேர்ந்தால், அறுந்து போகாமல் பல காலம் வலிமையுடன் இருக்கும். இதுதான் சாதுக்களின் சிறப்பம்சம். சாதுக்கள் பலமில்லாதவர்களாக இருந்தாலும் சமுதாய பலத்தினால் சக்திகொண்டவர்களாக இருப்பார்கள் என்பது கருத்து.

எரிந்து கொண்டிருக்கும் விறகுகளைப் பிரித்தால் புகைந்து மங்குவதுபோல, உறவினர்களாக இருப்பவர்கள் பிரிந்தால் மங்கிப்போகிறார்கள். அவர்களே ஒற்றுமையாக இருந்தால் ஒன்றுசேர்ந்த விறகுகள் பிரகாசிப்பதுபோல ஜொலிக்கின்றார்கள்.

சாதுக்களிடமும், பெண்களிடமும், பசுக்களிடமும் தங்கள் சூரத்தனத்தைக் காண்பிப் பவர்கள், குலையிலிருந்து பழுத்தபழம் கீழே விழுவதுபோல தமது நிலையிலிருந்து வீழ்ச்சி அடைவார்கள்.

பெரியதாகவும், பலம் கொண்டதாகவும், நன்றாக வேரூன்றிப் பல கிளைகளுடன் கூடியதாக இருந்தாலும், ஒற்றைத் (தனி) மரமாக இருந்தால், பெரும் காற்று வீசும்போது

*எத்தனை படிகள் என்று மலைக்காதீர்கள். எல்லாப் படிகளும் கடக்கக்கூடியவையே.*

ஒரு நொடியில் விழுந்து விடுகிறது. அதேநேரம் மற்ற மரங்களுடன் சேர்ந்து கூட்டாக இருந்தால் ஒன்றோடொன்று உதவுவதால் காற்று அடித்து விழுவதில்லை. இதுபோல எல்லாவிதமான குணங்களையும் உடைய மனிதனாக இருந்தாலும் தனி ஆளாக இருந்தால், “ஒற்றை மரத்தைக் காற்று அழிப்பதுபோல, இவனையும் அழித்து விடலாம்” என்று பகைவர்கள் நினைக்கிறார்கள். குளத்தில் இருக்கின்ற கருநெய்தல் பூக்கள்போல, ஒருவருக்கொருவர் சேர்ந்து ஒற்றுமையாக வாழ்ந்தால் நன்கு செழிப்படைவார்கள்.

அந்தணர்கள், பசுக்கள், பங்காளிகள், குழந்தைகள், பெண்கள், உணவு கொடுத்தோர், சரணமடைந்தவர்கள் முதலியவர்கள் கொல்லத்தகாதவர்கள் பெரும் குற்றம் உண்டானாலும் இவர்களை விலக்குவதே இவர்களுக்குத் தண்டனை.

செல்வத்துடன் சேர்ந்து இருப்பது, நோயில்லாமல் இருப்பது இந்த இரண்டைத் தவிர மனிதனுக்குச் சிறந்தது வேறு எதுவும் இல்லை. நோயாளிகள் இறந்தவர்களுக்குச் சமமானவர்கள். வியாதி இல்லாமலேயே தலைவலி, கசப்பு, பாவத்துடன் சேர்க்கை முதலிய வைகளை உண்டாக்குவது, கடுமையும், கூர்மையும், கொதிப்பும் உள்ளது. இவை நல்லவர் களால் அடக்க முடியாது. தீயவர்களால் அடக்கமுடியாதது கோபம். அப்படிப்பட்ட கோபத்தை அடக்கி அமைதியடைய வேண்டும்.

நோய் உடையவன் எதையும் விரும்ப மாட்டான். விடயங்களின் உண்மையை அறிய மாட்டான். நோயுடையவன் என்றும் துக்கத்துடன் இருப்பான். செல்வத்தாலுண்டான போகத்தையும், சுகத்தையும் அனுபவிக்க மாட்டான்.

மன்னா! முன்னாலேயே, சூதாட்டத்தின்போது துரியோதனனைத் தடுக்குமாறு உங்களிடம் சொன்னேன். நீங்கள் கேட்கவில்லை. அறிவாளிகள் சூதாட மாட்டார்கள். மென்மையான இயல்பு படைத்தவர்களுடன் பகைகொள்வது பலமாகாது. சூட்சுமமான தர்மத்தை விரைவாகச் செய்ய வேண்டும்.

செல்வம், கொடியவனிடம் இருந்தால், பெரும் நாசத்தை விளைவிக்கிறது. நல்லவனிடம் இருந்தாலோ நல்ல காரியங்களுக்குப் பயன்படுத்தப்பட்டு தலைமுறை தலைமுறையாக நிலைத்து நிற்கிறது.

உங்கள் பிள்ளைகளைப் பாண்டவர்கள் காப்பாற்றட்டும். பாண்டவர்களை உங்கள் பிள்ளைகள் காப்பாற்றட்டும். குருவம்சத்தைச் சேர்ந்த பாண்டவர், கௌரவர் ஒற்றுமையாக இருந்து ஒருவர் மற்றவரின் எதிரியை தன்னெதிரியாகவும், நண்பனைத் தன் நண்பனாகவும் எண்ணட்டும். ஒரே குறிக்கோளுடன் சுகத்தை அடைந்து செழிப்பாக வாழட்டும். திருதராஷ்டிரரே! வனவாசத்தால் துயரத்தை அடைந்த, பிள்ளைகளான பாண்டவர்களைக் காப்பாற்றி உங்கள் புகழைக் காத்துக் கொள்ளுங்கள்.

மன்னா! நீங்கள் பாண்டுவின் பிள்ளைகளுடன் ஒத்துப்போக வேண்டும். உங்கள் பகைவர்கள் அஜாக்கிரதையாக இருக்கும் நேரத்திற்காகப் பிரார்த்தனை செய்ய வேண்டாம். பாண்டவர்கள் சத்தியத்தில் நிலையாக இருக்கிறார்கள். நீங்கள் துரியோதனனை கட்டுப்படுத்தி அடக்கி வையுங்கள் என்று விதுரர் சொன்னார்.

(தொடரும்...

*ஆற்றலைவிட ஆர்வமே வெற்றிக்கு அடிப்படைக் காரணமாகும்.*

# காலனை காலால் உதைத்த சிவபெருமான் காத்தருளினார் மார்க்கண்டேயனை

– காரை எம்.பி. அருளானந்தன் அவர்கள் –

மிருகண்டு முனிவருக்கும் மருத்துவதிக்கும் சிவனருளால் ஒரு புத்திரன் பிறந்தான். தேவதுந்துபிகள் முழங்கின. எல்லோரும் ஆசி கூறினார்கள். மிருகண்டு முனிவர் கங்கையில் நீராடி தானம் வழங்கினார். நான்முகன் வந்து அம் மகவுக்கு "மார்க்கண்டேயர்" என பெயரிட்டு அழைத்தார். மார்க்கண்டேயர் வளர் பிறை மதியென வளர்ந்து வந்தார். உபநயனம் பெற்றார். அவர் வேதம் முதலிய கலைகளைப் பயின்றார். வேதங்களின் மெய்ப்பொருளை உணர்ந்து சிவபெருமானே முழுமுதற் கடவுள் என துணிந்தார்.



இங்ஙனம் பதினாறு ஆண்டுகள் சென்றன. தாய் தந்தையர் அதனை உணர்ந்து தங்கள் புதல்வனை நோக்கி தனித்தனியே இருந்து துயரக் கடலில் ஆழ்ந்து வருந்தினார்கள். மார்க் கண்டேயர் தாய் தந்தையர் பாதங்களை வணங்கி "நீங்கள் துன்பமுறும் காரணம் யாது? நிகழ்ந் ததைச் சொல்லுங்கள் என்று வினாவினார். அதற்கு அவர்கள் மைந்தனே! முன்னாளிலே சிவபெருமான் உனக்கு வயது பதினாறு என்று அருளிச் செய்தார். அப் பதினாறு வயது உனக்கு ஆகிவிட்டது. அதனால் துன்பமுறுகிறோம் என தெரிவித்தார்கள். மார்க்கண்டேயர் சிவபெருமானின் திருவருளைத் துணையாகக் கொண்டு மணிகர் னிகை என்னும் திருக்கோயிலை அடைந்து அன்பு பெருக்கெடுத்து என்புகள் நெக்கு நெக்கு உருக கண்களில் ஆனந்த அருவி வழிய சிவபெருமானை வலஞ்செய்து வணங்கித் தென் திசையின் ஓரி டத்து இருந்து கொண்டு சிவலிங்கம் ஸ்தாபித்துப் பலநாள் அன்போடு பூசித்துத் துதித்து அருந்தவம் செய்தார். பக்தி வலையிற் படுவோனாகிய சிவபெருமான் தோன்றி நீ குற்றமில்லாது செய்யும் பூசையைக் கண்டு மகிழ்ந்தோம். உனக்கு வேண்டுவது யாது? என்று திருவாய் மலர்ந்தருளினார். மார்க்கண்டேயர் எம்பெருமான் திருவடிகளை பலவாறு துதித்து "சிறியேன் கூற்றுவன் கையுறாமல் உய்யத் தேவரீர் அருளல் வேண்டும்" என விண்ணப்பம் செய்தார். சிவபெருமான் இயமனுக்கு "அஞ்சற்க அஞ்சற்க" என்று அபயம் தந்தருளி மார்க்கண்டேயர் தலையின்மேல் தம் திருவடிகளிரண்டையும் வைத்தருளினார்.

மார்க்கண்டேயருக்கு வயது பதினாறு நிரம்பியது. சித்திரகுப்தர் எனும் கணக்கர்கள் இருவரும் இயமனை நோக்கி "அரசே! சிவபெருமான் முன்னாளில் மார்க்கண்டேயனுக்கு அளித்த வயது பதினாறு. அவ்வெல்லை சென்றுவிட்டது" என்றனர்.

சிறிய புண்களையும் ஏழை உறவினர்களையும் ஒருபோதும் அலட்சியம் செய்யாதீர்கள்.

கூற்றுவன் பதைத்தெழுந்து எருமைக் கடாவின் மேல் ஏறி, தன் வீரர்கள் சூழ, பாசமும் தண்டமும், சூலமும் ஏந்தி, சிவந்த தலைமயிரும், கரிய சரீரமும், கோபத்தினால் நெருப்புப்போல ஜொலிக்கும் கண்களுமாய் மார்க்கண்டேயர்பால் வந்து அணுகினான். இயமன் வந்து அணுகியதை உணர்ந்த மார்க்கண்டேயர் எம்பெருமான் திருவடிகளை வணங்கித் துதித்தார். அப்போது இயமன் மார்க்கண்டேயரை நோக்கி "மைந்தனே! நீ என்ன நினைத்தாய்! ஊழ்வினையையும் சிவபெருமானின் திருவாக்கையும் மாற்ற முடியுமா? இறப்பும் பிறப்பும் யாவருக்கும் பொதுவாகும். நீ செய்யும் சிவபூசை உன் பாவத்தைப் போக்குமேயன்றி, நான் வீசும் பாசத்தை விலக்கவும் வல்லதோ! என் ஆணையால் இறந்த இந்திரர்கள், தேவர்கள், அசுரர்கள் எண்ணற்றவர்கள் ஆவர். நான்முகனுக்கும் திருமாலுக்கும், எனக்கும் பிறப்பும் இறப்பும் உண்டு. நான் உன் நின்று மீளேன். இது திண்ணம். ஆதலால் நீ என்பின் வருக என்றான். மார்க்கண்டேயன் முன்சென்று பாசத்தை வீசி இழுத்தான்.

தேவர்கள் "இனி மார்க்கண்டேயன் இறந்தான்" என்று மயங்கினார்கள். இயமன் கைப்பாசம் தம் கழுத்தில் உற்றும், சிறிதும், துன்பமுறாத மார்க்கண்டேயர் முன்பு முழுமுதற் கடவுளாகிய சிவபெருமான் "மகனே! உன் துன்பத்தை தீர்க்கின்றோம். நீ அஞ்சற்க அஞ்சற்க" என்று திருவாய் மலர்ந்துகொண்டு இலிங்கத்திநின்று தோன்றியருளினார்.

இயமன் மதம் மிகுந்து நம் மகனின் உயிரைக் கொண்டுபோக நினைத்தான் என்று பெருங்கோபம் கொண்டு தமது இடது பாதத்தால் இயமனைச் சிறிது உதைத்தருளினார். உதைபட்ட இயமன் கரிய மேகத்தைப்போலப் பூமியில் வீழ்ந்து இறந்தான். மார்க்கண்டேயர் கூற்றுவன் கீழே விழும்போது சிவனைப் போற்றியவாறு நின்றார். சிவன் மார்க்கண்டேயரை நோக்கி "மகனே! நீ மெய்யன்போடு நம்மைப் பூசை செய்தமையால் நாம் உமக்கு முடிவில்லாத ஆயுளைத் தந்தோம்" என்று திருவாய் மலர்ந்து சிவலிங்கத்துள் மறைந்தார்.

மார்க்கண்டேயரை எதிர்த்துக் கூற்றுவன் இறந்தமையால் நிலவுலகிலுள்ள உயிர்களெல்லாம் நெடுங்காலம் இறப்பில்லாமல் வளர்ந்து பெருகின. அதனால் பூமிதேவி பாரம் தாங்காது வருந்தித் திருமாலிடம் சென்று முறையிட்டாள். திருமால், நான்முகன், இந்திரன் முதலிய தேவர்களை அழைத்துக்கொண்டு திருக்கயிலாயம் சென்று "கூற்றுவன் செய்த தீமையைப் பொறுத்தருளி அவனை உயிர்ப்பித்தருள வேண்டும்" என வணங்கி வேண்டினர்.

அப்போது சிவபெருமான் திருவருள் சுரந்து "ஓ இயமனே! எழும்பக் கடவாய்" என்றார். அவ்வளவில் கூற்றுவன் உயிர்பெற்றெழுந்தான்.

மார்க்கண்டேயர் ஊழையும் வென்று, கூற்றுவன் வலியை அகற்றி எக்காலத்தும் இறவாத சிரஞ்சீவித் தன்மையினைப் பெற்றார்.

இம் மார்க்கண்டேயர் சரிதை சிவன் கோவில்களிலே "இயம சங்காரத் திருவிழாவாக ஐப்பசி கடைசி வெள்ளிக்கிழமை கொண்டாடப்பட்டு வருகின்றது.

"அவனருளாலே அவன் தாள் வணங்குவோம்"

---

ஒரு கருவியைக் கையாள மனிதனுக்கு முதலில் முடியாது இருக்கிறது. பழக்கத்தில் கருவியும் கையும் ஒன்றாகிவிடுகின்றன. பிறகு எண்ணியபடி கையும் கருவியும் சேர்ந்து வேலை செய்கின்றன. நல்லெண்ணம் ஒன்று மனதுக்குள் முதலில் நுழையமாட்டேனென்கிறது. பழக்கத்தால் அது நன்கு நுழையும்படி செய்யலாம். நாளடைவில் நல்லெண்ணமே ஊறியதாக நம் நாடி நரம்புகள் ஆகிவிடுகின்றன. பிறகு கனவிலும் கெட்ட எண்ணம் வருவதில்லை.

*வாழ்க்கையின் நோக்கமே பிறருக்கு உதவி செய்வதே ஆகும்.*

(தொடர்ச்சி...

# கண்டோம் கதிர்காமம்

– திரு அன்னைதாசன் அவர்கள் –

ஆம்! தொடர்ந்து குளிப்பதற்காக ஆயத்தமானோம். அருகில் ஆறு ஓடிக்கொண்டிருந் தாலும் அதில் இறங்கிக் குளிக்கமுடியாத நிலை. கரையில் நின்று ஆற்றைப் பார்க்கிறோம். அங்கொன்றும் இங்கொன்றுமாக ஒரு சில இடங்களே குளிப்பதற்கென ஒதுக்கப்பட்டு அவற் றில் ஆண்களும் பெண்களுமாக குளித்துக்கொண்டிருக்கிறார்கள். நாங்களும் அதில் ஒரு இடத்தை நாடிச் செல்கிறோம். எமக்கு உதவியாக இருவர் வருகிறார்கள். ஐயா நீங்கள் புதியவர்கள் எல்லா இடத்திலும் இறங்கிக் குளிக்க முடியாது. நாங்கள் சொல்லும் இடத்தில் மட்டும் குளியுங்கள். கன தூரத்திற்குச் செல்லாதீர்கள். என்ற பீடிகையுடன் எம்மை அழைத்து குளிக்க இறங்கினோம். இறங்கிய சில இடங்களில் செங்குத்தாகவும் இறங்கவேண்டும். ஆறு தனக்கேயுரிய பாணியில் ஓடிக்கொண்டிருக்கிறது. நாங்கள் இறங்கிய இடம் சற்று ஆழங் குறைந்து எம்போன்றவர்களும் துணிந்து குளிக்கக்கூடியதாக இருந்தது. காலை வைத்தோம் அந்திநேரம் மலைநாடு ஒரே ஜில்லென்று வெகு இதமாக இருந்தது.

காலை 9.00 மணியிலிருந்து ஒரே தொடர் நிகழ்வுகளாக மண்டபத்திலிருந்த எமக்கு மிக ஆனந்தமாக ரம்மியமாக இருந்தது. எம்மில் கூடவந்தவர்கள் நன்கு நீந்தக்கூடியவர்களு மாக இருந்ததால் என்போன்றவர்கள் அவர்கள் நீராடும் லாவகத்தையும் அவர்களது நீச்சல் சாமர்த்தியத்தையும் ரசித்தவண்ணம் குளித்துக்கொண்டிருக்கிறோம். எனக்கு ஒரே பயம் யாழ்ப்பாணத்திலேயே பனிக்காலத்தில் அதிகாலைக் குளிரில் குளிக்கும்பொழுது ஒரே குலைப் பனடிக்கும். இங்கு இந்தக் குளிர் நாட்டில் அந்திவேளையில் குளிர்நீரில்...... நான் நீண்டநேரம் தண்ணீருக்குள் நிற்காது ஓர் காகக்குளியல் குளித்து வெளியேறி விட்டேன். அவர்கள் என்ன நினைத்தார்களோ? என்நிலை எனக்குத்தானே தெரியும். அவர்கள் ஆனந்தமாகக் கும்மாளமிட்டபடி குளித்துக்கொண்டிருக்கிறார்கள். தூரத்தில் பார்க்கிறேன் நாங்கள் குளித்துக் கொண்டிருக்கும் இடத்திலிருந்து ஏறக்குறைய ஒரு கிலோமீற்றர் தொலைவில் விக்ரோறியா அணைக்கட்டு மிக அழகாகத் தெரிகிறது. நவீன தொழில்நுட்ப உலகிற்கேற்றவண்ணம் மின்சாரம்மூலம் கதவுகளை ஏற்றி இறக்கும் வசதிகள் எல்லாம் செய்திருந்தமையை அவதானிக்க முடிந்தது. நான்தான் வெளியே வந்தேனேயொழிய அவர்கள் ஆனந்தமாகக் குளித்தவண்ணம் இருந்தனர். சுவாமிகளும் சரிசரி வாருங்கோ நாங்கள் நேரத்துடன் போக வேண்டும் என அழைக்க பலரும் நீராடிவிட்டு வெளியேவர மனமின்றி வந்து ஒருவாறு எம்மோடு வந்த வழிகாட்டிகளுக்கும் நன்றி சொல்லி எமது பயணத்தைத் /தொடர்கிறோம்.

உண்மையில் சின்மயா மிஷன் சுவாமிகள் கார்த்திக்கைப் பற்றிய ஒரு குறிப்பை இங்கே பகிர்ந்தே ஆகவேண்டும். தமது நகரவதிவிடமான கண்டியிலிருந்து பல கிலோமீற்றர் தொலைவிலுள்ள மிகமிகப் பின்தங்கிய இக்கிராமத்தைத் தெரிவு செய்து இம்மக்களுக்குச் சேவைசெய்ய முனைந்தாரே? வறுமைச் சூழல்வேறு. (கல்வி அறிவில்லாமை) மாற்று மதத் தினரின் ஆதிக்கம். பௌத்தம், கிறிஸ்தவம் இருமதத்திற்கும் மாறக்கூடிய நிர்ப்பந்தம் இத் தகு இடர்களில் தத்தளிக்கும் இப்பிஞ்சுகளிற்கு பிஞ்சுப் பருவத்திலேயே இந்து தத்துவத்தைப்

பகையைத் தீர்ப்பது நட்பு ஒன்றுதான். அமைதிக்கான உறுதியும் அதுவே.

புகுத்திவிடவேண்டும் என்ற பேரவாவுடன் தொழிற்படும் கார்த்திக் சுவாமிகளை பாராட்டியே ஆகவேண்டும். இங்கேகூட இந்துவாக வாழ்வோம் என்ற கோஷத்துடன் எங்கள் சின்மயா மிஷன் சுவாமிகள் தொழிற்படுகிறார்; உண்மை. ஆனால் எம் சூழலும் இவர்களின் சூழலும் மலைக்கும் மடுவுக்குமுள்ள வித்தியாசத்தில் உள்ளதை வாசகர்களாகிய நீங்கள் உணர்ந்தே ஆகவேண்டும். பல கிலோமீற்றர் வந்து இப்பிஞ்சுகளிற்கு அறநெறி போதிக்கும் பணி எவ்வித இடையூறுமின்றித் தொடர ஆற்றங்கரையானைப் பிரார்த்திப்போமாக. நோயுள்ள இடத்திலேயே வைத்தியனுக்கு வேலை என்பதற்கு இணங்க ஏன் அம்பா கோட்டையிலும் ஆலயம் ஒன்று அமைந்துள்ளது உண்மை. ஆனாலும் அம்மக்களின் வாழ்வியல் கோலமும் இதேபாணியில், மாற்றுமத ஆக்கிரமிப்பில் இருக்கிறது என்பதையும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். கல்வியறிவு, பணம், பட்டம், பதவிகள், வானளாவும் கோபுரங்கள் கொண்ட கோவில்கள், பாண்டித்தியம் பெற்ற அந்தணச் சிவாச்சாரியார்கள், குருமார்கள், அறிவுமிகு சொற்பொழிவாளர்கள், அறிஞர்கள் இத்தனை வசதிகள் உள்ள எங்கள் பகுதி மக்களே ஒருசாரார் மாற்றுமதத்தை நாடிக் கொண்டிருக்கும்வேளை அவர்களை மீட்டெடுக்க முடியாமல் நாம் இருக்கும் நிலையில் பாவம் இவ்வசதிகளில் ஒரு சிறு பங்குகூட இல்லாத இந்த மக்களின் எதிர்காலம்....? நிட்சயமாக ஒரு குறிப்பிட்ட வீதம் மாறத்தான் போகின்றார்கள் என்பது அடியேனின் பட்டறிவு. எனவே சமய விழிப்பாளர்களே! கார்த்திக் சுவாமிக்கு கைகொடுங்கள் என ஞானச்சுடர் அழைக்கிறது காலத்தின் தேவை இது. அதுமட்டுமல்ல இது ஞானச்சுடரின் ஆவண அழைப்பு என்பது காலஞ்செல்லச் செல்லப் புரிந்தே தீரும்.

இப்படியான நெஞ்சுச்சுமை என் மனதை வாட்ட மக்களோடு மக்களாக நானும் ஏறி எமது பிரயாணம் அந்த ஆனந்த நினைவுகளோடு தொடர்கிறது. பல நெளிவு சுழிவுகளைத் தாண்டி இப்போ கண்டி நகரை நோக்கி எமது பயணம் தொடர்கிறது. அப்பொழுது சுவாமிகளுக்கு ஓர் அன்பு அழைப்புக் கிடைக்கிறது.....

(காட்சி தொடரும்...

## ஸ்ரீமத் மயில்வாகனம் சுவாமிகளின்
## 31ஆம் ஆண்டு குருபூசை நிகழ்வு
## 09.08.2016 செவ்வாய்க்கிழமை



ஸ்ரீமத் மயில்வாகனம் சுவாமி அவர்களின் 31ஆம் ஆண்டு குருபூசை நிகழ்வானது மிகவும் சிறப்பான முறையிலும் பக்தி பூர்வமாகவும் இடம்பெற்றது.

ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் இடம்பெற்ற அபிஷேக பூசை வழிபாட்டுடன் ஆரம்பமாகி சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் சுவாமி அவர்களை நினைவுகூரும் வகையில் அவர் பாடிய கூட்டுப் பஜனை நிகழ்வு ஒலிநாடாவின்மூலம் மண்டபத்தில் இருந்த அனைவரின் செவிவழியாக ஆன்மீகச் சிந்தனையை உருவாக்கியது. சுவாமி அவர்களது அன்னப் பணிபற்றிய சிறப்புரையுடன் குருபூசை நிகழ்வு இடம்பெற்றது.

*நம்பிக்கையே மனிதனுக்கு நேரும் எல்லா நோய்களுக்கும் மலிவான மருந்து.*

# கந்தசஷ்டி விரதம்

– திரு நா. நல்லதம்பி அவர்கள் –

"காப்பது விரதம்" என்று சொல்லப்பெறுகின்றது. ஒருவன் தான் சொன்னபடி செய்வேன் என்று உறுதிமொழி செய்தமையைக் காப்பாற்ற வேண்டும். அவ்வாறு காப்பது என்பது நியமமாகக் கொள்ளுவதே விரதம் என்பதாம். தெய்வந் தொழாதவள் கணவனைத் தொழும் நியமமும், ஒருவனுக்கு ஒருத்தியே தாரமாய்க் கொள்ளும் நியமமும் விரதங்களே.

சைவசமய நெறியிலே, நல்ல குணங்களோடு ஐம்புலன்களை அடக்கி இறைபக்தியோடு உணவைச் சுருக்கி, ஒருநாள் அல்லது பலநாட்கள் ஒழுகுவதான நியமம் "விரதம்" ஆகிறது.

உணவைச் சுருக்குவதானது மனதை அடக்குவதற்கு ஒரு வழி. மனதை அடக்குவது இறைவழிபாட்டிற்கு ஒரு உபாயம். அத்துடன் உடலை நோய்நொடியிலிருந்து காப்பாற்றுவதற்கும் உணவுச் சுருக்கம் உதவுகின்றது. நமது சரீரம் நல்ல நிலையில் இருந்தாற்றான் கடவுளை வணங்கி அருள்பெறலாம். அதனாற்றான், "உடலை வளர்த்தேன்; உயிர் வளர்த்தேனே" என்கிறார் திருமூலர். இது விஞ்ஞான முறைக்கும் உடன்பாடாகின்றது! எனவே, விரதம் உடலுக்கும் உயிருக்கும் நன்மை செய்கிறது என்பதை உணர்த்துவோமாக.

இவ்வாறான சமய விரதங்களைக் கடைப்பிடிப்பதிலே சில விதிமுறைகள் உள்ளன. எல்லா விரதங்களுக்கும் பொதுவான விதிமுறைகளைக்கூறி, நாம் எடுத்துக்கொண்ட "கந்தசஷ்டி" விரதம்பற்றி விளக்குவோம்.

**1) உபவாசம்:**

இறைவனோடு சேர்ந்து இருத்தல் உபவாசம் ஆகும். அதாவது, இறை தியானத்தில் இருத்தல்; வேறு வழியில் புலன்கள் செல்லவிடாமல் இறை சிந்தனையிலேயே இருத்தல் உபவாசம் ஆகிறது. ஒருநாள், பல நாட்கள் விரதங்களுக்கும் உபவாசம் பொருந்தும்.

**2) சங்கற்பம்:**

தற்பை அணிந்து, விநாயகரை வணங்கிக்கொண்டு, ஆசாரியார் சொன்ன சொல்லை உச்சரித்துக்கொண்டு, தான் மேற்கொள்ளும் விரதத்துக்கு தன்னை ஆட்படுத்துதல் ஆகும். இதனை உறுதி செய்தல் அல்லது சத்தியப்பிரமானம் செய்தல் எனக் கூறலாம்.

**கந்தசஷ்டி விரதம்:**

கந்தசஷ்டி (கந்தசட்டி) என்றால் கந்தனுக்குரிய ஆறு நாட்கள் என்று பொருள்தரும். அந்த ஆறுநாட்களும் கந்தனை உள்ளத்தில் இருத்தி விரதம் அனுட்டித்தல் கந்தசஷ்டி விரதமாகும்.

கந்தனுக்குரிய விரதங்களுக்குள்ளே முதன்மையானதாகக் கூறப்பெறுவது கந்தசஷ்டி விரதமாகும். வருடந்தோறும், ஐப்பசிமாத அமாவாசையை அடுத்த பிரதமை (முதல்நாள்)

*நம்பிக்கை பயத்தைப் போக்கும் ஒரு சாதனம்.*

தொடக்கம் சஷ்டி ஈறாக (ஆறாம் நாள்) உள்ள ஆறு நாட்கள் கந்தசஷ்டி விரத நாட்களாகும். கந்தசட்டி விரதத்தை மிகத் தீவிரமாக மேற்கொள்ளும் முருகன் அடியார்கள், இந்த ஆறு நாட்களும் முழுப்பட்டினியாக இருப்பர். அதாவது, கோயில் பூசை முடிவில் வழங்கப்படும் சங்குபால் மாத்திரம் காலையில் பருகி மிகுதி முழுநாளும் உபவாசம் இருப்பர். இவ்வாறு ஆறுநாளும் உபவாசமிருந்து விரதம் மேற்கொண்டால், தொடர்ந்து அவர்கள் ஆறுவருடம் அல்லது பன்னிரண்டு வருடம் அதே முறையில் விரதம் மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு முழுநாட்களும் உபவாசம் இருப்பவர்கள், முதல்நாள், அமாவாசை தினத்தன்று ஒரு நேர உணவும், உபவாசம் முடிந்து பாரணை செய்யும் ஏழாம்நாள் ஒரு நேர உணவும் உட்கொள்ளு தல் வேண்டும்.

கந்தசஷ்டி ஆறுநாட்களும் உபவாசம் இருக்க இயலாதவர்கள், முதல் ஐந்து நாட்களும் ஒருநேர உணவு உட்கொண்டு, ஆறாம்நாள் (சஷ்டிதிதி) உபவாசமிருந்து ஏழாம்நாள் பாரணை செய்து விரதத்தை நிறைவு செய்தும் பலன் பெறலாம்.

கந்தசஷ்டி விரதம் அனுட்டிப்பதில் தொண்டைமானாறு செல்வச்சந்நிதி கோயில் சிறப்பாக விளங்குவதைக் காணலாம். மேலும், ஆறாம் நாள் சூரசம்ஹாரம் வெகு சிறப்பாக நடைபெறுவதைக் கண்டு தரிசிப்பதற்கு ஏராளமான அடியார்கள் செல்வச்சந்நிதிக்கு வந்து கூடுவார்கள். அமைதியாக இருந்து உபவாசம், விரதம் அனுட்டிப்பதற்கேற்ற இயற்கையான சூழலைக்கொண்ட தலவிசேடம் இங்கு அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

**திருமுருகன் அவதாரமும் கந்தசஷ்டியும்:**

சிவபெருமானிடத்தில் பெற்றுக்கொண்ட வரங்களின் பலத்தினால் ஆணவங்கொண்ட தக்கன், தான் செய்த யாகத்துக்குச் சிவபெருமானை அழைக்கவில்லை. ஆனால், தேவர்கள் தக்கனது அதிகாரத்துக்குப் பயந்து அவனது வேள்வியில் பங்குபற்றினார்கள். தேவர்கள் இவ்வாறு தவறு செய்த காரணத்தால் இவர்கள் அசுரர்களின் அக்கிரமங்களுக்கு ஆளாகித் துன்பமடைய நேர்ந்தது. பலகாலம் துன்பம் அனுபவித்த தேவர்கள் தமது பிழையைப் பொறுத்தருளவும் விமோசனம் அளித்தருளவும் வேண்டி சிவபெருமானை வணங்கித் துதித்து முறையிட்டார்கள். வேண்டுவார் வேண்டுவதை அளித்தருளும் எம் இறைவன், தேவர்களது குறைநீக்கத் திருவுளங் கொண்டு, தமது நெற்றிக் கண்ணிலிருந்து ஆறு தீப்பொறிகளை உண்டாக்கினார். அந்த ஆறு தீப்பொறிகளும் காற்றினால் அள்ளுண்டுபோய் சரவணப்பொய்கை யில் விழுந்து ஆறு குழந்தைகளாயின. ஆறு குழந்தைகளையும் ஆறு தாமரை மலர்களில் வைத்துக் கார்த்திகைப் பெண்கள் பாலூட்டி வளர்த்தனர். உமாதேவியார், இக்குழந்தைகளை ஒன்றாக அணைத்து எடுத்தபோது, ஆறுமுகங்களும் பன்னிரண்டு கைகளும் கொண்ட ஆறுமுகப்பிள்ளையான திருமுருகன் தோன்றியருளினார்.

அருவமும் உருவுமாகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்ப்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனியாகிக்
கருணைகூர் முகங்க ளாறும் கரங்கள்பன் னிரண்டுங்கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங்கு உதித்தனன் உலகம் உய்ய.

-கந்தபுராணம்-

ஒவ்வொரு தடவையும் விழுவது மீண்டும் எழுவதற்கே என்று நம்புங்கள்.

இவ்வாறு தோன்றிய திருமுருகன், தேவர்களைச் சிறைநீக்கஞ் செய்யும்படியும் நல்வழிக்குத் திரும்பும்படியும் சூரனாதியோருக்குச் சந்தர்ப்பம் வழங்கினார். ஆயினும் ஆணவ முனைப்புக்கொண்ட அசுரர், முருகப் பெருமானை அலட்சியஞ் செய்தார்கள். அதனால் முருகப்பெருமான் அசுரர் குலத்தை அழித்துத் தேவர்களைக் காப்பாற்றியருளினார்.

அசுரர் தலைவனான சூரன், இறுதிநேரம் சேவலும் மயிலுமாக மாயா உருவெடுத்து நின்றபோது, முருகப்பெருமான், சேவலைக் கொடியாகவும் மயிலை வாகனமாகவும் கொண்டு தம்மோடு சேர்த்துக் கொண்டார் என்பது கந்தபுராணம்.

தீமைகள் செய்தாலும், அசுரர்களான சூரனாதியோர் செய்த தவப்பயனால், திருமுருகன் அவர்களது ஆணவத்தை அழித்து நல்லருள் கொடுத்துத் தம் பதத்தில் சேர்த்துக் கொண்டார்.

தேவர்களானாலும் தீவினை செய்தால் அதன் பயனை அனுபவிப்பர் என்பதும், அசுரர் களானாலும் இறைவனோடு பக்தி செய்தால் நல்ல பயனைப் பெறலாம் என்பதும் கந்தபுராணம் நமக்குக் கற்றுத்தரும் பாடமாகும்.

தேவர்கள் தம்மைக் காக்கவேண்டுமென்னும் நோக்கத்தில் தவமிருந்த இந்த ஆறு நாட்கள், "கந்தசஷ்டி" என்ற விரதநாட்களாகச் சைவ மக்களால் அனுட்டிக்கப் பெறுகின்றது.

கந்தபுராண கலாச்சாரத்தில் ஊறிய, சைவநெறியில் வாழ்கின்ற நம் தமிழ் மக்களும் ஏனைய தமிழ் மக்களும் தமிழ்க் கடவுளான திருமுருகனை வணங்கி கந்தசஷ்டி விரதம் அநுட்டிக்கும் வேளையில், இன்று உறவிழந்து, இல்லிடமிழந்து கூடுகளில் அடைக்கப்பட்டிருக் கும் நம் தமிழ் உறவுகளின் நல்வாழ்வையுங் கருத்திற்கொள்வோமாக.

# ஞானச்சுடர் மலருக்கு ஆக்கங்களை வழங்கியோருக்கான அறிவுறுத்தல்

**மேற்படி 2014, 2015ஆம் ஆண்டு காலப் பகுதியில்**

**ஞானச்சுடர் மலரில் வெளிவந்த ஆக்கங்களுக்கு**

**உரித்துடையோர் தங்கள் முகவரி, தங்களது**


**ஆக்கம் பற்றியவிபரங்களை**

**ஆவணிமாத இறுதிக்குள்**

**அறியத்தரவும்.**

**-பேரவையினர்-**

# படங்கள் தரும் பதிவுகள்



ஆடிமாத ஞானச்சுடர் வெளியீட்டின்போது சிறப்புப்பிரதி பெற்ற அன்பர்களிற் சிலர்.



நம்பிக்கை என்பது ஒருநாளில் உதிர்ந்துவிடும் பூவாக இருந்துவிடக் கூடாது.



ஆடிமாத ஞானச்சுடர் வெளியீட்டின்போது சிறப்புப்பிரதி பெற்ற அன்பர்களிற் சிலர்.



வாசிப்பு என்பது மகிழ்ச்சியான உலகத்தின் பக்கந் திறந்து வைக்கப்பட்ட கதவாகும்.

(கட்டுரைத்தொடர் - 23

# சித்தர்களின் ஞானம்

– திரு சிவ மகாலிங்கம் அவர்கள் –

## பதினெண் சித்தர்களில் பட்டினத்தார் - பாகம்- 02

உலகம் பொய்யானது; நிலையில்லாதது என்பதை உணர்ந்து உலகியல் வாழ்வை முழுமையாகத் துறந்தவர் பட்டினத்து அடிகள். துறவிவேடம் போட்டு மக்களின் அறியாமையைப் பயன்படுத்தி மக்களை ஏமாற்றும் நடிப்புத் துறவிகள் பலரை இன்று நமது சமூகத்திலே நிறையக் காணலாம். உலகியல் ஆசாபாசங்கள் அனைத்தையும் துறந்து அகமும் புறமும் பக்குவப்பட்ட நிலையில் துறவு வாழ்க்கையை மேற்கொண்டவர்களாகப் பட்டினத்தாரும் பத்திரகிரியாரும் போற்றப்படுகிறார்கள்.

ஓட்டுடன் பற்று இன்றி உலகைத் துறந்து செல்லப்
பட்டினத்தார் பத்திரகிரி பண்புணர்வது எந்நாளோ"

எனத் தாயுமான சுவாமிகள் தனது பராபரக் கண்ணிப் பாடலில் குறிப்பிடுகின்றார்.

முற்றும் துறந்த முனிவராகிய பட்டினத்து அடிகளால் தாயன்பைத் துறக்க முடியவில்லை. அடிகளது அன்னையார் தேகவியோகம் அடைந்த பொழுது பட்டினத்தார் துறவிக் கோலத்தில் தலயாத்திரை செய்து கொண்டிருந்தார். உயிர் நீத்த இவருடைய தாயாரின் உடலை இறுதிக் கிரியைகள் செய்வதற்காக உறவினர்கள் மயானத்திற்கு கொண்டு வந்தார்கள். சிதைக்குமேல் விறகுகள் அடுக்கித் தீமூட்ட ஆரம்பித்தபொழுது திருவருளால் இந்நிகழ்வினை உணர்ந்த அடிகளார் அங்கே ஓடோடி வந்தார். உறவினர்கள் தாயாரின் இறந்த உடலின் மேல் அடுக்கிய விறகுகளை அப்புறப்படுத்தினார். பச்சை வாழைத் தண்டுகளைச் சிதையின்மேல் அடுக்கி தாயாரின் திருமேனியை ஞானாக்கினியால் எரியூட்டினார்.

இந்நிகழ்வின்போது இவர் பாடிய பாடல்கள் மிக உருக்கமானவை. தாயானவள் தான் பெற்ற குழந்தைக்காகச் செய்யும் பணிகள் அனைத்தையும் உணர்வுபூர்வமாக விளக்குபவை.

முந்தித் தவம் கிடந்து முந்நூறு நாள் சுமந்தே
அந்தி பகலாச் சிவனை ஆதரித்துத் - தொந்தி
சரியச் சுமந்து பெற்ற தாயார் தமக்கோ
எரியத் தழல் மூட்டுவேன்.'.

தாயானவள் தனது குழந்தையைப் பத்து மாதம் கருவிலே சுமந்து பிரசவ வேதனையை அனுபவித்துப் பெற்றெடுக்கிறாள். தான் பெற்ற குழந்தையைப் பாலூட்டிச் சீராட்டி உடல் ஆரோக்கியத்தோடு வளர்த்தெடுக்கிறாள். இவ்வாறு அன்போடும் பரிவோடும் வளர்த்தெடுத்த தனது தாயாரை இனி எப்பிறப்பில் காண்பேன் எனக்கழிவிரக்கம் கொண்டு உள்ளம் உருகிப் பட்டினத்தார் பாடுகின்றார்.

ஐயிரண்டு திங்களா யங்கமெலா நொந்துபெற்றுப்
பையலென்ற போதே பரிந்தெடுத்துச் செய்யஇரு

கைப்புறத்தி லேந்திக் கனகமுலை தந்தாளை
யெப்பிறப்பிற் காண்பேனினி.

வேதங்களைத் தன்னுடைய வாயால் அருளிய இறைவன் சுந்தரமூர்த்தி சுவாமிகளின் வாயால் தமிழ் வேதமாகிய திருமுறைகளைக் கேட்க விரும்பினார் என்பதை,

"அர்ச்சனை பாட்டேயாகும் ஆதலால் மண்மேல்
நம்மைச் சொற்றமிழ் பாடுக என்றார் தூமறை பாடும் வாயார்"

எனப் பெரியபுராணம் குறிப்பிடுகிறது.

பட்டினத்தடிகள் தாயின் இறுதிக் கிரியைகளை முடித்து திருவிடை மருதூரில் தங்கியபொழுது "சிவபெருமான் கனவில்தோன்றி நீ நமது திருப்பதிகள்தோறும் சென்று பாடுவாயாக எனக் கட்டளையிட்டார். இவர் திருவாரூரை அடைந்தபோது மிக மோசமான சோக நிகழ்வு ஒன்றினைக் கண்டார். இவரிடம் அருள்பெற்ற இளைஞன் திருமணமான பின்பு சடுதியாகச் சன்னி வருத்தம் (நிர்மோனியா) ஏற்பட்டு இறந்து விட்டான். குடும்பத்திற்கு ஒரே பிள்ளையாய் இருந்தவன் இறந்துவிட்ட சோகத்தைத் தாங்கமுடியாது பெற்றோர் பட்டினத்தடிகளிடம் வந்து முறையிட்டனர். பட்டினத்தார் இறைவனை நினைந்து பின்வரும் பாடலைப் பாடி இளைஞனை உயிர்பெற்றெழச் செய்தார்.

வடிவந்தானும் வாலிபம் மகளும் தாயும் மாமியும்
படிகொண்டாரும் ஊரிலே பழிகொண்டாடல் நீதியோ
குடிவந்தானும் ஏழையோ? குயவந்தானும் கூழையோ
நடுநின்றானும் வீணனோ நகரஞ் சூறையானதே.

கொலை, களவு, கள், காமம், சூது ஆகிய பஞ்சமா பாதகங்களையும் செய்யாது விலகி வாழ்தலே அறவாழ்வு ஆகும். எந்த ஒரு உயிரையும் கொல்லாமல் இருப்பதோடு உயிர்நீத்த புண் உடலை உண்ணாமலும் இருத்தலே புண்ணியச் செயல் எனப்படும். போக விட்டுப் புறம் சொல்லுதல், கோள் சொல்லுதல் பிறர் பொருட்களைத் திருடுதல் ஆகிய வற்றைத் தவிர்த்து வாழ்தலே தூய்மையான வாழ்வு ஆகும். கனவிலும் பொய் சொல்லாமல் இருக்கவும், துன்பம் விளைக்கும் சொற்களைக் கேளாமலிருக்கவும், மாதர் வலையில் மயங்காமல் இருக்கவும் தனக்கு அருள் செய்யவேண்டுமென்று தில்லைக் கூத்தனின் திருவடிகளைப் பணிந்து பட்டினத்தார் வேண்டுகின்றார்.

"கொல்லாமற் கொன்றதைத் தின்னாமற் சூத்திரங் கோள் களவு
கல்லாமற் கைதவரோடிணங்காமற் கனவினும் பொய்
சொல்லாமற், சொற்களைக் கேளாமற் தோகையர் மாயையிலே செல்லாமற்
செல்வந் தருவாய் சிதம்பர தேசிகனே.

ஆன்மீக சிந்தனைகளை அகத்திலே உருவாக்கி மனிதனைப் புனிதனாக்கும் சிவ கதைகளைப் படிக்கமாட்டார்கள். ஒருநாளும் உண்மை பேசமாட்டார்கள். பசித்து வந்த வர்களுக்கு உணவு அளிக்கமாட்டார்கள். குருவின் உபதேசத்தைக் கேட்டு நடக்கமாட்டார்கள். தர்மம் செய்ய வேண்டும் என்ற நினைப்பு அவர்களுக்கு ஒருபோதும் ஏற்படுவதில்லை. இறைவனது திருநாமம் நினைப்பில் சிறிதும் இல்லாதவர்களாக இருப்பார்கள். இப்படி யானவர்கள் பூமியில் வாழ்வதால் யாது பயன்? இறந்தால் யாது கெடுதி விடை தருவாய் திருக்கச்சியேகம்பனே என்று இறைவனை வேண்டிப் பாடுகின்றார்.

*தன்னால் இயன்றதைச் செய்பவன் வீரன். மற்றவர்கள் அதைச் செய்வதில்லை.*

கல்லார் சிவகதை; நல்லோர் தமக்குக் கனவிலும் மெய்
சொல்லார்; பசித்தவர்க்கன்னங் கொடார்; குரு சொன்னபடி
நில்லார் அறத்தை நினையார்; நின்னாம நினைவிற் சற்று
மில்லாரிருந்தென்? இறந்தென்? புகல்! கச்சியேகம்பனே.

வாழ்நாள் முழுவதும் தனது உடம்பை வளர்ப்பதிலே கண்ணும் கருத்துமாகச் செயற்படுபவர்கள் பலரை உலகியலிலே நாம் காண்கின்றோம். உடம்பு பொய்யானது; நிலையில்லாதது. வெறும் காற்றடைத்த பை; எப்பொழுது இந்த உயிர் கழன்று உடல் மண்ணில் விழும் என்பது யாருக்கும் தெரியாது. மாயக் குயவன் செய்த மட்பாண்டம் இந்த உடம்பு என்பதைக் "காயமே இது பொய்யடா; வெறும் காற்றடைத்த பையடா" என்பது பட்டினத்தாரின் கூற்றாகும்.

நிலையில்லாத உலகியல் வாழ்வை நிலையானது என நினைத்து எனது வாழ்நாளை நான் வீழ்நாளாக்கி விட்டேன். புத்தி தடுமாறிப் பொல்லாத வழிகளில் எல்லாம் அலைந்திட்டேன். தன்னைக் காத்தருளி நல்வழிகாட்ட வேண்டுமென்று அன்னை பராசக்தியின் பாதங்களைப் பற்றிப் பிடித்துக் கவிஞன் ஒருவன் பின்வருமாறு பாடுகின்றான்.

"நில்லா உலக வாழ்வை நான் நிலையென்று கொண்டு நித்தம்
பொல்லா வழிகளிலே புத்திகெட்டு அலைந்திட்டேன்"

என்று கழிவிரக்கம் கொண்டு மனம் வருந்திப் பாடி அம்பிகையிடம் சரணாகதி அடைகின்றான்.

அழுக்கு உடம்பு இந்த உடல்; நிந்தனைக்குரிய பல சரக்குகளைத் தன்னிடத்திலே சேர்த்து வைத்திருக்கிறது. தசை பொருந்திய பல துவாரங்களை உடையது. அன்னத்தை உள்ளே இட்டுத் தோலாற் செய்யப்பட்ட பை. ஐம்பூதங்களில் ஒன்றாகிய காற்றை அகத்திலே சேர்த்து வைத்திருக்கும் நிலையற்றதாகிய மட்பாண்டம். இதன்மீது பற்றுக்கொண்டு அதனைத் தாங்கி இவ்வளவு காலமும் திரிந்துவிட்டேன் என்று வேதனையோடு பாடுவதைப் பின்வரும் பாடலிலே காணலாம்.

ஊத்தைச் சரீரத்தை ஆசாபாசக் கொட்டிலை ஊன்பொதிந்த
பீற்றற் துருத்தியைச் சோறிடுந் தோற்பையைப் பேசரிய
காற்றிற் பொதிந்த நிலையற்ற பாண்டத்தைக் காதல்செய்தே
ஏற்றுத் திரிந்து விட்டேனிறைவா கச்சியேகம்பனே.

இனிமையும் மெய்ம்மையும் உடைய சொற்களைப் பேசாது பாவத்தை விளைவிக்கும் கடும் சொற்களையே சிலர் எந்நாளும் பேசுவார்கள். இவர்களைக் கடும் சொல்லின் வம்பர் எனப் பட்டினத்தார் குறிப்பிடுகின்றார். பழிச் செயல்கள் செய்யத் தயங்காதவர்கள் என்பதால் ஈனர்கள் என்கிறார். நெறி தவறிய விபச்சாரத்தினால் விளைந்த புத்திரர்களைக் குண்டர்கள் எனவும், ஆத்த மனையாள் அகத்திலிருக்க காத்த மனையாளைக் காமுறுபவர்களைக் காமுகர் என்றும், பழிநோக்காது பாவம் செய்பவர்களை நிர்மூடர் என்றும், ஒருவரும் நிற்க நிழல் தராத பனைமரத்தைப்போல இவர்களை ஏன் படைத்தாய் என்றும் காஞ்சி மாநகரிலே எழுந்தருளி அருள்பாலிக்கும் ஏகாம்பர நாதரிடம் பட்டினத்தார் முறையிடுவதைப் பின்வரும் பாடல் தெளிவாக விளக்குகிறது.

*எங்கும் இருள் என்பது கிடையாது. அறியாமைதான் இருள்.*

கடும் சொலின் வம்பரை ஈனரைக் குண்டரைக் காமுகரைக்
கொடும் பாவமே செயு நிர்மூடர் தம்மைக் குவலயத்து
நெடும் பனைபோல வளர்ந்து நல்லோர் தம்நெறியறியா
விகும்பரை யேன் வகுத்தாய் இறைவா கச்சியேகம்பனே!

நிலையில்லாத செல்வத்தை மட்டும் தேடுவதிலே கருத்தைச் செலுத்தாமல் இறைவனுடைய திருவருள் செல்வத்தை தேடக் கருணைபுரிய வேண்டும் என்று சிதம்பர தேசிகனை வேண்டுகின்றார்.

"தேடிச் சோறு நிதம் தின்று பலசின்னம் சிறு கதைகள் பேசி
மனம் வாடித் துன்பம் மிக உழன்று பிறர்வாடப் பல செயல்கள் செய்து"

என்று மகாகவி பாரதி பாடுவதுபோல ஓய்வு உறக்கமின்றி ஓடி ஓடி உழைத்து ஓடாகிப் போகாமல் இருத்தல் வேண்டும்.

உலகியல் நாட்டம் கொண்டு ஓடாதிருக்கவும், வீணுக்கு உழையாமலிருக்கவும், நடுநிலை தவறிப் பாராபட்சமாகப் பேசுபவர்களுடன் சேராதிருக்கவும், ஞானிகளின் சகவாசத்தில் இருந்து நீங்காதிருக்கவும் இன்றைக்கு வேண்டும் நாளைக்கு வேண்டும் என்று பொருளாசை கொண்டு அலையாமல் இருக்கவும், தேவரீரது திருவடியாகிய செல்வத்தை அடியேனுக்குத் தந்தருள வேண்டும் என்று சிவகாமி அம்பாள் சமேத சிதம்பரேஸ்வரப் பெருமானை வேண்டுவதைப் பட்டினத்தாரின் பின்வரும் பாடல் விளக்குகிறது.

ஓடாமற் பாழுக்குழையாமல் ஓரமுரைப்பவர்பாற்
கூடாமல் நல்லவர் கூட்டம் விடாமல் வெங்கோப நெஞ்சில்
நாடாமல் நன்மை வழுவாமல் இன்றைக்கு நாளைக்கென்று
தேடாமல் செல்வந் தருவாய் சிதம்பர தேசிகனே!

அடியவர்களுக்கு எளியவனாக அம்பலவாணன் காட்சி கொடுப்பான். "எண்ணுவார் நெஞ்சில் நண்ணுவான் ஈசன்" என்றே திருமுறையும் குறிப்பிடுகிறது. சித்தம் சிவமாகிவிட்டால் செய்கின்ற செயல்கள் யாவும் தவமாகிவிடும் என்பதைச்

"சித்தத்தைச் சிவமாக்கிச் செய்தனவே தவமாக்கும் அத்தன்" எனத் திருவாசகமும் குறிப்பிடுகிறது.

பொன்னம்பலத்தில் வீற்றிருந்து ஆனந்த நடனம் புரியும் தில்லைக் கூத்தனது திருவடிகளை வணங்கினால் இம்மையில் சகல செல்வ யோகமிக்க பெருவாழ்வும் மறுமையில் தகமை சிவஞான முத்தியும் பரகதியும் கிடைக்கும். ஏழுலகங்களையும் அளந்த திரிவிக்ரமனும் பிரமனும் பார்த்தறியாத பரம்பொருளாக இருப்பவன் நிர்மலனாகிய சிவன். அவனுக்கே நாங்கள் அடிமைகள் ஆவோம். எங்கள் குலதெய்வமும் அவரே எனப் பட்டினத்தார் பாடுகின்றார்.

அடியார்க் கெளியவர் அம்பலவாணர் அடிபணிந்தால்
மடியாமல் செல்வவரம் பெறலாம். வையமே ழளந்த
நெடியோனும் வேதனுங்காணாத நித்த நிமலனருட்
குடிகாணு நாங்களவர்காணு மெங்கள் குலதெய்வமே.

*கடும் காற்று மழை கூட்டும். கடும் நட்பு பகை காட்டும்.*

"மனம் போன போக்கெல்லாம் போகவேண்டாம்" என்பது மூதுரை. மனம் அடங்கினால் முத்தி, சினம் அடங்கினால் சித்தி என்பது சித்தரின் வாக்கு. கெடுவாய் மனனே! என்று அருணகிரிநாதரும், துணையிலி பிண நெஞ்சே என்று மணிவாசகரும் நெஞ்சுக்கு அறிவுறுத்தும் பாடல்களைப் பாடியுள்ளார்கள். சுடர்விட்டுப் பிரகாசிக்கும் நாராயணனின் பாதங்களைப் பணிந்து வணங்கினால் ஆன்மாக்களைப் பீடித்திருக்கும் துயர் அத்தனையும் நீங்கிவிடும் என்பதைத் "துயரறு சுடரடி தொழுதெழு மனனே" என நம்மாழ்வார் தனது திருவாய்மொழிப் பாடலில் குறிப்பிடுகின்றார். மனம் ஒருவழி நில்லாது என்பதனை

"காடுங் கரையு மனக்குரங்கு கால்விட்டோட
அதன் பிறகே ஓடுந் தொழிலாற் பயனுளதோ"

எனத் தாயுமானவரும் தனது பாடலிலே குறிப்பிட்டுள்ளார்.

மனம் ஒருவழி நில்லாது பல வழியிற் சென்று இளைக்குமாதலின்; அதனை நோக்கி ஒருவழி நிற்க வேண்டும் என்பார் பட்டினத்தார். "தவியாதிரு நெஞ்சமே" என நெஞ்சுக்குக் கட்டளையிடுவார். பஞ்சகிருத்திய நடனம் செய்வதற்காகத் தில்லையில் எழுந்தருளியிருப்பதால் "தில்லை மேவிய சங்கரனே" என்கிறார். ஞானமே திருமேனியாக உடையவராதலால் "புவியார்ந்திருக்கின்ற ஞானாகரனே" என்றும் தேவர்களைக் காப்பாற்று வதற்காகத் திரிபுரத்தை எரித்தவராகையால் "புராந்தகன்" எனவும் நடராஜனைக் குறிப்பிடு கின்றார். உலகுக்கொரு தூண்டா விளக்காக இருப்பதால் "அவியா விளக்கு" எனவும் பொன்னம்பலத்திலே திருநடனம் ஆடுவதால் "பொன்னம்பலத்தாடியை" எனவும் சுட்டுகின்றார். உலகியல் பற்றுக்கள் நீங்கி ஆன்மா சிவகதி அடைவதற்குத் துணையாக இருப்பது பஞ்சாட்சர மந்திரமே என்கிறார். ஐந்தெழுத்து மந்திரத்தைச் செபித்தால் பிறவிநோய் நீங்கி முத்திப்பேறு கிடைக்கும்; சிவகதி அடையலாம் என உறுதியாகக் கூறுகின்றார்.

தவியாதிரு! நெஞ்சமே தில்லைமேவிய சங்கரனைப்
புவியார்ந்திருக்கின்ற ஞானாகரனைப் புராந்தகனை
அவியா விளக்கைப் பொன்னம்பலத் தாடியை ஐந்தெழுத்தாற்
செவியாம நீ செபித்தாற் பிறவாமுத்தி சித்திக்குமே.

பட்டினத்துப் பிள்ளையார் அருட்புலம்பல் என்று இறைவனிடம் முறையீடு செய்து குறள் வெண்பா வடிவில் சில பாடல்களைத் தந்துள்ளார். இறையருளைப் பெற்றவர்களுக்கு பூவினிற் கந்தம் பொருந்தியவாறுபோல், அகத்திலே இறைவன் வீற்றிருப்பான். இறை அருளைப் பெறாதவர்கள் கல்லாற் செய்யப்பட்ட பூ போல வாசனை எதுவுமின்றி இருப்பார்கள் என்பதைப்,

"பொற்போவும் வாசனை போற் போதம் பிறந்தார்க்குக்
கற்பூவும் வாசனைபோல் காணாக்கயவருக்கு"

எனப் பட்டினத்து அடிகளின் அருட்புலம்பல் பாடல் குறிப்பிடுகிறது.

(தொடரும்...

ஒருவர் லட்சியத்தில் கொண்டிருக்கும் உறுதியே, அவரது வெற்றியின் ரகசியம்.

# சுந்தரர் செந்தமிழ்

- திரு அ. சுப்பிரமணியம் அவர்கள் -

சுந்தரமூர்த்தி சுவாமிகள் சமயக்குரவர் நால்வருள் ஒருவர். குரவர் என்ற சொல்லுக்குப் பாதுகாவலர் என்பது பொருள். சைவ சமயத்தையும் சிவநெறியினையும் சமண பௌத்த சமயிகளிடமிருந்து மீட்டுப் பாதுகாத்தவர்கள். இவர்களில் சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடியுள்ள செந்தமிழ்ப் பதிகங்கள் பற்றி ஆராய்தலே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

சமய குரவர் மாத்திரமன்றிச் சந்தான குரவர்களும் சைவ சமயம் சிவநெறி ஆகிய வற்றின் வளர்ச்சிக்காக அருந்தொண்டாற்றியுள்ளனர். சந்தான குரவர், புறச் சந்தான குரவரென இரு வகையினர் உ ளர். சந்தான முதன்மையானவராய் திருமூல தேவ நாயனர் ஆக்கியளித்த பொக்கிஷம் பத்தாவது திருமுறையுள் அடக்கப்பட்டுள்ளது. அதுவே திருமந்திரமாகும். இது ஒரு மந்திர நூல். தோத்திர நூல் மற்றும் யோகநூலும் சாத்திர நூலுமாகும். திரு மூலதேவ நாயனார் ஒரு சித்தபுருடராவர். "அன்பே சிவம்" என்பது அன்னாரது தாரக மந்திரமாகும். ஔவையார் பாடியுள்ள "தேவர்குறளும்" என்று தொடங்கும் தனிச்செய்யுள் ஒன்றில் "மூவர் தமிழும் திருமூலர் சொல்லும் ஒருவாசகமென்றார்.

"அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது யாருமறி கிலார்
அன்பே சிவமாவது யாருமறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருப்பாரே"

என்கிறார்.

திருமூலர் திருமந்திரமன்றி மெய்கண்ட தேசிக சுவாமிகள் அருளிய சிவஞானபோதம், சிவஞான சித்தியார் ஆகிய நூல்களும் மறைஞான சம்பந்த சுவாமிகள் அருளித் தந்த "திருக்களிற்றுப் படியார்" என்ற நாலும் உமாபதி சிவாச்சாரிய சுவாமிகள் பாடியருளிய "சித்தாந்த அட்டகம்" எனப்படும் எட்டு நூல்களும் இன்னும் பலவும் சந்தான குரவர்களினாலே சைவ சமயமும் சிவநெறியும் பூவுலகில் அழிவடையாது பாதுகாத்துளதென்பதில் சந்தேகமே இல்லை.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் கைலையங்கிரியிலே ஆலால சுந்தரர் என்னும் திருநாமத் துடன் கைலையாருக்குப் பூத்தொண்டு புரிந்து வந்தவர். அவ்வாறே அநிந்திதை, கமலினி ஆகிய இரு சேடியரும் அம்பிகைக்குப் பூத்தொண்டு புரிந்து வந்தனர். இரு பகுதியாரும் நந்தவனத்தில் மலர் பறிக்கும் போது சுந்தரர் கன்னிகையர்மீது தம்மனதைப் பறிகொடுத்து விட்டார். இதையுணர்ந்த இறைவன் அவரைப் பூமியிலே பிறந்து நீ மனதைப் பறிகொடுத்த வருடன் இன்புற்று மீண்டும் வருக எனப் பணித்தார். அப்போது "ஐயனே! பூமியில் சம்சார சாகரத்தில் மூழ்கிவிடாது தடுத்தாள வேண்டும்" என்று வேண்டினார். இறைவன் "அப்படியே செய்வேன்" என மொழிந்தார். இப்படி இறைவன் தடுத்தாட்கொண்ட வரலாறு யாவரும் அறிந்த ஒன்றேயாம்.

இதன்படி பூவுலகில் திருமுனைப்பாடி நாட்டின் திருநாவலூரில் ஆதி சைவப் பிராமண மரபில் கி.மு 807இல் சடையனாருக்கும் இசைஞானியாருக்கும் புத்திரனாக அவதரித்தார்.

*நல்ல புத்தகங்களைப்போன்ற நம்பிக்கை இந்த உலகத்தில் இல்லை.*

அவரது பிள்ளைத் திருநாமம் "ஆருரர்" என்பதாகும். இயற்கையிலேயே மிக நுண்ணறிவு படைத்தவர். அத்தோடு நரசிங்கமுனையரால் மகவாக எடுக்கப்பட்டு நல்லறிவூட்டப்பட்ட வராகவும் திகழ்ந்தார். இவர் மனம் கொண்ட கன்னியராய அநிந்திதை, கமலினியாகியவர் பரவையார், சங்கிலியார் ஆகிய பெயர்களுடன் பூமியிலே பிறந்திருந்தனர்.

சுந்தரர் ஆசை வைத்தவர்களை அனுபவித்து வருமாறு இறைவனால் பூவுலகிற்கு அனுப்பப்பெற்ற போதிலும் சைவ சமயமும் சிவநெறியும் வளர்த்தார் என்பதே உண்மையாகும். தடுத்தாண்ட நேரம் பெரியவர்கள் "உமது வீடு எங்கே" என்று கேட்டவர்களுக்கு "இன்னும் எனது வீட்டை அறியவில்லையா? வாருங்கள் காட்டுகிறேன்" என்று முன் செல்லப் பெரியோர்கள் பின் தங்கிவிட ஆருரர் மட்டும் தொடர்ந்து செல்ல உள்ளே சென்றவர் மறைந்துவிடத் திகைத்து நின்றார். இறைவன் வாசலில் விட்டுச் சென்ற மிதியடிகளும் ஊன்று கோலும் திருவெண்ணெய் நல்லூர் கோவில் வாசலில் இன்றும் காணப்படுவதாக ஐதீகம். உள்ளே மறைந்தவர் இடபாருடராகக் காட்சியளித்துச் "சுந்தரா; செந்தமிழால் என்னைப் பாடுக" என்றார். ஐயனே! "எதுவும் அறியாத நான் எவ்வாறு பாடுவேன்" என்றார். அப்போது இறைவன் "பெரியோர் நிறைந்த சபை நடுவே என்னைப் 'பித்தா' என்று ஏசினாய் எனவே, பித்தா என்றே தொடங்கிப் பாடுக" என்றருளினார். சுந்தரரும் "அவனருளாலே அவன் தாள் வணங்கிப் "பித்தா பிறைசூடி" என்று தொடங்கி "அத்தா உனக்காளாய் இனி அல்லேன் எனலாமோ" என்று பாடினார். சுந்தரரின் செந்தமிழ்ப் பாடல் கேட்டு மகிழ்ந்த இறைவன் தலங்கள்தோறும் யாத்திரை செய்து பல்லாயிரக் கணக்கான செந்தமிழ்ப் பாடல்களைப் பாடி இறைவனுக்குச் சூடி மகிழ்ந்துள்ளார். இவற்றுள் ஏராளமானவை கறையானுக்கு இரை யாக நூறு செந்தமிழ்ப் பதிகங்களே கிடைக்கப்பெற்று 7ஆவது திருமுறையில் வைக்கப் பட்டுள்ளமை நினைக்கும்போது தமிழன் அதிலும் சிவநெறியாளராய சைவ சமயி எத்துணைப் பாவிகள் என்பது புலப்படும்.

"தில்லைவாழ் அந்தணர்தம்" என்று தொடங்கும் சுந்தரரின் செந்தமிழாம் "திருத் தொண்டத் தொகையே" சேக்கிழாரடிகள் பாடியுள்ள "திருத்தொண்டர் புராணம்" எனப்படும். "பெரியபுராணம் பாடுவதற்கு அடிப்படையாக அமைந்தது எனலாம்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடியருளிய தூய செந்தமிழ்ப் பாடல்களைக் கேட்டு மெய் மறந்தவர் சிவனாராவர். சுந்தரர் சென்ற மார்க்கம் சக மார்க்கமாகும். தோழமை நெறி என்பதும் இதுவே. இறைவனிடம் தோழமை நெறிபூண்ட காரணத்தால் "தம்பிரான் தோழர்" எனப் பெயர் பெற்றார். அதன்மூலம் இறைவனிடமிருந்து பல சலுகைகள் கிடைக்கப்பெற்றவர். குன்றையூரிலே பெற்ற நெல்லைக் கொண்டுவர உதவி பெற்றார். மணிமுத்தாற்றிலே போட்ட பொன் நிதியை பொற்றாமரைக் குளத்தில் மிதக்க வைத்தார். செங்கட்டிகளைப் பொன்கட்டிகள் ஆகச் செய்தார். இவ்வாறு மேலும் பல தேவைகளை நிறைவு செய்தவர். திருவதிகையில் சித்தவடமடத்தில் நித்திரை செய்யும்போது இறைவனது திருவடி தீட்சை கிடைக்கப்பெற்றார். பின்பு பல தலங் களையும் தரிசித்து இறைவனை மகிழ்விக்கும் நல்ல செந்தமிழ்ப் பதிகங்கள் பாடி அடியவர்களுடன் கூடி உலா வந்தார். அப்போது இறைவன் கைலையிலே கட்டளையிட்ட முன்னை வினை கைகூடிவரத் திருவாரூரில் வந்து அவதரித்தவரான பரவை நாச்சியாரைத் திருமணம் செய்து அங்கு தங்கி இருந்தார். அங்குள்ள தேவாசிரியர் முன்புநின்று அடியவர்களைத் தொழுது "திருத்தொண்டத் தொகை" பாடியுள்ளார்.

*மூடத்தன நோயை விரட்டும் மூலிகைகளே புத்தகங்கள்.*

அங்கிருந்து மேலும் பல தலங்களைத் தரிசித்து செந்தமிழ்ப் பதிகங்கள் பாடி இறைவனை மகிழ்வித்து வந்தவர் அங்கிருந்து புற்றிடம் கொண்டாரை வழிபட்டு நிற்கும்வேளை ஒரு சிறிய விளையாட்டு நிகழ்த்த எண்ணிய இறைவன் திருக்கைலையிலே அம்பிகைக்குப் பூத்தொண்டு புரிந்துவந்த இருவரில் ஒருவர் சங்கிலியார் என்ற பெயரில் புற்றிடம் கொண்ட பெருமானுக்குப் பூத்தொண்டு புரிந்து வழிபாடாற்றி வருபவர். அன்றும் வழமையாகப் பூமாலை கொண்டு வழிபாடாற்ற வருகை தந்திருந்தார். அதேநேரம் இறையருளினால் முன்வினைப் பயனாக ஆரூரரும் அப்பெருமானை வழிபாடாற்ற வந்தவிடத்துத் தற்செயலாகச் சங்கிலியாரைச் சந்திக்கும் வாய்ப்புக் கிட்டியது. அவரே கைலையங்கிரியில் மனம் பதிவுகொண்ட கன்னியரில் ஒருவர் என்பது தெரியாதவராகி அவர்மீது மனது பறிகொடுத்தவராகி அவரையே தமக்கு மணம் முடித்து வைக்குமாறு இறைவனிடம் வேண்டுதல் செய்து அவ்வூர் மடத்தில் உறங்க லானார். இதன்போது இறைவன் சங்கிலியாரின் கனவிலே தோன்றி சுந்தரன் உன்னை மணம்புரிய விரும்புகிறான். ஆனால் அவன் ஒரு இடத்தில் நிலைத்து இருப்பதில்லை. தலங்கள் தோறும் சுற்றித்திரிந்து செந்தமிழ்ப் பதிகம் பாடி மகிழ்வான். எனவே நாளை கோயிலில் வந்து உன்னிடம் சம்மதம் கேட்பான், அப்போது என்னைவிட்டுப் பிரிவதில்லை என்று சத்தியம் செய்து தருமாறு கேள் என்றுகூறி மறைந்தார். மறுநாள் கோவிலுக்கு வந்த சுந்தரர் சங்கிலியாரிடம் விருப்பம்கேட்டபோது தானும் விரும்புவதாகவும் அதனால் என்னை என்றும் விட்டுப் பிரியமாட்டேன் என்று சத்தியம் செய்துதர வேண்டும் எனவும் வேண்டுதல் செய்தார்.

இந்நிலையில் சிறிது தயங்கிய சுந்தரர் இறைவன் தாம் கேட்பதெல்லாம் செய்து தருவார் என்றமுறையில் சத்தியம் செய்துதர ஒப்புக்கொண்டார். சங்கிலியாரும் மகிழ்ச்சியுடன் நித்திரைக்குச் சென்றார். ஆனால் உறங்குதலின்றித் தவித்த சுந்தரர் இறைவனிடம் சென்று "பெருமானே யான் நாளை சங்கிலியாருடன் சத்தியம் செய்யவரும்போது நீவிர் இங்கிருக்காது வெளியேறி அந்த நந்தவனத்தில் உள்ள மகிழமரத்தின்கீழ் அமர்ந்திடவேண்டும்" என்று விண்ணப்பித்தார். "அவ்வாறே செய்கிறேன்" என வாக்களித்தமை கேட்ட சுந்தரர் மிக்க மன மகிழ்வோடு உறங்கலானார். ஆனால் பாவம் இறைவனது அடுத்த விளையாட்டுப்பற்றி அறிந்துகொள்ள முடியாத பேதை. இதனிடையே சுந்தரர் கேட்டவண்ணம் மகிழ மரத்தின் நிழலில் தங்குவதாகக் கூறிய இறைவன் தூங்காநிலை எய்திருந்த சங்கிலியாரிடம் சென்று "நாளை சுந்தரன் உம்மை அழைத்துக்கொண்டு சத்தியம் செய்துதரக் கருவறைக்கு (மூலஸ்தானம்) நோக்கி வருவான். அப்போது நீவிர் இதற்கெல்லாம் கருவறைக்குப் போக வேண்டாம். அதோ அந்த மகிழமரத்தடியில் சத்தியம் செய்து தந்தால் போதும் என்று சொல்" என்று கூறி மறைந்தார். மறுநாள் மகிழமரத்தின்கீழ் சத்தியம் செய்து தந்தால்போதும் என்று சங்கிலியார் கூறச் சிறிது துணுக்குற்ற சுந்தரன் தனது குட்டு வெளிப்பட்டுவிடுமோவெனப் பயந்து சத்தியம் செய்து கொடுத்தார். "ஒற்றியூரை விட்டு விலகேனே" என்று சத்தியம் செய்து கொடுத்துச் சங்கிலியாரை மணந்தவர் சத்தியம் மறந்து ஊரெல்லை தாண்டியதால் கண்கள் மறைந்து குருடராகிறார். இங்கு சுந்தரமூர்த்தி சுவாமிகளின் ஊனக் கண்களே மறைந்தன. ஆனால் அவரது ஞானக்கண்கள் திறக்கின்றன. மனச்சாட்சி பேசுகின்றது. "பேதையே பெண்களை ஏமாற்ற நினைத்தாயே நீயே ஏமாந்து பூவுலகோர் முன்னிலையில் கண் இழந்து நிற்கின்றாயே" இறைவன் எல்லாம் அறிபவர் என்பதை உணர்ந்து கொள்ள வில்லையே? இன்னும் கெட்டுப்போய்விடவில்லை. அவனடியே சரணடைந்து அவனருளாலே

*ஒரு நூலகத்தையும் ஒரு தோட்டத்தையும் வைத்திருக்கும் ஒருவருக்கு வேறெதுவும் தேவையில்லை.*

உய்திபெறுக" என்றது சுந்தரனின் மனச்சாட்சி. அவ்வாறே சுந்தரர் முதலில் அடியார்கள் வழிகாட்டப் பல பதிகளையும் பதிகங்கள் பாடி வழிபாடாற்றிச் செல்லும்போது திருவெண் பாக்கத்தில் ஊன்றுகோல் கிடைக்கப்பெற்றுக் காஞ்சீபுரம் சென்று வழிபட்டதால் இடக்கண் பார்வை மட்டும் கிடைக்கப்பெற்றார். இறுதியில் திருவாரூரை அடைந்து "மீளா அடிமை உமக்கே ஆளாய்" என்று பதிகம் பாடி வலக்கண் கிடைக்கப்பெற்றார். இதனிடையே பரவையார் ஊடல் கொண்டிருப்பதை அறிந்த சுந்தரர் இறைவனை இருதரம் தூதனுப்பி ஊடல் தீர்த்து வைத்தமையை அறிந்த "ஏயர்கோன் கலிக்காம நாயனாரின் கோபத்தைத் தணிக்கவென ஓடோடிச் செல்வதற்கிடையில் தமது உடைவாளால் வயிற்றைக் கிழித்து உயிர் துறந்து விட்டார். இதுகண்டு வருந்திய ஆரூரர் இறைவனருளால் அவரை உயிர்பெறச் செய்தார்.

சேரமான் பெருமான் நாயனர் திருவாரூருக்கு வருகைதர அவரை வரவேற்று உபசரித்தார் ஆரூரர். பின்பு சேரமானுடன் சேர்ந்து புறப்பட்ட சுந்தரர் மெய்யடியார் உடன் வர பாண்டிநாடு, சோழநாடு, கொங்குநாடு ஆகியவற்றில் உள்ள கோவில்தோறும் செந்தமிழ்ப் பதிகங்கள் பாடி வழிபாடாற்றி வந்தனர். இறுதியாகக் கொடுங்கோளூரையடைந்த சேரமான் பெருமானால் உபசரிக்கப்பெற்று வரும் வழியில் இறைவனது ஏவலால் பெரு நிதியம் வேடுவ கள்வர் உருவில் வந்த பூதகணங்களால் அபகரிக்கப்பட "கொடுகு வெஞ்சிலை" என்ற செந்தமிழ்ப் பதிகம் பாடிப் பெருநிதியம் திரும்பப் பெற்றுத் திருவாரூரை அடைந்து சில நாட்கள் தங்கி இருந்தார். இங்கே இறைவன் இவ்விளையாட்டினை நடத்தியமை சுந்தரமூர்த்தி சுவாமிகளின் உள்ளம் உருக்கும் செந்தமிழ்ப் பாடல்கள் கேட்கும் ஆசையே எனலாம்.

அடியாருடன் கூடி மலை நாடு செல்லப் புறப்பட்டவர் வழியிலே அவிநாசியில் ஒரு வீட்டில் அழுகுரலும் அயல் வீட்டில் மங்கல ஒலியும் கேட்க அயலில் நின்றவர்களை என்ன நடந்ததென வினாவினார். நின்றவர்களில் முதியவர் ஒருவர் முன்வந்து வணங்கி, "இரு வீட்டிலும் ஒரே நாளில் பிறந்த சிறுவர்கள் ஆசாரநெறி தவறாது வாழ்ந்தவர்கள். ஒன்றாகவே கற்று வந்தவர்கள். ஒருநாள் இருவரும் ஒன்றாகவே வழமையாகக் குளிக்கும் குளத்திற் குளிக்கச் சென்றனர். அக்குளத்தில் இருந்த முதலை ஒரு பிள்ளையை இழுத்துச் சென்று விழுங்கிவிட்டது. அதனால் இறந்த சிறுவன் வீட்டில் அழுகுரல் கேட்கிறது. மற்றச் சிறுவனுக்குப் பதினொரு வயதானதால் பூநூல் சடங்கு நடைபெறுவதால் மங்கல ஒலி கேட்கிறது" என்று கூறி நின்றார். அதுகேட்ட சுந்தரர் இறைவன் விரும்பும் செந்தமிழ்ப் பதிகம்பாடி அவரருளால் "அமங்கல ஒலிகேட்கும் வீட்டிலும் மங்கல ஒலி எழச் செய்வேன் எனச் சூளுரைத்துக் கொங்கு நாட்டில் உள்ள அவிநாசிப் பெருமானை வணங்கி,

"உரைப்பார் உரை உகந்துள்க
வல்லார் தங்கள் உச்சியாய்
அரைக் காட்ரவா ஆதியும் அந்தமும் ஆயினாய்
புரைக்காடு சோலைப் புக்கொளியூரவி நாசியே
கரைக்கால் முதலையைப்
பிள்ளை தரச் சொல்லு காலனையே"

என்று தீந்தமிழ்ப் பதிகம் பாடினார்.

எந்தவீட்டில் நூல் நிலையம் இருக்கிறதோ அந்த வீட்டில்தான் ஒளிவிளக்கு இருக்கின்றது.

இங்கே "சொல்" என்று காலனுக்கு உத்தரவு போடுகிறார். முன்பொருமுறை சிவனிடம் உதை வாங்கிய பயத்தில் காலன் முதலைக்கு உத்தரவிட அது கொண்டுவந்து பழம் உமிழ்வதுகோல் 11வயதுப் பாலகனை உமிழ்ந்துவிட்டு ஓடி மறைந்தது. இந்த இடத்தில் எவ்வித தடையமும் இல்லாமல் சதையும் இரத்தமுமாக ஐந்து வயதில் விழுங்கிய சிறுவனைப் பதினொரு வயது நிரம்பிய சிறுவனாகப் பூநூல் சடங்கு மேற்கொள்ளக்கூடியதாக அமங்கல ஒலிகேட்ட வீட்டிலும் மங்கல ஒலி எழச் செய்ததான அற்புதம் சுந்தரரின் செந்தமிழ்ப் பாடல்களின் அற்புதம்தான் என்னே?

நால்வர் நான்மணிமாலை பாடியுள்ள சிவப்பிரகாசச் சுவாமிகள் எது பெரிய அற்புதம் என்று கேள்வி எழுப்பி சுந்தரர் செந்தமிழே பெரிய அற்புதம் என முடிவும் கூறுகிறார். எவ்வாறெனில் திருஞானசம்பந்த சுவாமிகள் இறந்த வணிகனது உடலை வைத்து இறைவனைத் தொழுது அவரருள் வேண்டிப் பெற்றுப் பதிகம்பாடி உயிரெழச் செய்கிறார். இன்னோரிடத்தில் குடத்தில் இருந்த சாம்பரை வைத்துச் சிவனை வேண்டிப் பதிகம் பாடிப் பெண்ணை வெளிவரச் செய்துள்ளார். அவ்வாறே அப்பூதியடிகளின் இல்லத்தில் திருநாவுக்கரசருக்கு விருந்து வைத்து உபசரிக்க விரும்பிய அடிகளார் வாழை இலை எடுத்து வருமாறு மூத்ததிருநாவுக்கரசுவிடம் கூற அவர் வாழை இலை அறுக்கும்போது பாம்பு தீண்டியதால் இலையைக் கொடுத்தவன் இறந்தான். அதுகண்டு பதறிய அப்பூதியடிகளும் மனையாளும் அப்பர் சுவாமிகள் மரண வீட்டில் சாப்பிட மாட்டாரே? என்று பயந்து இறந்தவரை மறைத்து வைத்தனர். இதனை உணர்ந்த "நாவரசு" இறந்தவரின் உடலைத் தருவித்துப் பதிகம் பாடி உயிர்பெறச் செய்து யாவரும் அமர்ந்து விருந்துண்டு மகிழ்ந்தனர். எனவே இவர்களிருவரும் ஏதோ ஒரு பொருளை வைத்தே உயிர்பெற வைக்கிறார்கள்.

ஆனால் தடையம் எதுவும் இல்லாமல் சிறுவனை இழுத்துச் சென்று விழுங்கிய முதலை தானும் இல்லாது இரத்தமும் சதையுமாகிப் போன ஊனை வைத்துப் பெரிய அற்புதம் நிகழ்த்தியுள்ளார். அது மட்டுமன்றி தாம் சூளுரைத்த பிரகாரம் பதினொரு வயதான பாலகனை நீராட்டி அழைத்துச் சென்று அமங்கல ஒலி எழுப்பிய வீட்டில் சேர்ப்பித்து அவரே முன் நின்று பூநூல் சடங்கு நடாத்தி உபதேசம் செய்து அமங்கல ஒலிகேட்ட வீட்டிலும் மங்கல ஒலி எழச் செய்தார்.

சுந்தரமூர்த்தி சுவாமிகளின் செந்தமிழ்ப் பாடல்களால் சிவனாரை மகிழ்வித்து அஞ்சைக்களம் சென்று செந்தமிழ்ப் பாமாலை பாடிநிற்கக் கைலையங்கிரியான் வெள்ளை யானை அனுப்பி வைக்க அதில் அமர்ந்து "சுத்தமாம் சோதி நாளில் சுந்தரர் கைலை சேர்ந்தார்". இதுகண்ட சேரமான் பெருமான் நாயனார் தனது பரிமீது ஏறி மந்திர உச்சாடனம் செய்து சுந்தரருடன் சேர்ந்து கைலையை அடைந்தார். அங்கு ஔவைப்பாட்டி இருக்கக்கண்டு அதிசயமுற்றனர். இருவரது குருபூசைத்தினம் ஆடிமாதத்துச் சுவாதி நாளாகும். இது சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையால் வெகு விமர்சையாகக் கொண்டாடப் பெற்று வரப்படுகிறது.

"வாழி திருநாவலூர் வன்றொண்டர் பதம் போற்றி"

*நூலகம் ஒரு தனி உலகம். அதன் உள்ளே சென்றுவந்தால் அறிஞன் ஆகலாம்.*

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு ஆச்சிரமத்தில் இடம்பெறும் விசேட நிகழ்வுகள்

**02.09.2016 வெள்ளிக்கிழமை 2ந் திருவிழா முற்பகல் 10.00 மணியளவில்**

விடயம் :- "பஜனை"

வழங்குபவர்கள் :- வடபிராந்திய சாயி சமித்தி நிலைய அன்பர்கள்

**03.09.2016 சனிக்கிழமை 3ம் திருவிழா முற்பகல் 10.00 மணியளவில்**

சொற்பொழிவு :- "பாரும் பணியே பணி"

வழங்குபவர் :- சைவப்புலவர் கந்த சத்தியதாசன் அவர்கள்

**04.09.2016 ஞாயிற்றுக்கிழமை 4ம் திருவிழா முற்பகல் 10.00 மணியளவில்**

சொற்பொழிவு :- "இந்துமதம் காட்டும் ஆன்மீகம்"

வழங்குபவர் :- காரை எம்.பி. அருளானந்தன் அவர்கள்

(ஆசிரியர். ஸ்ரான்லிக் கல்லூரி)

**05.09.2016 திங்கட்கிழமை 5ம் திருவிழா முற்பகல் 10.00 மணியளவில்**

சொற்பொழிவு :- "முருகன் திரு அவதாரம்"

வழங்குபவர் :- சிவஸ்ரீ அமிர்த ஸ்ரீகாந்த குருக்கள் அவர்கள்

(ஸ்ரீ வித்யாபீடம். கிளிநொச்சி)

**06.09.2016 செவ்வாய்க்கிழமை 6ம் திருவிழா முற்பகல் 10.00 மணியளவில்**

சொற்பொழிவு :- "தீவிரதரபக்தி"

வழங்குபவர் :- சிவத்திரு வ. குமாரசாமி ஐயர் அவர்கள்

(இளை. நூலகர்)

**07.09.2016 புதன்கிழமை 7ம் திருவிழா முற்பகல் 10.00 மணியளவில்**

சொற்பொழிவு :- "நவையறு காட்சி"

வழங்குபவர் :- திரு ச. விநாயகமூர்த்தி அவர்கள்

(இளை. சிரேஷ்ட போதனாசிரியர். யாழ். பல்கலைக்கழகம்)

*எந்த வேலையானாலும் அதனுடன் ஒன்றிச் செய்தால் மட்டுமே பயன் விளையும்.*

**08.09.2016 வியாழக்கிழமை 8ந் திருவிழா முற்பகல் 10.00 மணியளவில்**

சொற்பொழிவு :- "விரத மகிமை"

வழங்குபவர் :- சைவப்புலவர் க. நித்தியதீதரன் அவர்கள்

**09.09.2016 வெள்ளிக்கிழமை 9ம் திருவிழா முற்பகல் 10.00 மணியளவில்**

சொற்பொழிவு :- "தமிழ் மந்திரம்"

வழங்குபவர் :- சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம் அவர்கள்

**10.09.2016 சனிக்கிழமை 10ந் திருவிழா முற்பகல் 10.00 மணியளவில்**

சொற்பொழிவு :- "அரும்பெறல் மரபின் பெரும் பெயர் முருக"

வழங்குபவர் :- திரு ச. லலீசன் அவர்கள்

(பிரதி அதிபர். கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை)

**11.09.2016 ஞாயிற்றுக்கிழமை 11ந் திருவிழா முற்பகல் 10.00 மணியளவில்**

சொற்பொழிவு :- "உள்ளம் பெருங் கோயில்"

வழங்குபவர் :- திரு ஆ. சிவநாதன் அவர்கள்

(அதிபர். புற்றளை மகா வித்தியாலயம்)

**12.09.2016 திங்கட்கிழமை 12ந் திருவிழா முற்பகல் 10.00 மணியளவில்**

சொற்பொழிவு :- "அழியா எழுத்து"

வழங்குபவர் :- திரு க. கைலைநாதன் அவர்கள்

(ஆசிரியர். அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம்)

**13.09.2016 செவ்வாய்க்கிழமை 13ந் திருவிழா முற்பகல் 10.00 மணியளவில்**

சொற்பொழிவு :- "அருளாளர்கள்"

வழங்குபவர் :- செஞ்சொற் செல்வன் இரா. செல்வவடிவேல் அவர்கள்

**14.09.2016 புதன்கிழமை சப்பறம்**

**15.09.2016 வியாழக்கிழமை தேர்**

**16.09.2016 வெள்ளிக்கிழமை தீர்த்தம்**

ஒரு நல்ல புத்தகம் காலமென்ற கடலில் கலங்கரை விளக்கம்.

# கிருஷ்ண பகவானும் அக்கினி பகவானும்

## (காண்டாவனம்)

– திரு ஆர்.வீ. கந்தசுவாமி அவர்கள் –

ஒவ்வோராண்டும் அக்கினி நாள் வருவது இயல்பாகும். இவ்வருடம் சித்திரை 21ந் திகதி (04.05.2016) தொடக்கம் வைகாசி மாதம் 15ந் திகதி (28.05.2016) வரை எமது மக்கள் அக்கினி நாள் என்றும் காண்டாவனம் எனக்கூறி சுபகாரியங்கள் செய்வதை தவிர்த்துக் கொள்வார்கள். இதற்கு ஒரு புராணக்கதை உள்ளது.

பசி... பசி... பசி... என்ன பொருளைச் சாப்பிட்டாலும் தீராப் பசி. எதை உண்டும் அடங்காப் பசி. எவ்வளவு சாப்பிட்டும் குறையாப்பசி. அப்பிடி ஒரு பசியினால் துடித்துக்கொண்டு இருந்தவர் வேறு யாரும் இல்லை. என்ன கிடைத்தாலும் அதை எரித்து விழுங்கிக்கொள்ளும் அக்கினி பகவான்தான்.

ஒரு காலத்திலே சுவேதசிங்கற என்னும் ஓர் அரசன் பன்னிரண்டு வருடங்கள் தொடர்ந்து பெரிய ஓர் யாகம் நடத்தினான். இந்த யாகத்தில் இடப்பட்ட நெய்யைத் தொடர்ந்து சாப்பிட்டதால் அக்கினி பகவானுக்கு வயிற்றிலே பெரும் உபாதை ஏற்பட்டது. அதன் காரணமாக அவருக்கு ஏற்பட்ட வயிற்று நோய்க்கு மருந்தாக காண்டாவனத்தைச் சாப்பிட்டால் மாறிவிடும் எனப் பிரமதேவன் கூறினார்.

தன்னுடைய கோரப்பசியை அடக்க வேண்டுமாகில் காண்டாவனம் எனும் பெரிய காட்டை விழுங்கினால்த்தான் தீரும் என அக்கினி பகவானுக்குத் தெரிந்தும் அது எவ்விடம் இருக்கின்றது என்பது தெரியவில்லை. அதனால் அந்தக் காட்டைத்தேடி கடைசியில் யமுனை ஆற்றுக்குப் பக்கத்தில் இருப்பதைக் கண்டு சந்தோஷப்பட்டார். தன்னுடைய பசிநோய் அடங்கப் போதுமான மருந்து (சாப்பாடு) அந்த வனம்தான் என அக்கினி பகவானுக்குத் தோன்றிற்று.

இதைக் கண்ணுற்ற இந்திரன் அந்தக் காட்டை அக்கினி பகவான் சாப்பிடவிடாமல் பெருமழை பெய்வித்துத் தடுத்தான். பலமுறை முயற்சி செய்தும் அக்கினி பகவானுக்குத் தோல்விதான் ஏற்பட்டது. கடைசியாக அவருக்கு ஒரு யோசனை தோன்றிற்று. அதன்படி அவர் ஒரு வயதான கிழவர் போன்று உருவம் எடுத்தார். யமுனை ஆற்றிலே தினமும் கிருஷ்ணரும் அர்ச்சுனனும் நீராட வருவது வழக்கம். அவர்களைச் சந்தித்தார் அக்கினி தேவன். தனக்கு அதிகம் பசியாக இருப்பதால் உணவு தரும்படி வேண்டினார்.

கிருஷ்ண பரமாத்மா வந்திருப்பவர் யார் எனப் புரிந்துகொண்டார். ஆனாலும் தானம் கேட்டு வந்தவர்க்கு இல்லை என்று சொல்லக்கூடாது என்பதால் அக்கினியே நான் உன்னைப் புரிந்துகொண்டேன். உன்னுடைய பசி அடங்கும்படி உணவு கிடைக்க வழி செய்கின்றேன் என வாக்குக் கொடுத்தார் வாசுதேவன்.

சுய உருவிற்கு மாறினார் அக்கினி. காண்டாவனம்தான் தன்னுடைய பசி நோய்க்கு உரியது எனக்கூறி அத்தோடு இந்திரன் மழையைப் பெய்வித்து தான் சாப்பிட முடியாமல் போன நிகழ்வையும் கூறினான். "பெருமழை பெய்தாலும் உள்ளே கொஞ்சமும் மழை நெருங்கவிடாமல் பார்த்துக் கொள்வேன், ஆனால் இருபத்தொரு நாட்கள் மட்டும்தான்

உனக்கு அவகாசம். அதற்குள் உன் பசியைத் தீர்த்துக்கொள் எனக் கூறினார் பரந்தாமன். அக்கினி பகவானுக்கு வாக்குக் கொடுத்துவிட்டு பக்கத்தில் இருந்த பார்த்தனை அர்த்தபுஷ்டியோடு நோக்கினார் பரந்தாமன். பார்த்தனுக்கு அதன் அர்த்தம் புரிந்தது. உடனே தன்னுடைய வில்லை வளைத்து சரசர என அம்புகளை வானில் ஏவினார்.

ஆயிரம் ஆயிரம் அம்புகள் அடவிக்குமேலே ஆகாயத்திலே இணைந்து சரக்கூட்டமாக அதாவது அம்புகளிலே கூரைமாதிரி அமைந்தது. சந்தோஷமாகத் தனது ஏழு நாக்குகளையும் நீட்டி காண்டாவனத்திற்குள்ளே புகுந்து விழுங்க ஆரம்பித்தார் அக்கினி.

அதைத் தடுக்க மிகவும் அதிகமாக மழை பெய்வித்தான் இந்திரன். ஆனால் அவனுடைய ஆற்றல் பலிக்கவில்லை. ஒரே ஒரு மழைத்துளிகூட அக்கினிமேல் படாதபடி அர்ச்சுனனுடைய அம்புக் கூரை தடுத்துவிட்டது.

முதல் ஏழு நாட்கள் அக்கினி பகவான் மெதுவாக ஆரம்பித்து அடவியை விழுங்கினார். அப்போது வெப்பம் மெதுவாகப் பரவியது. அடுத்த ஏழு நாட்கள் வேகமாக வளர்ந்து காட்டை உண்டார். அந்நாட்களில் வெப்பம் ரொம்பக் கடுமையாக இருந்தது. கடைசி ஏழு நாட்களும் வேகம் குறைந்து வெப்பமும் படிப்படியாகக் குறைந்தது.

அக்கினி பகவான் காண்டாவனத்தை அழித்து விழுங்கி தன் பசியைத் தீர்த்த இருபத்தொரு நாட்களும்தான் அக்கினி நட்சத்திரத் தினமாகச் சொல்லப்படுகின்றது.

இந்த இருபத்தொரு நாட்களையும் மூன்று பிரிவாக ஏழு ஏழு ஏழு நாட்களாகப் பிரித்து வைத்திருக்கிறதும், முதல் ஏழு நாட்களும் படிப்படியாகக் கூடி நடு ஏழு நாட்களும் அதிகரித்து கடைசி வாரத்தில் படிப்படியாக குறைந்து வருவதும் நாங்கள் அனுபவபூர்வமாகத் தெரிந்தவைகள்தானே!.

இந்தப் புராணக் கதை உணர்த்துவது ஏதுவாயிருப்பினும், நடைமுறையில் இயற்கையின் நாடகத்தை நாம் உணர்ந்துகொள்ள முடிகிறது. ஏதோவொரு உண்மை பொதிந்து கிடக்கும் புராணச் செய்திகள் நம்மை வாழ்வியலுக்கு வழிகாட்டுகின்றது. காண்டாவனம் பற்றிய கதையும் அத்தகையதேயாகும்.

---

## ஸ்ரீமத் சபாரத்தினம் சுவாமிகள்

## தொண்டர் சபையின்

## ஆன்மீகப் பெருவிழா

**திருக்கேதீஸ்வரம் ஸ்ரீ சபாரத்தினம் சுவாமிகளின் நினைவு மண்டபத்தில் நடைபெற்ற ஆன்மீகப் பெருவிழா S.T. தியாகராஜா அவர்களது தலைமையில் ஆரம்பமாகி பலவித சிறப்பு நிகழ்வுகளோடு ஸ்ரீ சபாரத்தினம் சுவாமிகளது நினைவு மண்டபம் அமைப்பதில் முன்நின்றுழைத்த தம்பு துரைராசா அவர்களது வாழ்க்கைச் சுவடு நூல் வெளியிடப்பட்டது.**

**இவ் அரிய நூலை பெற்றுக்கொள்ள விரும்பும் அன்பர்கள் ரூபா 70 கொண்ட தபால் முத்திரையோடு கூடிய தத்தமது முகவரியை அனுப்பினால் உடன் அனுப்பப்படும்.**

**த. துரைராஜா**
**இல. 31A, ஜானகிலேன்,**
**கொழும்பு-4**


மற்றவர்களை ஒதுக்கிவிட்டு எவரும் தன்னை உயர்த்திப்பேச முடியாது.

# மலேசியப் பயணத்தின் முன்னோடி:

(தொடர்ச்சி...

– திரு செ. மோகனதாஸ் சுவாமிகள் –

காலப்போக்கில் எனது மலேசியப் பயணத்தைப் பார்ப்போம் என்றிருந்த என்னை மலேசியாவுக்கு அழைத்த திரு க. செல்வராஜா விட்டபாடில்லை. எப்போது வருகை தரப்போகின்றீர்கள். உங்கள் சம்பந்தப்பட்ட விடயம் அனைத்தும் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. கூடியவரை வரப் பாருங்கள் என்ற அன்புக் கோரிக்கை. அதனை உதாசீனப்படுத்த முடிய வில்லை. சரி போவோம் எனும் சிந்தனை என் மனதில் உதயமாயிற்று. ஆனாலும் இப் பயணத்தில் நான் மட்டுமல்ல திரு த. கணேசமூர்த்தியின் பங்களிப்பும் மிக அவசியம். ஏனெனில் கோரிக்கையை விடுத்திருப்பவர் கணேசமூர்த்தியின் உறவினர். அவரிடம்தான் என்னை எப்படியாவது அழைத்து வரும்படி கேட்டிருந்தார். அவரும் இக்காரியத்தில் முனைப்புடன் செயலாற்ற ஆரம்பித்தார்.



திரு த. கணேசமூர்த்தி இலங்கை வங்கியில் ஒரு பொறுப்புவாய்ந்த அதிகாரியாக கடமை ஆற்றுவதால் அவரது விடுமுறைக்குரிய செயற்பாட்டினை ஆரம்பித்திருந்தார். அத்துடன் எனது கடவுச்சீட்டும் புதுப்பிக்க வேண்டிய தேவையும் இருந்தது. ஆனாலும் என்னால்

*குற்றவாளி சட்டத்திற்கும், நல்ல மனிதன் மனச்சாட்சிக்கும் அஞ்சுகின்றான்.*

கடவுச்சீட்டு அலுவலகத்திற்கு நேரில் சென்று விண்ணப்பிக்க காலநேரம் இல்லாத வகையில் திரு த. கணேசமூர்த்தி அந்த விடயத்தைத் தான் செய்வதாகக் கூறி அதற்குரிய விண்ணப்பப் படிவங்களைப்பெற்று பூர்த்தி செய்து தான் கொழும்பு சென்று கடவுச்சீட்டு வழங்கும் அலுவலகத்தில் கையளித்து புதுப்பிக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டார். ஒரு வார கால அவ காசத்தில் எனது கடவுச்சீட்டு என்கைக்கு வந்து சேர்ந்தது. அவ்விடயம் ஒருவித தடங்கலுமின்றி நிறைவேறியது. இதுவும் எனது பிரயாணத்தை இழுத்தடிப்புச் செய்வதற்கு ஒரு காரணமாக இருந்தது.

அடுத்ததாக மலேசியா விசா பெறுவதற்குரிய ஒழுங்கினை திரு த. கணேசமூர்த்தி ஆரம்பித்திருந்தார். ஆனாலும் அவரிடம் என்னால் இவ்விடயம் சம்பந்தமாக ஒரு இடமும் வரமுடியாது. நீதான் எல்லா விடயத்தையும் பார்க்க வேண்டும். முருகன் நினைத்தால் எனது பிரயாணத்திற்கு வழி சமைக்கப்படும். அவனது அனுமதிதான் தேவை. அவ்வகையில் இக்காரியத்திற்கு நீயே பொறுப்பு என்னால் ஒரு காரியாலயத்துக்கும் வரமுடியாது. அது எல்லாம் சரியாக நடக்கும் என்று கூறி விசா பெறுவதற்குரிய விண்ணப்பப் படிவங்களை பூர்த்தி செய்து அப்படிவங்களை தனது விசா பெறுவதற்குரிய படிவங்களோடு இணைத்து கொழும்பு சென்று நேரில் கையளிக்கும் செயற்பாட்டில் கணேசமூர்த்தி ஈடுபட்டிருந்தார்.

இவ்விடயம் சம்பந்தமாக பலருடன் விவாதித்தபொழுது மலேசியா விசா பெறுவது மிகவும் கடினம். வங்கி இருப்பு காட்டவேண்டும். நேரில் அவ்வலுவலகத்திற்குப் போகவேண்டும். அதோடு முதன்முறையாக மலேசியாவுக்கு போகின்றபடியால் கட்டாயம் போயே தீரவேண்டும் என்றெல்லாம் கூறினார்கள். எனக்கும் ஒருவித குழப்பம். வங்கி இருப்பைக் காட்டுவதற்கு வங்கியில் நிலையான இருப்பு இருந்தால்த்தானே காட்டுவதற்கு. ஒவ்வொரு மாத முடிவில் வங்கியில் இருந்து வரும் இரண்டு மூன்று மாதத்திற்குரிய கணக்கு அறிக்கையையும் என்னால் நேரில் சமூகமளிக்கமுடியாத சந்நிதியான் ஆச்சிரம கடிதத் தலைப்புடன் கூடிய கடிதத்தையும் கணேசமூர்த்தியிடம் கையளித்து இனி எல்லாம் சந்நிதியான் பார்த்துக் கொள்வான். விசா பெறும் விடயம் எல்லாம் சரியாக நடக்கும் என்று கூறியதுடன் இவ்விடயம் பற்றிய சிந்தனைகளை அறவே விடுத்து ஆச்சிரமப் பணிகளில் ஈடுபட்டேன்.


திரு த. கணேசமூர்த்தியும் தனது ஆவணங்களோடு எனது ஆவணங்களையும் விசா பெறும் மலேசியத் தூதரகத்தில் கையளித்தபோது அவரது விண்ணப்பம் சரி. ஆனால் எனது விண்ணப்பத்தோடு சேர்ந்த கடிதத்தையும் பார்த்து வங்கி கணக்கறிக்கையும் பார்த்துவிட்டு, அறிக்கையில் (ஸ்ராண்டிங் ஓடர்) நிலையான மாதக் கொடுப்பனவுகள் அதிகமாக இடம்பெற்றுள்ளது. என்ன விடயம் என்று பொறுப்பாக இருந்த அதிகாரி வினாவிய போது கணேசமூர்த்தி அவர்கள் அவை எல்லாம் இடர்பட்ட குடும்பம் சார்ந்த பல்கலைக்கழக மாணவர்களுக்குரிய மாதாந்த உதவிக் கொடுப்பனவு என்றும் ஆச்சிரமத்தினால் மேற்கொள் ளப்படும் சகல சமய சமூகப் பணிகளின் தன்மை பற்றியும் எடுத்துரைத்ததோடு தானும் ஆச்சிரமச் செயற்பாட்டில் ஈடுபட்டு வருவதையும் கூறியபொழுது எனது விசாவுக்குரிய அனு மதிப்பத்திரங்களையும் பெற்று தாம் விசா தருவதற்குரிய ஒழுங்கினை மேற்கொள்ளுகின்றோம் என்று கூறியதன் பிரகாரம் எமது விசா பெறும் விடயம் மிகவும் சுமூகமாக நடைபெற்றது. உண்மையில் இவ்விடயம் நான் நேரில் போகாமல் செய்ய முடியாது என்று பலபேர் என் னிடம் கூறியபோதும் என்னோடு கூட இருக்கும் சந்நிதி வேலன் சரியாகச் செய்து முடிப்பான்

*மிக அதிகமானவர்களுக்கு மகிழ்ச்சியளிப்பவன்தான் மிகவும் மகிழ்ச்சியான மனிதன்.*

எனும் நம்பிக்கையின் அடிப்படையில் இக்காரியம் இனிதாக முடிந்தது. இவ்விடயம் சம்பந்தமாக விசா அலுவலகத்துக்குச் சென்ற கணேசமூர்த்திகூட இவ்விடயம் ஒருமுறையோடு முடியும் என்று கனவிலும் நினைக்கவில்லை என்று கூறினார்.

கடவுச்சீட்டு, விசா முதலியவை கிடைத்ததும் போவதற்குரிய ஒழுங்குகளை கணேச மூர்த்தி அவர்கள் மேற்கொண்டிருந்தார். நான் அவ்விடயம் ஒன்றிலும் ஈடுபடவில்லை. அவர் தனக்களிக்கப்பட்ட விடுமுறைக்கு அமைவாக விமானப் பயணத்திற்குரிய அனுமதிச் சீட்டையும் பெற்ற பின்னர்தான் எனக்கு நாம் புறப்பட வேண்டிய திகதியை அறிவித்து விமானப் பயணத்துக்காகிய அனுமதிப் பத்திரத்தையும் கையளித்திருந்தார். அப்போதுதான் பயணப்பட வேண்டிய திகதியை நோக்கியபொழுது எனது மனதில் சஞ்சலத்தை உருவாக் கியது. காரணம் 21.04.2016 வியாழக்கிழமை ஆச்சிரமத்தில் இருந்து பயணப்பட்டு 22.04.2016 வெள்ளிக்கிழமை காலை எனது பயணம் அமைந்திருந்தது. உண்மையில் இவ்வகையான செயற்பாடுகளிற்கு ஆச்சிரமத்திலிருந்து பயணப்படும்போது கூடியவரை வெள்ளிக்கிழமை நிகழ்வுகளை முடித்துத்தான் வெளியிடங்களுக்குச் செல்வது வழமை. ஆனால் இப்பயணம் சம்பந்தமாக நான் ஒன்றிலும் ஈடுபடாத வகையிலும் திரு கணேசமூர்த்தி சகல விடயங்களிலும் ஈடுபட்டதன் பிரகாரம் என்னால் ஒன்றும் செய்ய முடியாமல் போய்விட்டது. அத்துடன் திரு த. கணேசமூர்த்தியும் மலேசியா அன்பர் திரு க. செல்வராசாவும் வெள்ளி காலை மலேசியா போய் சேர்ந்ததும் மதிய உணவை முடித்து நாம் பார்க்கும் இடங்களுக்குப் போகலாம் எனும் சிந்தனையோடு செயலாற்றியதாகவும் தெரிவித்திருந்தார்கள். ஆனாலும் சந்நிதி வேலவன் தனக்குரிய வெள்ளி நிகழ்வுகளைத் தவிர்த்து பிறிதோரிடத்தில் கால் வைப்பதை விரும்பவில்லை. அதன் காரணமாக அவன் அருளாடல் எம்மீது பாய்ந்தது. அவ் ஆடல்...

(தொடரும்...



# புரட்டாதிமாத வாராந்த நிகழ்வுகள்

02.09.2016 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்
விடயம் :- "பஜனை" (உற்சவகாலம்)
வழங்குபவர்கள் :- வடபிராந்திய சாயி சமித்தி அன்பர்கள்

---

09.09.2016 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்
சொற்பொழிவு :- "தமிழ் மந்திரம்"
வழங்குபவர் :- சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம் அவர்கள்

---

16.09.2016 வெள்ளிக்கிழமை முற்பகல் 8.00 மணியளவில்
தீர்த்த உற்சவம்

---

23.09.2016 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்
சொற்பொழிவு :- "கந்தபுராணம்" (தொடர்)
வழங்குபவர் :- திரு அ. குமாரவேல் அவர்கள்
[சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ்/ கல்லூரி வட்டுக்கோட்டை]

---

30.09.2016 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்
விசேட சொற்பொழிவு

---

02.10.2016 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்
225ஆவது ஞானச்சுடர் மலர் வெளியீடும்
கௌரவிப்பு நிகழ்வுகளும்.

பதிவு இல. *QD/160/NEWS/2016*

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்

